


கல்கி
KALKI
3.12.1967
40காசு

தலைவலியா?

ஸாரிடான்

'ரோஷ்'
சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான் ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு $\frac{1}{4}$ லிருந்து $\frac{1}{2}$ வில்லை வரை போதும்.



தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான நாட்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு **ஸாரிடான்** போதும்!

'ரோஷ்' தயாரிப்பு:

சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: **வால்டாஸ் லிமிடெட்**

VT. 5626.(A)



அடுத்த இதழ்

ராஜாஜி மலராக

வெளி வருகிறது.


கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, கார்த்திகை 17 - டிசம்பர் 3

இரண்டு அரசுகள் எடுபட்டன — 5
ராஜாஜியின் கருத்துக்கள் — 7
பெர்க்லி — கல்கி இலக்கியப் பரிசு... — 12
பைஜ்நாத் — 18
யாரோ இவர் யாரோ? — 25
மணக்கோலம் — 33
கல்லுக்குள் ஈரம் — 41
அபகரணம் — 46
பல்கலைப் பக்கம் — 54
சீட்டுக்குக் கிழித்த சீட்டு — 58
உதிர்ந்த இதழ்கள் — 64
பாரி — 69
நாலிருதின் குட்டிக் கதைகள் — 78
வட்டமேஜை — 80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பஞ்சாப்
ஹரியானா
மே. வங்கம்
வெடி வைப்பு
வைபவம்
சீக்கிரமாக
இன்னும் சில
கொடிகள்
கொண்டுவா!
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 18

இரண்டு அரசுகள் எடுபட்டன!

மேற்கு வங்கம், ஹரியானு ஆகிய இரண்டு ராஜ்யங்களில் காங்கிரஸல்லாத மந்திரி சபைகள் கவிழ்ந்து விட்டன.

மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட்களின் பிடியில் சிக்கிய கூட்டணி அரசாங்கம் வெளியேற்றப்பட்டது குறித்து ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட எவருமே வருந்துவதற்கில்லை. அராஜகமே தங்கள் அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட கம்யூனிஸ்ட்கள் அரசுப் பொறுப்பு ஏற்று, தமது ராஜ்யத்துக்குள்ளேயே நாச வேலைகளுக்கு ஆக்கம் அளித்துவரும் அக்கிரமத்தை யாருமே பொறுத்துக் கொள்வதற்கில்லை. கம்யூனிஸ்ட்களுடன் கூட்டுப் பொறுப்பு வகிக்க இயலாமல் சில வாரங்களுக்கு முன்பு தாமாகவே பதவி துறக்க முன் வந்த ஸ்ரீ அஜாய் முகர்ஜி அதன்பின் அம்முடிவை மாற்றிக் கொண்டதும், தற்போது உடனடியாகச் சட்டசபையைக் கூட்டிக் கட்சிகளின் பலாபலத்தைக் கணிக்க ஒப்பாததும் துரதிருஷ்டவசமாகும்.

'அஜாய் முகர்ஜியின் சர்க்காரை கவர்னர் கலைத்ததில் தவறில்லை; ஆனால் கட்சிகளின் பலம் திட்டவட்டமாகத் தெரியாதபோது ஸ்ரீ பி. ஸி. கோஷ் தலைமையில் புது அரசாங்கம் அமைத்ததுதான் தவறு' என்பது சிலருடைய வாதம். ராஷ்டிரபதி ஆட்சிக்கு கவர்னர் வழி செய்திருந்தால், அப்போதும் ஜனநாயகம் குழி பறிக்கப்படுகிறது என்ற கூக்குரல் எழும்பத்தான் செய்யும். சிக்கலான ஒரு சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒரு முடிவை எடுத்தாக வேண்டும் என்று கவர்னர் கருதிவிட்டார். எப்படியும் இவ்விதழ் வெளியாகு முன்பே, நவம்பர் 29-ந் தேதி மேற்கு வங்கச் சட்டசபை கூட்டப்பெற்றுப் புதிய மந்திரி சபையின் பலம் — அல்லது பலவீனம் — தெளிவாகியிருக்கும். இவ்வளவு விரைவில் சட்டசபை கூடித் தனது கருத்தைத் தெரிவிக்க ஸ்ரீ பி. ஸி. கோஷ் பதவி ஏற்றவுடனேயே வழி செய்திருக்கும்போது, அங்கு கிளர்ச்சிகளைத் தூண்டி விடவோ, ஜனநாயக மரபு சிதைக்கப்பட்டுவிட்டது என்று ஓலம் எழுப்பவோ அவசியமேயில்லை. ஆயினும் துரதிருஷ்டவசமாக வங்கத்தில் பல பகுதிகளில் கொந்தளிப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ராணுவத்தை உஷார்ப்படுத்தி ஒரு பிரதேசத்தின் அமைதியைக் காக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது பற்றி வருந்தாதார் இருக்க முடியாது.

எல்லை முக்கியத்துவம் வாய்ந்த வங்கத்தில் கம்யூனிஸ்ட்கள் இத்தனை நாட்கள் தலைதெறிக்க ஆடும்படி விட்டிருந்ததுதான் அனர்த்தங்களுக்கு அடிப்படை. சீனப்படையெடுப்பு, நக்ஸல்பாரி உற்பாதங்கள் ஆகியவற்றின் போது கம்யூனிஸ்ட்களின் வஞ்சகம் வெளிப்படையாகத் தெரிந்தும், அக்கட்சிக்குத் தடைவிதிக்காமலிருந்தது பெரும் தவறு. அப்படிச் செய்திருந்தால் இன்று நாட்டின் அமைதிக்கும், ராஜ்யத்தின் நல்லாட்சிக்கும் இவ்வளவு குந்தகம் ஏற்பட்டேயிராது. நடந்தது நடந்து விட்டது. இனியேனும் ஜாக்கிரதை வேண்டும். தீர புருஷரான ஸ்ரீ கோஷ் மனத்தளர்ச்சி யடையாமல் வங்கத்தில் ஜனநாயகம் நிலைப்படப் பாடுபடுவார் என நம்புகிறோம்.


ஹரியானுவில் சட்டசபை அங்கத்தினர்கள் பலர் பிரதி தினமும் கட்சி மாறியது அவமானகரமானதாகும். ஆனால் சட்டப்படி இவ்விஷயமாக எடுக்கக் கூடிய நடவடிக்கை எதுவும் இல்லை. எந்தக் கட்சியின் அல்லது கூட்டணியின் பெரும்பான்மையிலும் ராஜ்ய கவர்னருக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் ராஷ்டிரபதி ஆட்சிக்கு வழி செய்து விட்டார். தற்போதைக்கு அங்கு ஜனநாயகத்தை விட்டுக் கொடுக்கும்படி இருப்பினும், விரைவிலேயே பொதுத் தேர்தல் நடத்தி, மக்களாட்சி ஏற்படச் செய்ய வேண்டும். காங்கிரஸல்லாத அரசாங்கம் உறுதியாக நிற்க முடியாது என்று இப்போது காங்கிரஸார் மயக்குப் பிர

சாரம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. இந்த மாயைக்கு ஆளாகாத விவேகத்தை மக்கள் பெறுவதற்கு ஆண்டவனே அருள வேண்டும். எதிர்க் கட்சிகள் தத்தம் தனி மூர்த்தியைக் காப்பாற்றிக் கொள்வதைவிட, ராஜ்யத்தின் உண்மையான நலனைக் கருத்தில் கொண்டு ஒன்றுபட வேண்டிய தருணம் இது. வேட்பாளர்களைத் தேர்வு செய்யும்போது, சந்தர்ப்பம் வாதம் செய்து கட்சி மாறுமல் உறுதியான கொள்கை ஈடுபாடு கொண்டவர்களையே பொறுக்கி எடுக்க வேண்டும்.

பஞ்சாபில் நீதிபதியாக இருந்த குர்நாம் சிங் அவர்களின் மந்திரி சபை பஞ்சாபில் ராஜிநாமாக் கொடுக்க நேர்ந்ததைக் கண்டு பலரும் வருந்தினர். இடுமென ஒரு கோஷ்டியுடன் ஸ்ரீ கில் பிரிந்து போனதாலேயே மந்திரி சபை பதவியை விட வேண்டியதாயிற்று. பிரிந்து போனதற்கு ஸ்ரீ கில் காட்டிய காரணம் எதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அதெப்படியாயினும் எதிர்க் கட்சிக் காரர்கள் கேட்கும் முன்னரே ஸ்ரீ குர்நாம் சிங் தாமாக ராஜிநாமாச் செய்தது அவரது பெருந்தன்மையைக் காட்டியது. எனினும் கவர்னர், கில்லைப் புது மந்திரி சபை அமைக்க அழைக்காமல் குர்நாம் சிங்குக்கே இன்னொரு வாய்ப்புத் தந்திருப்பதாக இவ்விதம் அச் சேறும் தருணத்தில் தெரிகிறது. கில்லின் ஆதரவாளர்களில் சிலர் மீண்டும் குர்நாம் சிங்குடன் சேர்ந்துவிட்டதால் இந்த நிலவரம் உருவாகியிருப்பதாகத் தெரிகிறது. எக்காலும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற பேராசையற்றவர் குர்நாம் சிங் என்பது தெளிவாகிவிட்டது. அவர் புது மந்திரி சபை அமைத்து, அது ஸ்திரமாக நிற்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

காங்கிரஸ் ஆதரவு இல்லாவிடில் புதிய அரசாங்கங்கள் நிலைபெறு என்பது போன்ற நிலவரம் ஏற்பட்டுள்ளது. பொதுத் தேர்தலில் மக்கள் நாடு முழுவதும் பொதுவாகத் தெரிவித்த தீர்ப்புக்கு இது மாறுனது. ஏதேதோ காரணங்களுக்காகப் பஞ்சாபிலும் ஹரியானுவிலும் கட்சி மாருட்டங்கள் நடந்ததாலும், வங்கத்தில் கம்யூனிஸ்டுகள் தலைவிரித்தாடியதாலும்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதே யன்றி காங்கிரஸிடம் ஏற்பட்டுள்ள புது நம்பிக்கையால்தான் அரசாங்கங்கள் கவிழ்ந்தன என்று சொல்வதற்கு இம்மியும் ஆதாரம் இல்லை.

கூட்டணிகளில் ஐக்கியமில்லாததால்தான் இந்த அரசாங்கங்கள் விழுந்துவிட்டன என்கிறார் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி. காங்கிரஸ் வலுவான ஓர் அமைப்பாக இருப்பதாகவும், எதிர்க்கட்சிகளின் கூட்டில் இந்த கைய கட்டுக்கோப்பில்லை என்றும் மக்களை நம்பச் செய்ய அவர் முயல்கிறார். ஆனால் பல வேறு லட்சியங்களைக் கொண்ட எதிர்க்கட்சிகளின் கூட்டணிகளுக்குள் இருக்கும் பிளவுகளைவிட, காங்கிரஸ் என்ற ஒரே கட்சிக்குள் இருக்கும் பிளவுகள் அதிகம் என்பதை நாடு அறியும். எதிர்க்கட்சிக் கூட்டணிகளில் விரிசல்கள் தோன்றுவதற்கு ஒரு காரணமும் காங்கிரஸ் செய்து வரும் தந்திரங்கள்தான் என்று தேசம் முழுவதுமே சந்தேகம் கொண்டுள்ளது. கண்ணாடி வீட்டில் வசிப்பவர்கள் பிறர் மீது கல் வீசக்கூடாது. இந்தச் சாமானிய உண்மையை மறந்து பேசியிருக்கிறார் பிரதமர். பரஸ்பரம் ஒற்றுமையற்றவர்களும் பதவி என்ற ஒன்றின்மீதே கண்ணுக ஒரு கட்சி என்ற பெயரில் காங்கிரஸாக அமைந்துள்ளனர். எனவே இன்று காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சி அரசாங்கங்கள் எடுபட்டதற்காகப் பெருமைப்பட்டால் அதைப் போன்ற பேதைமை இருக்க முடியாது. காங்கிரஸல்லாத அரசாங்கங்கள் பல இன்னும் உறுதியுடன் இருப்பதைக் கண்டுவரும் மக்கள், காங்கிரஸ் கட்சி ஒன்றினுல்தான் ஸ்திரமான ஆட்சி வழங்க முடியும் என்ற கூற்றை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பது திண்ணம்.



தமிழின் இழப்பு

டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் துர்மரணச் செய்தி கேட்டுத் தமிழகமே ஆழ்ந்த கலக்கமுற்றது. கல்வியும், பண்பும், தோற்றப் பொலிவும், இனிய பேச்சும் வாய்ந்த டாக்டரவர்கள் எதிர்பாரா வண்ணம் நம்மிடமிருந்து மறைந்துவிட்டார்.

நல்ல தமிழறிஞரான டாக்டர் செட்டியாரவர்கள் பல நூல்களை எழுதித் தமிழன்னைக்கு அணிவித்தவர். பேராசிரியராகவும், அண்ணமலை சர்வகலாசாலைத் துணைவேந்தராகவும் சிறப்புப் பணியாற்றியவர். தற்போது மதுரை தியாகராஜர் கல்லூரியின் முதல்வராகப் பதவி வகித்து வந்தார். தமிழரங்குகளிலும், தமிழக மேல் சட்ட சபையிலும் அவரது குரல் பல புதுமைக் கருத்துக்களை ஒலித்து வந்தது. அவரது நூல்கள் தமிழ் மக்களுக்கும் மாணவர் சமுதாயத்துக்கும் ஓர் இலக்கிய விருந்தாக என்றும் நிற்கும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

அன்புக்குரிய மாஸ்டர் தாரா சிங், அமைதி கொள்ளாத ஆன்மாவாகிய தாரா சிங், எந்த ஓரிடத்தில்தான் அமைதி சாத்தியமோ அங்கு சென்று விட்டார். வேறெந்த சீக்கியத் தலைவரையும் விட அச்சமுதாயத்துக்கு அதிகப் பணி புரிந்தவர் மாஸ்டர் தாரா சிங்கே. எந்தச் சூழ்நிலையிலும் அதனுடைய போலித் தனமான புறத் தோற்றத்தைக் காணாமல்,



யதார்த்த நிலையைக் கண்டு நிர்வகிப்பதில் அவருக்கு இருந்த திறன் மகத்தானது. பஞ்சாபி மொழியைப் பஞ்சாபி லிபியில் எழுதுவதா, குருமுகி லிபியில் எழுதுவதா என்பது போன்ற பிரச்னையை அவர் பெரிதாக நினைக்கவில்லை. இந்திய ஜனநாயக அமைப்பில் சீக்கிய சமூகத்துக்குத் திருப்திகரமான ஸ்தானம் கிட்ட வேண்டும் என்பதற்கே அவர் கடினமாக உழைத்தார். அந்த இலட்சியம் இப்போது கைகூடி விட்டது என்றே நம்புகிறேன். அவரது சேவையைச் சீக்கியர்கள் என்றும் நன்றியுடன் நினைவு கொள்வர் என்று நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

சங்கடங்கள் மிகுந்த மேற்கு வங்காளத்துக்கு நான் கவர்னராகப் போனபோது, சுதந்திர இந்தியாவில் அந்த ராஜ்யத்தின் முதன் மந்திரியானவர் டாக்டர் பி. ஸி. கோஷ். டாக்டர் பிதன் ராய் இப்பதவிக்கு வந்ததிலிருந்து பல ஆண்டுகளாக ஸ்ரீ கோஷ் எந்தப் பதவியும் வகிக்காதிருந்தார். சில மாதங்களாகக் கூட்டணி சர்க்காரில் மந்திரியாக இருந்த அவர் இப்போது மீண்டும் வங்காளத்தின் முதன் மந்திரியாகி யிருக்கிறார். அவர் பக்கத்தில் நல் அதிருஷ்டம் இருக்க வேண்டும் என ஆசி கூறுகிறேன். டாக்டர் கோஷின் நேர்மையைப் பற்றி யாரும் சந்தேகிப்பதற்கில்லை. நிர்வாகம் தூய்மையாகவும் சக்தி வாய்ந்த முறையிலும் அமைய வேண்டும் என்பதில் அவருக்குள்ள ஆர்வம் மனப்பூர்வமானது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்தக் குணநலன்கள் மட்டும் இன்றையச் சூழ்நிலையில் போதவில்லை. இப்போது டாக்டர் கோஷின் தலையில் முதன் மந்திரி பதவி என்ற முள் கிரீடத்தை வைப்பதற்கு முன்னதாகக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்திருக்க வேண்டும் என்பது என் கருத்து.

இடது சாரியாயினும் சரி, வலது சாரியாயினும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியால் தாங்கள் அழைத்துச் செல்லப்படுவதற்குத் தொழிற்சங்கங்கள் அநுமதிக்கும் வரையில் கல்கத்தாவிலும் சரி, வேறெங்குமே சரி, அமைதி நிலவ முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி உண்டாக்கும் ஒழுங்கீனங்களுக்குப் பிரதியாக அரசாங்கமும் வன்முறை நடவடிக்கைகள் எடுத்தாலே நிர்வாகம் நடத்த முடியும். பத்திரிகைச் செய்திகளிலிருந்து நான் பார்த்தவரையில் டாக்டர் கோஷ் அவர்கள் தில்லியிலும், வங்கத்திலும் உள்ள காங்கிரஸ் கட்சியின் கைக்குள் இருப்பார் என்று தெரிகிறது. அவர் பதவியில் இருக்க வேண்டுமாயின் காங்கிரஸைச் சார்ந்தேயிருக்க வேண்டியதாகும். பல காரணங்களுக்காக இது எனக்குப் பிடிக்கவில்லை. தாற்காலிகமானதொரு நெருக்கடி நிலவரத்தில் மட்டுமின்றி, மற்றச் சமயங்களிலும் மக்களின் பொருளாதாரத்தின்மீது மேன்மேலும் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் அரசாங்கங்களை நான் ஆதரிக்கவில்லை.

புரட்சி, முன்னேற்றம், கிராந்தி என்பது போன்ற அடைமொழியைத் தாங்கியிருக்கும் எந்தக் கட்சியுமே மக்களின் சொந்த ஊக்கத்தையும் சுதந்திரத்தையும் பறிக்கும் தவறான கொள்கையைப் பின்பற்றுபவையே. அவை ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றும் கூட்டத்துக்கு மேன்மேலும் அதிகாரம் வழங்குவதில் மட்டும் முடியுமேயன்றி, மக்களுக்கு நன்மை உண்டாக்குவது என்ற நோக்கத்தில் தோல்வியே காண வேண்டியதாகும்.

ஃஃஃ

திரு அண்ணாதுரை கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை போட வேண்டியதில்லை எனக் கருதுகிறார். தேர்தல்களில் மும்முனைப் போட்டியால் காங்கிரஸுக்கு வெற்றிவாய்ப்புத் தந்து விடக் கூடாது என்பதால் கம்யூனிஸ்ட்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்குத் திரு அண்ணாதுரை விசுவாசம் காட்டுகிறார். கம்யூனிஸ்டுகளைப்பற்றி என் கருத்தை அவர் எடுத்துக் கொள்வதற்குச் சிறிது காலம் பிடிக்கும்.

ஃஃஃ

முன்னாள் ஹைகோர்ட் நீதிபதியான குருநாம் சிங் அவர்களின் பஞ்சாப் மந்திரி சபை ராஜிநாமாக் கொடுக்க நேர்ந்தது துர்ப்பாக்கியம்! அவரது அறிக்கை ராஜிநாமாவுக்கான நியாயமான காரணங்களைக் கௌரவமாக எடுத்துரைக்கிறது.

கவர்னர்கள் சொந்தக் கருத்தின் மீதே முடிவெடுப்பதாகச் சொல்லிக் கொண்டாலும், அவர்கள் என்ன செய்வது என்று தீர்மானிப்பதற்காகத் தில்லிக்குச் செய்கிற சஞ்சாரங்களே அவர்களது உண்மை நிலவரத்தை அம்பலப்படுத்துகிறது. மத்திய சர்க்காரின் ஏஜன்டுகளாக இருக்கும் கவர்னர்கள் தில்லியையே சார்ந்திருப்பதை ஒருவாறு புரிந்துகொள்ளலாம். ஆனால் அவர்கள் காங்கிரஸ் என்ற கட்சியின் நலன்களோடு இணைவது நேரியல்ல.

* * *

பிரிட்டனின் நாணயமான பவுனின் மதிப்பைக் குறைத்திருப்பதின் பொருள் யாதெனில், இனிமேல் பிரிட்டன் முந்தைய விலைக்கே 14.3 சதவிகிதம் அதிகப் பண்டங்கள் (அல்லது உழைப்பு) தர வேண்டும் என்பதாகும். இருவருக்கிடையே பண்டமாற்றின்போதோ, உழைப்பு பெறப்படும் போதோ இயற்கையாக அமைகிற பேரமே தேசிய அடிப்படையில் விரிவடையும்போது அந்தந்த நாட்டின் நாணயமாகிறது. நாணய மதிப்புக் குறைக்கப்பட்ட நாட்டில் உள்ளவர்கள் தங்கள் பண்டங்களைப் பழைய விலையிலும், தங்கள் உழைப்பைப் பழைய ஊதியத்துக்கும் தொடர்ந்து தந்தால்தான் பவுனின் மதிப்பைக் குறைத்ததால் எதிர்பார்க்கப்படும் நல்விளைவுகள் ஏற்படும். பவுனின் மதிப்புக் குறைந்ததற்கு ஈடாக பிரிட்டனில் விலைகளும், ஊதிய விகிதங்களும் உயருமாயின் புதியதாக நல் விளைவு ஏதும் ஏற்படாது. இதனால்தான் பல துறைகளில் சிக்கனம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஊதிய உயர்வு முதலியவற்றால் பிரிட்டனிலுள்ளவர்கள் தங்களது அடக்க விலையை உயர்த்தாமல், நாணய மதிப்புக் குறைவுக்கு ஏற்றபடி விசுவாசத்துடன் ஒழுகினால் பிரிட்டனிலிருந்து நாம் இறக்குமதி செய்து கொள்ளும் பொருட்களின் விலை மலியும். நமது நிதி மந்திரி ஒன்றுமே நடக்காதது போல் சாந்தம் செய்கிற முறையில் பிரசங்கம் செய்த போதிலும், நாம் பிரிட்டனுக்குச் செய்யும் ஏற்றுமதி பாதிக்கப்படும். '14.3 சதம் தானே பவுனின் மதிப்புக் குறைந்திருக்கிறது? இது அதிகமானதல்லவே! ஆனபடியால் இந்தியாவின் ஏற்றுமதியும் அதிகமாகப் பாதிக்கப்படாது' என்பது அவரது கருத்து. ஆயினும் ஏற்றுமதியின் ஒருசில இனங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் இதன் விளைவு மிகவும் உக்கிரமாகத் தங்களைத் தாக்குவதைக் காண்பார்கள். தேசிய ஒட்டு மொத்தக் கணக்குகளால் அவர்களுக்குப் பயன் இல்லை.

* * *

பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்தவர்கள் முன்பு 21 ரூபாய்க்குப் பெற்றதை இனி 18 ரூபாய்க்குப் பெறலாம் என்பதே பவுன் மதிப்புக் குறைப்பின் பொருள். இதற்கு மாறாக, பிரிட்டனுக்கு நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்பவர்கள் முன்பு 21 ரூபாய் பெற்ற இடத்தில் 18 ரூபாய்தான் பெறுவார்கள்.


காமகோடியின் கருணை மொழி

ஈச்வரத் தியானம்தான் எல்லா அழுக்குகளையும் போக்கும் தீர்த்தம். ஆனால் தியானம் செய்யும் பொருட்டு அந்த ஈச்வரனின் நினைப்பு அழுக்கின் நடுவில் நமக்கு வரவேண்டுமே! அதற்கு என்ன செய்வது? சகல ஜனங்களும் ஈச்வர ஸ்மரணை செய்ய எது வழி என்றால் இத்தனை புஸ்தகங்களும் அல்ல. ஒரு கோபுரத்தைத் தரிசனம் செய்தால்தான் உடனே ஸ்வாமியின் ஞாபகம் வருகிறது. அந்தக் கோபுரம் எப்படி இருந்தால் சாந்த ஸ்வரூபமான பாவம் வரும் என்பதைச் சொல்லவே சிற்ப சாஸ்திரம் இருக்கிறது. அதன்படி கோபுரத்தையும் மண்டபத்தையும் பிராகாரங்களையும் கட்டி வைத்துத் தரிசனம் பண்ணுகிறோம். ஏதோ காரியமாக, எங்கோ ரயிலில் போனாலும்கூட, ஒரு கோபுரத்தைப் பார்த்தால் அந்தச் சமயத்திலாவது ஈச்வர நினைவு வருகிறது. அந்த அளவில் அது லாபம்.



கோபுரத்தைப் பார்த்த பிறகு கோயிலுக்கே தரிசனம் பண்ணப் போனால் லாபம் அதிகமாகிறது. பக்தி அதிகமாகி, கோயிலுக்குள் போய் ஸ்வாமி தரிசனம் செய்கிறோம். பின்பு சாஸ்திர நியமத்தோடு போக வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிறது. இப்படிப் படிப்படியாக நல்ல வழியில் போகிறோம்.


மகான்கள் தங்களுடைய சித்தத்தை அடக்கி ஈச்வரனுடைய சரணாரவிந்தங்களில் வைத்துப் பூஜை செய்து, "நாங்கள் ஆராதிக்கும் இந்த இடத்திலேயே நீ சாந்நித்தியமாக இருந்து பிற்பாடு வருகிற அத்தனை பேருக்கும் - அவர்கள் எத்தனை அபசாரம் பண்ணினாலும், அவற்றையெல்லாம் நிவிருத்தி பண்ணி, அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்திருக்கிறார்கள். இப்படி மகான்கள் பூஜையும் பிரார்த்தனையும் பண்ணின இடங்களே புண்ணிய க்ஷேத்திரங்கள். அப்படிப்பட்ட க்ஷேத்திரங்களில் திருப்பணி செய்து கோயில்கள் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றி வைத்த விளக்கை அணைக்காமல் தூண்டிவிட வேண்டும்.






மேற்கு மாம்பலம் ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயிலில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ முருகப் பெருமானுக்குக் கந்த ஷஷ்டி மகோத்சவம் சிறப்பாக நடைபெற்றது. பால்குட ஊர்வலம் வருகிறது.


ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தார் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட கிரிக்கெட் ஆட்டக் குழுவினருக்குப் 'பேபி பவுடர், பாண்ட் எயிட் டிரஸ்ஸிங்' ஆகியவை அடங்கிய பரிசுப் பெட்டிகளை வழங்கினர்.





விமானம் மூலமாக யூனியன் கார்பைட் கம்பெனியின் தயாரிப்பான பூச்சி மருந்துகள் தெளிக்கும் திட்டத்தைக் கோவை அருகே தொடங்கிவைத்தார் மந்திரி சாதிக் பாட்சா.

மயிலை வித்யா மந்திரில் சிறுவர்களின் கைவண்ணக் காட்சி நடந்தது.





அமெரிக்கக் கால் பந்தாட்டக் குழுவினர் தென்னிந்தியப் பிரிவு கால் பந்தாட்டக் குழுவினரோடு சென்னையில் 'எக்ஸிபிஷன்' ஆட்டம் ஆடி வெற்றி பெற்றனர்.



துரோணர்

மகாபாரதத்தில் துரோணர் மிக மிக முக்கியமான பாத்திரம். இவ்வீர புருஷ ரின் வரலாற்றை நேஷனல் இயேட்டர்ஸார் நாடகமாக நடிக்க முற்பட்டதே மெச்சத் தகுந்தது தான்! துரோணர் பாத்திரத்தை ஏற்று நடித்த மனோகர், தபஸ்வியாக வாழ்க் கையைத் தொடங்கி, ஆசானாக அஸ்தினாபுரம் சென்று கௌரவர்களுக்காகப் போர்க் களத்தில் சேனைத் தலைவனாகி, வீர மரணம் அடைந்த அந்த வீர புருஷரின் பாத்தி ரத்தை உணர்ந்து நடித்தார். ஆர்ப்பாட்டமான வசனங்கள் ஏதுமின்றி அமைதி யாகத் தோன்றி, மனத்தில் அழுந்தும் வண்ணம் நடித்து ரஸிகர்களை மெய்சிலிர்க்க வைத்து விட்டார். சபாஷ் மனோகர் !

பதிக்கேற்ற பத்தினியாக நடித்த எம். ஆர். நிர்மலா கவர்ச்சியற்ற அந்தப் பாத் திரத்தில் பனிச்சென்று தோன்றித் தம் நடிப்பினால் எல்லோரையும் கவர்ந்துவிட்டார்.

அடுத்துக் குறிப்பிட வேண்டிய பாத்திரங்கள் – திரௌபதி, கிருஷ்ண பர மாத்மா, சகுனி, துரியோதனன். முப்பதுக்கு மேற்பட்ட பாத்திரங்களைத் தயார் செய்து இதிகாச நிகழ்ச்சிகளைக் குறைக்காமல் ஏறக்குறைய மகாபாரதம் முழுவதை யுமே மேடையில் வாயு வேகம், மனோவேகமாகக் காட்டுவதென்றால் அது பெரிய காரி யம்தானே! இதில் எந்தப் பாத்திரமும் 'சோடை' போகவில்லை.

ஒரு நாடகம் பார்க்கிறோம் என்ற நினைப்பே ஏற்படாமல், விறுவிறுப்பாக நாட கத்தை ஓட்டுவது பாராட்டுக்குரியது. (நம் படாதிபதிகள் இந்நாடகத்தைப் பார்த்து விழித்துக் கொள்ள வேண்டும்!) கதை, வசனம் எழுதிய மதுரை திருமாறன் தம் பணி யைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். பின்னணி வாத்தியக் குழுவினரும், பாடகர்களும் மெல்லிசையினால் மெய்மறக்கச் செய்தனர். காட்சி ஜோடனைகளும், தந்திரக் காட்சி களும் அதி அற்புதமாக அமைந்து விட்டன.

இளைஞர்களும், மாணவ மாணவிகளும் இந்த நாடகத்தைப் பார்த்தால் பார தத்தின் பழைய இதிகாசத்தை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளப் பெரிதும் உபயோகமா யிருக்கும்.

சுமித்திரை



கோவி. மணிசேகரன் எழுதித் தயாரித்துள்ள இலக்கியச் சுவையும் நாடக ரசனையும் மிகுந்த ''சுமித்திரை'' என்னும் பல்லவ அரச காலத்தை நிலைக்களனுகக் கொண்ட சரித்திர நாடகத்தைச் சென்னை போக்குவரத்து மனமகிழ் மன்றத்தார் மூன்று வது தடவையாகச் சென்ற 19ந் தேதியன்று மியூசியம் அரங்கில் சிந்தாதிரிப் பேட்டை பைன் ஆர்ட்ஸ் சார்பில் சிறப்பாக நடித்தனர். சீன் ஜோடனைகளும், காட்சி அமைப்புக்களும் உடை அணிகளும் பல்லவ காலத்துக்கே காண்போரை இட்டுச் செல்கின்றன. கதாபாத்திரங்களும் தங்கள் பாகங்களை உணர்ச்சியுடனே நடித்தனர். முக்கியமாகக் கதாநாயகியான நடன மாது சுமித்திரை (மல்லிகா) நாகாஞ்சலி (சோபா) சிம்மவர்மன் (முருகேசன்) சமணத்துறவி (குமரேசன்) ஆகியோ ரின் நடிப்புத் திறன் பாராட்டத் தக்கதாக இருந்தது. வசனங்கள் இலக்கிய ரசனை யுள்ளவையானதினாலே சற்று நிதானமாகவே பேசப்பட்டிருந்தால் ரசிகர்கள் மேலும் நன்கு அனுபவித்திருக்க முடியும். மேன்மேலும் பன்முறை நடித்தால் நாடகம் மெருகு ஏறும் என்பதில் ஐயமில்லை. சென்னை சபாக்களிலெல்லாம் ஒரு முறை நடை பெற்றுவிட்டால், ஒரு சுற்று முடிவதற்குள் நாடகம் முதல்தரமாக ஆகிவிடும்.

பிரெஞ்சுப் பட விழா

கனடா நாட்டுத் திரைப்பட விழா ஆயிற்று. அதை அடுத்து பிரெஞ்சு நாட்டுப் படங்களை ஒருவாரத்துக்குத் திரையிட்டு மகிழ்வித்திருக்கிறார்கள். மெட்ராஸ் பிலிம் சொஸைட்டியாரும் 'ரசனை' என்ற கலை நுணுக்க ஈடுபாட்டு ஸ்தாபனத்தினரும் கூட்டாக இந்தப் பிரெஞ்சு திரைப்பட விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் படங்களும், முப்பதுக்கும் அதிகமான அமெரிக்கப் புது முயற்சித் துண்டுப் படங்களும் திரையிடப் போகிறார்கள். ரசிகர்களுக்கு வேட்டைதான்!

பிரெஞ்சுத் திரைப் பட விழாவிலே ஏழு முழு நீளப் படங்களும் பல துண்டுப் படங்களும் காட்டப்பட்டன. பழமையான பண்பாடு, கற்பனைத்திறன், நாகரிகம் இவைகளைக் கொண்ட பிரான்ஸ் தேசத்தின் எழில் கொழிக்கும் இடங்கள் பலவற்றை அற்புதமான முறையிலே நமக்குக் காட்சியாக்கின துண்டுப் படங்களில் சில. பிரான்ஸ் நாட்டின் வர்ஸயில்ஸ் நகரின் ஆற்று நீரைக் கொண்டு ஆக்கிய செய்குளங்கள், நீர் ஊற்றுக்கள் ஆகியவைகளைத் துண்டுப் படங்களில் காணும் போது சுவர்க்கம் என்பது இப்படித்தான் இருக்குமோ என்று வியக்கத் தோன்றுகிறது. நீர்வழி மூலம் நம்மை அழைத்துச் சென்று அற்புதங்களைக் காண்பித்துத் திருப்பக் கொண்டு வந்து விடும் அந்தப் பாணி நினைவை விட்டகலாத ஒன்று.

கப்பரை ஏந்திய கன்னியொருத்தி. எகிப்து நாட்டுக்காரி அவள். சின்னஞ் சிறியவள்தான். நீச்சல் நிலையிலுள்ள - அந்த ஒரு சிலையை எத்தனை எத்தனை கோணங்களில் கோலங்களில் காண்பித்து அவளை நம்மோடு பேச வைத்து விடுகிறார் காமிரா நிபுணர்! கண்களைக் காட்டுவார், விழிக்கோடியைக் காட்டுவார், இமை மட்டும் தெரியும், கருவிழியை மட்டும் பார்க்கச் செய்வார்; அதுவும் பல்வேறு அளவுகளில். காட்சிக்கேற்ற வர்ணங்கள். வாத்திய இசை. வாய்ப்பேச்சுக் கிடையாது. முழு முகம், முக்கால் முகம், அரை உருவம். பக்கவாட்டில், தூரத்தில், வெகு தூரத்தில், மிகமிக அருகே, அங்கம் அங்கமாக - நீரிலே நீந்துவது போல, விண்ணிலே மிதப்பதுபோல அப்பப்பா! எத்தனை கோலங்கள்? இத்தனையையும் ஒரேயொரு சின்னஞ் சிறிய சிலையை வைத்துக்கொண்டு நம் சிந்தனையைக் கிளறி விடுகிறார் காமிரா நிபுணர். ஒரே சிலையையே இத்தனை கோணங்களில் கண்டபோதும் நமக்கு அலுப்பே ஏற்படவில்லையே!

திரைப் படங்களிலே, தந்திரக் காட்சிகள் என்கிறோமே, 'டிரிக் ஷாட்ஸ்' அதில்தான் எத்தனை வகை? அவைகளை ஒன்பது தலைப்புகளில் ஹாஸ்ய ரசனையுடன் விவரிக்கிறது ஒரு துண்டுப் படம். தந்திரக் காட்சிகளை எப்படிப் படமாக்குகிறார்கள் என்பதை விளக்கும் இப்படத்தின் வர்ணனை நமக்குப் புரியாதது வருத்தம்தான்! நமக்கு பிரெஞ்சு மொழி தெரியவில்லையே!

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவனின் மன நிலை, அவன் நெஞ்சிலே கடைசியாக வந்து மோதிப் பொங்கி நிற்கும் எண்ணங்கள், ஆசைகள், அவலங்கள் ஆகியவற்றை அற்புதமாகக் கதைபோலக் காவிய ரசனையோடு தருகிறது 'ஆந்தை ஆற்றிலே நடந்த சம்பவம்' என்ற துண்டுப் படம். விடுதலை வேட்கை, வாழ வேண்டும் என்ற உயிர்த் துடிப்பு. இவைகளால் உந்தப்பட்ட மனிதன் தான் பிழைத்து விட்டோம் என்று உணர்ந்தபோது அவன் இவ்வுலகை, அதன் ஒளியை, புத்தம்புது துளிர் இலையை, அதன் இளமையை, புதுமலரை, அதன் மணத்தை, பூச்சியை, அது ஊர்ந்து செல்லும் ஒய்யாரத்தைக் காணும் களிப்பிலே பைத்தியத்தைப்போல மண்ணிலே உருண்டு புரண்டு உத்சாக வெறிகொண்டு குதிக்க விட்டுக் காட்டி இருக்கிறார் டைரக்டர். உயிர் பிழைக்க அவன் ஓடும்போது நமக்கு மூச்சு இரைக்கிறது. நினைவு தப்பும்போது அவன் காணும் காட்சிகள் எப்படி இருக்கும் என்பதை விளக்கும் இடம் கற்பனையின் சிகரம். அத்தனையும் கனவு என்ற முடிவைத்தான் எத்தனை புதுமையாக, ஆனால் அபாரமான வேகத்துடன் காட்டி விட்டார் இதன் டைரக்டர்?

முழு நீளப் படங்களைவிட நம்மைக் கவர்ந்தவை துண்டுப் படங்கள்தான் என்றாலும் முழு நீளப் படங்களில் 'லா சூபிராண்ட்' (மணம் செய்து கொள்ளப் போகும் வாலிபர்) என்ற படத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். விஞ்ஞான ஆராய்ச்சியில் ஆர்வமுள்ளதோர் இளைஞனின் உள்ளத்திலே திருமண ஆசை வந்து விடுகிறது. அனுபவமற்ற அவன் தனக்கு ஏற்ற மணப்பெண்ணைத் தேர்ந்தெடுக்கக் கிளம்புகிறான். பெண்களையே அப்போதுதான் புதிய நோக்குடன் காணும் அவனுக்கு ஏற்படும் குழப்பங்களும் அனுபவங்களும் அசட்டுத்தனங்களும் நம்மை வாய் விட்டுச் சிரிக்க வைக்கின்றன. ஆனால் இதில் விந்தை என்ன தெரியுமா? கதாநாயகனான அவன் அநேகமாகப் பேசவே இல்லை. கதாநாயகன் என்றால் அனல் கக்கும் வசனங்கள் பேச வேண்டும் என்ற கொள்கை கொண்ட நமக்கு இது புதுமைதானே?

பிரெஞ்சு மக்களின் மனோபாவங்களையும், கலையுள்ளத்தையும், கற்பனைத்திறனையும், காமிராவைக் கையாளும் புது முறையையும் அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பாக இருந்தன இவ்விழாவில் திரையிடப்பட்ட படங்கள். நம் பட உலகம் இதிலிருந்து அறிந்துகொள்ள நிறைய இருக்கிறது.



பெர்க்லி-கல்கி இலக்கியப்

அமெரிக்காவில் உள்ளவர்கள் — அணு இயல் ஆராய்ச்சியாளரும், கம்ப்யூட்டர் இயக்குனர்களுமான அவர்கள் — தமிழ் இலக்கியம் வளரத் தொண்டாற்ற முன் வருவதென்றால் தமிழ்த் தாய் பெருமிதமடையக் கூடிய விஷயம்தானே அது?



அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் அமைந்திருக்கும் அழகிய நகர் ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஜப்பானியப் பாணியில் உருவாக்கப்பட்ட பூங்கா ஒன்று உள்ளது. குட்டை மரங்களும் சிறு குட்டைகளும் குட்டிப் பாலங்களும் புத்தர் சிலைகளும் வண்ண மலர்களும் எழிலார்ந்த வளைவுகளும் நிறைந்த மனோரம்மியமான பூங்கா அது. திறந்த வெளி அரங்கு ஒரு புறம்; சடபட வென்று சிறகடித்து வட்டமிட்டுத் திரும்பும் வெண் புறாக் கூட்டம் ஒரு பக்கம்.

"அதோ பார்த்தீர்களா, அந்த மரத்தை! ஸான்பிரான்ஸிஸ்கோவிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மரம் அதுதான்!" என்று குடை விரித்தாற்போல அமைந்திருந்த ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டினார் நண்பர் மணி. "முக்கியத்துவம் எதனால் ஏற்பட்டது தெரியுமா?"



பரிசுத் திட்டம்

''கென்னடி இங்கு விஜயம் செய்தபோது நட்டதாக இருக்கும்'' என்றேன்.


''இல்லை.''

''அதன் கீழே யாராவது ஒரு 'ஹிப்பி' அமர்ந்து இரண்டு அங்குல நீளத்துக்குத் தாடி வளரும் வரை எல். எஸ். டி. மயக்கத்தில் ஹரே கிருஷ்ண ஜபம் செய்வதாகச் சொல்லி யிருப்பான்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை; உங்களால் அவ்வளவு எளிதில் ஊகித்துவிட முடியாது! வளர்த்தார் மணி — பெர்க்லி தமிழ்ச் சங்கத் தலைவர்.

சென்ற ஆண்டு ஐ. நா. பிரதம காரியதரிசி ஊதாண்ட் அவர்களின் அழைப்பினை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையில் கச்சேரி செய்ய ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் சென்றாரல்லவா? அதைத் தொடர்ந்து கல்கி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் — ஸ்ரீமதி





கல்கி துணை ஆசிரியர் கி. ராஜேந்திரன் பெர்க்லி தமிழ்ச் சங்கத் தலைவர் மணியிடமிருந்து 'செக்' கைப் பெறுகிறார்.




கி.ராஜேந்திரன்

இந்த மரத்துக்குக் கீழேதான் பெர்க்லி தமிழ்ச் சங்கம் உருவாகியது. அந்த முதல் கூட்டம் புளியஞ்சாதம், எலுமிச்சம்பழஞ் சாதம், தயிர் சாதம் சகிதம் எத்தனை நன்றாக நடந்தது, தெரியுமா?''

''போதும், போதும்! மேலே சொல்லாதீர்கள்! காலையிலிருந்து சரியாக ஒன்றும் சாப்பிடவில்லை. எங்கு போனாலும் 'ஹாம் பர்'க்கும், 'ஹாட்டாகு'மாக இருந்து பிராணனை வாங்குகிறது. பசி வயிற்றைக் குடைகிறது.''

''மாலைவரை பொறுத்திருங்கள். அருமையான உருளைக் கிழங்கு போண்டாவும், தேங்காய் பர்பியும் உருவாகிக் கொண்டிருக்கின்றன'' என்று சொல்லி மேலும் பசியை எம். எஸ். தம்பதி, சங்கீதக் குழுவுடன் அமெரிக்காவின் கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரையில் சுற்றுப் பயணம் செய்தது கர்நாடக சங்கீதத்தின் அமெரிக்க திக்விஜயமாகவே அமைந்திருந்தது. அமெரிக்காவாழ் இந்தியர் மட்டுமின்றிப் பல்லாயிரக் கணக்கான அமெரிக்கரும் கர்நாடக சங்கீதத்தின் சிறப்பியல்புகளிலும் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இன்னிசையிலும் கட்டுண்டு அடிமைகளானார்கள். அடுத்த 'படையெடுப்பு' எப்போது நிகழப் போகிறது என்று ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

அவ்விதம் ஏங்கி எதிர்பார்த்திருப்பவர்களில் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த


WELLS FARGO BANK №. 182588

SAN FRANCISCO, CALIFORNIA

ORIGINAL

OFFICE STANFORD INDUSTRIAL PARK DATE OCTOBER 27, 1967

PAY TO ORDER OF * * *BHARATHAN PUBLICATIONS PRIVATE LIMITED * * U.S.$340.00

* * * * *UNITED STATES DOLLARS THREE HUNDRED AND FORTY AND NO/100 * * * * * * *

STATE BANK OF INDIA
MADRAS
INDIA

பெர்க்லி தமிழ்ச் சங்கத்தார் அளித்த பரிசுத் தொகைக்கான 'செக்'.

வர்களைப் பொறுத்தவரையில் ஒரு விசேஷம் உண்டு. பெர்க்லி தமிழ்ச் சங்கம் தோன்றியதே ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் வருகையை யொட்டித்தான்.

ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் ஸான்பிரான்ஸிஸ்கோ வருகிறார்கள் என்று அறிந்ததுமே அருகில் உள்ள பெர்க்லி சர்வகலாசாலையில் மாஸ்டர்ஸ் பட்டம் பெறப் படிக்கும் மாணவர்களும், உயர் விஞ்ஞானப் பொறி இயல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும் அறிஞர்களும், அறிவு புகட்டப் பணியாற்றும் பேராசிரியர்களும், நல்ல உத்தியோகத்தில் இருப்போருமான பல தமிழர்கள் ஒன்றுகூடி பெர்க்லி தமிழ்ச் சங்கம் என்ற ஒன்றினை நிறுவி, கல்கி ஆசிரியருக்கும் இசைவாணிக்கும் சிறப்பானதொரு வரவேற்பும் விருந்தும் அளித்து மகிழ்ந்தார்கள். அன்று பரிமாறப் பட்ட எலுமிச்சம்பழ ரசத்தையும் பகிர்ந்து கொள்ளப்பட்ட அன்பையும் பற்றி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் சென்னை திரும்பிப் பல மாதங்களுக்குப் பிறகும்கூட நினைவுகூர்ந்து பாராட்டிக்கொண்டிருந்தார் என்றால் விருந்தும் வரவேற்பும் எத்துணை சிறப்பாக அமைந்திருக்க வேண்டும் என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

பெர்க்லி தமிழ்ச்சங்கத்தில், நகரில் வாழும் தமிழர் மட்டுமின்றிப் பக்கத்தேயுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோ, பாலோ ஆல்டோ, ஓக்லண்டு போன்ற நகரங்களில் வசிக்கும் தமிழர்களும் அங்கத்தினர்களாயுள்ளனர்.

மேற்கூறியது போல ஒரு குறிப்பிட்ட காரியத்தை நடத்துவதற்காக அவசரம் அவசரமாக அமைக்கப்படும் சங்கங்கள், தோன்றிய வேகத்திலேயே மறைந்து விடுவதுமுண்டு. ஆனால் பெர்க்லி தமிழ்ச் சங்கம், ஸ்ரீமதி எம். எஸ். — ஸ்ரீ சதாசிவம் தம்பதிக்கும் மற்றும் சங்கீதக் குழுவினருக்கும் வரவேற்பு அளித்ததுடன் திருப்தியடைந்து கலைந்துவிடவில்லை. அன்று முதல் இந்த ஓராண்டு காலமாக அது நன்கு வளர்ந்து வந்திருக்கிறது.

❁ ❁ ❁

வாஷிங்டனில் ''வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா'' கட்டிடம். அங்கு தமிழ் மொழியில் ஒலிபரப்பும் பொறுப்பை ஏற்றுள்ள சில தமிழ் அன்பர்களைச் சந்திக்க எண்ணிச் சென்றேன். கட்டடத்தினுள்ளே நுழைந்த பிறகு எதிர்ப்பட்ட ஒரு பெண்மணியைப் பார்த்து, ''தமிழ்ப் பிரிவு எங்கே உள்ளது?'' என்று கேட்டேன்.

''தமிழ்? தமிழ்? அது எங்கே பேசப்படுகிறது? ஆப்பிரிக்காவிலா?'' என்று கேட்டாள் அவள்.

எனக்கு வேதனையாக இருந்தது. சற்று யோசித்துப் பார்த்தால், அந்தப் பெண்மணிக்குத் தமிழ் மொழியைப் பற்றிக் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லைதான் என்பது புரியும். ஒலிபரப்பு நிலையமான அதில் அவள் நிகழ்ச்சித் துறையிலன்றித் தொழில் நுணுக்கத் துறையில் பணியாற்றுபவளாகக்கூட இருக்கலாம். ஆயினும் ஏனோ என் இதயத்தில் ஒரு வேதனை பரவியது. அவளை நிறுத்தி வைத்து, தமிழ் நாடு பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டுத்தான் அனுப்பினேன்.

இன்னுமொரு சந்தர்ப்பம் — கல்லூரியில் பட்டம் பெற்றிருந்த ஒருவர் பத்திரிகைகளில் மொழிப் பிரச்னை குறித்து இந்தியாவில் நடக்கும் சர்ச்சைகள் பற்றிப் படித்துவிட்டு, ''இந்தியாவில் பெரும்பான்மையினர் ஹிந்துக்கள்தானே; ஹிந்தி மொழியை ஏன் எதிர்க்கிறீர்கள்?'' என்று கேட்டார். ஹிந்து மதத்துக்கும் ஹிந்தி மொழிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது; இரண்டையும் இணைத்துப் பார்த்துக் குழப்பிக் கொள்ள வேண்டாம் என்று விளக்கி மொழிப் பிரச்னையையும் விவரித்தேன்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அமெரிக்கரிடையே தமிழ் நாடு, மொழி, கலாசாரம், இலக்கியம் பற்றி ஒரு விழிப்பு ஏற்பட அமெரிக்காவில் தமிழர் வாழும் நகரங்களிலெல்லாம் தமிழ்ச் சங்கங்கள் தோன்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் யோசிப்பேன். நியூயார்க்கில் அண்மையில் பாரதி தமிழ்ச் சங்கம் தோன்றியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். வேறு பல நகரங்களில் இந்தியச் சங்கங்கள் அமைந்துள்ளன. பெர்க்லி, சிகாகோ போன்ற சர்வ கலாசாலைகளில் தமிழ்ப் பிரிவு இயங்கி வருகிறது. ஆனால் இவை, ஏதேனும் ஓர் உள்நோக்கத்தோடு ஓர் ஆசிய மொழியைக் கற்றறிய விரும்பும்

ஒரு சிலருக்குத்தான் பயன்படும். தமிழ்ச் சங்கங்களோ பரவலான முறையில் அமெரிக்கரிடையே தமிழகம் பற்றிய சிறப்பியல்புகளை உணர்த்த முடியும். அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொருவனும் தமிழகம் பற்றித் தெரிந்து கொள்ள வசதி அளிக்க இயலாமல் போனாலும், முதல் படியில் ஏறிய பிறகுதானே அடுத்த படியில் அடியெடுத்து வைக்கலாம்?

அந்த அளவில் பெர்க்லி தமிழ்ச் சங்கம் நல்ல திட்டங்களை வகுத்து இயன்ற வரை படிப்படியாக அவற்றை நிறைவேற்ற முயன்று வருகிறது. பெர்க்லி சர்வகலாசாலை நூலகத்தில் உள்ள தமிழ் நூல்களைத் தவிர சங்கத்திலேயே ஒரு நூலகத்தை நிறுவவும் அதில் தமிழ் நாடு, பண்பாடு, மொழி பற்றிய ஆங்கில நூல்களைத் தருவித்து வைக்கவும் யோசித்து வருகிறார்கள். இந்தியக் காட்சிகளை வண்ணப் படங்களாக (ஸ்லைடுகள்) திரையிட்டுக்காட்ட உத்தேசித்திருக்கிறார்கள். தமிழ்த் திரையுலகு ஒத்துழைத்தால் தமிழ்த் திரைப் படங்களைத் தருவித்துத் திரையிடவும் ஆவலாயிருக்கிறார்கள். தமிழகம் பற்றி விளக்கும் ஒரு கண் காட்சியை அமைக்கவும் திட்டமிட்டிருக்கின்றனர். கர்நாடக சங்கீதம், பரதக் கலை, இசை, இனிமையான தமிழ்ச் சொற்பொழிவு ஆகியவை அடங்கிய 'டேப் லைப்ரரி'யை உருவாக்கவும் அவ்வப்போது டேப் ரிகார்டரில் அவற்றைப் போட்டுத் தமிழரும் அமெரிக்கருமாய்ச் சேர்ந்திருந்து கேட்டு மகிழவும் விரும்புகிறார்கள்.

இது போன்ற பெரிய திட்டங்களைத் தவிர பொங்கல் தீபாவளி போன்ற பண்டிகைகளைக் கொண்டாடும் சிறிய திட்டங்களும் உண்டு. சர்க்கரைப் பொங்கல் செய்வது எப்படி என்று சகோதரிக்கு எழுதிக் கேட்டுப் பதில் கிடைத்ததும் அதன்படி மணக்க மணக்கச் சர்க்கரைப் பொங்கல் செய்து பொங்கல் திருநாளில் அங்கத்தினர்களுக்கு அளித்த தலைவர் மணி, வற்றல் குழம்பு செய்வதிலும் தாம் நிபுணர்தான் என்பதை எனக்கு நிரூபித்துக் காட்டினார். கர்நாடக இசையில் அபாரப் பிரேமை கொண்டுள்ள கிருஷ்ணமூர்த்தி சீழ்க்கை அடித்தே ராக பாவங்களை லாகவமாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்கிறார். அது அவருக்கு ஒரு 'ஹாபி'. தமிழகத்தில் திரைப்பட நட்சத்திரங்களைச் சந்தித்துப் பேசுவதென்றால் எவ்வளவு சிரமம் என்பது நமக்குத் தெரியும். ஐந்து நாட்கள் முன்னதாக நாளும் நேரமும் குறித்து, ஐம்பது நிமிஷம் காத்திருந்து, ஐந்து விநாடிகள் பார்த்துப் பேசினால் பெரிய சாதனை - அத்தனை அலுவல்கள் இருக்கும் அவர்களுக்கு. அப்படியிருக்க ஸ்ரீ சிவாஜி கணேசன் அமெரிக்காவிலிருந்த போது டெலிபோனிலேயே அவரிடம் நாற்பது நிமிஷங்கள் பேசி உலக ரிகார்டை ஏற்படுத்தியுள்ளார் ஸ்ரீ ஒய். டி. டி.

இவர்கள் எல்லாம் ரசாயனப் பொறி இயல், உயர் கணிதம், பௌதிகம் போன்ற துறைகளில் அபார ஆற்றல் பெற்றவர்கள். இல்லாமலா அமெரிக்கா இவர்களை வருந்தி அழைத்து ஆராய்ச்சிப் பணி புரிய எல்லா வசதிகளும் அளிக்கிறது? இன்னும் அணு ஆராய்ச்சியிலும் பலவிதப் பொறி இயல் கம்ப்யூட்டர் இயக்கத்திலும் விசேஷ ஆர்வம் காட்டுபவர்கள் உள்ளனர். ஆனால் இவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு விஷயம் தமிழ் ஆர்வம்; தமிழ்க் கலைகளில் பிரேமை. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த பெர்க்லி தமிழ்ச் சங்கம், சென்ற ஆண்டு ஸ்ரீமதி எம். எஸ்., ஸ்ரீ சதாசிவம் தம்பதிக்கு வரவேற்பும் விருந்தும் அளித்ததற்கு அடுத்தபடியாக மேற்கொண்ட முதற்பணி தற்காலத் தமிழ் இலக்கியத்துக்குச் சிறப்பான முறையில் தொண்டாற்ற முற்பட்டதுதான். தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் இதற்காக ஒரு



பெர்க்லி தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்குப் புறப்படத் தயார். இடமிருந்து வலமாக: கிருஷ்ணமூர்த்தி, தலைவர் மணி, ஒய். டி. டி., ஸ்ரீமதி ஒய். டி. டி. – எவர் ஸில்வர் தூக்கிலே தேங்காய் பர்பி!

பரிசுத் திட்டம் உருவாக்குவதெனத் தீர்மானித்தார்கள். இதற்குக் கல்கி ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பை நாடினார்கள். ''ஆயிரம் ரூபாய் நிதி திரட்டியிருக்கிறோம்; என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டிருந்தார் ஸ்ரீ மணி தமது கடிதத்தில்.

அமெரிக்காவில் உள்ள அவர்கள்—தமிழர்களேதான் என்றாலும் — அறிவு இயல் ஆராய்ச்சியாளரும், கம்ப்யூட்டர் இயக்குநர்களுமான அவர்கள், தமிழ் இலக்கியம் வளருவதற்குத் தொண்டாற்ற முன்வருவதென்றால் இன்றையத் தமிழ்ப் பத்திரிகை உலகும், தமிழ் எழுத்தாளர்களும் ஏன் தமிழ்த் தாயுமேகூட பெருமிதமும் இறுமாப்பும் அடையத்தக்க விஷயம்தானே அது?

கல்கி ஸ்தாபனம் இந்தத் திட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று மகிழ்ச்சியுடன் ஏற்றது. ''நீங்கள் தரும் ரூபாய் ஆயிரத்துடன் கல்கி ஸ்தாபனமும் ரூபாய் ஆயிரம் இந்தப் பரிசுத் திட்டத்துக்காகத் தரும்'' என்று உடன் பதில் எழுதினோம்.

இதன் பிறகு சிறிது காலத்துக்குள் அமெரிக்க சர்க்காரின் அழைப்பை ஏற்று நான் அந்நாட்டில் சுற்றுப் பயணம் செய்யக் கிளம்பினேன். இரண்டு மாதச் சுற்றுப் பயணத்தின் இறுதியில் ஸான்பிரான்ஸிஸ்கோ வந்து சேர்ந்தேன். விமான நிலையத்திலேயே காத்திருந்தார்கள் தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள். ஆறு நாட்கள் அவர்களது அன்பான உபசரிப்பிலே மூழ்கித் திளைத்துத் திக்குமுக்காடிப் போனேன்.

விடைபெற்றுப் புறப்படுவதற்கு முதல் நாள் மாலை சங்க அங்கத்தினர்கள் சிற்றுண்டி விருந்து (உருளைக் கிழங்கு போண்டா — தேங்காய் பர்பி) அளித்ததுடன் பெர்க்லி—கல்கி இலக்கியப் பரிசுத் திட்டத்துக்கான 'செக்'கையும் கொடுத்தார்கள். அமரர் கல்கி அவர்களின் நினைவு நாளான டிசம்பர் 5ந் தேதியை ஒட்டி வெளியாகும் கல்கி இதழில் இந்த அறிவிப்பு இடம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே ஒப்புக் கொண்டு கவரைப் பிரித்துச் செக்கைப் பார்த்தால் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கும் அதிகமாக (340 டாலர்) இருந்தது செக். 'போடு சக்கை! தமிழுக்கு யோகம்தான்! ஆயிரம் ரூபாய்ப் பரிசுத் திட்டம் இரண்டு மாத காலத்துக்குள் இரண்டாயிரத்து ஐந்நூறாக வளருமானால் தமிழ் இலக்கியம் வளரக் கேட்பானேன்?' என்று பூரித்துப் போனேன். அந்த விநாடியே கல்கி ஸ்தாபனமும் இந்தப் பரிசுத் திட்டத்துக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கும் என்று தெரிவித்து விட்டேன் — கல்கி நிர்வாகிகள் இதனை உளமார்ந்த மகிழ்ச்சியுடன் ஏற்பார்கள் என்ற உறுதியோடு. கல்கி ஸ்தாபனத்தின் சார்பிலும் அதன் லட்சக் கணக்கான வாசகர்கள் சார்பிலும் தமிழ் எழுத்தாளர்கள் சார்பிலும் பெர்க்லி தமிழ்ச் சங்கத்துக்கு நன்றி கூறினேன்.

பெர்க்லி தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் அமெரிக்காவில் நிரந்தரமாக வாழக் கூடியவர்கள் அல்ல; ஆனால் சங்கம் அங்கு நிரந்தரமாக வாழ வேண்டும் என்று வாழ்த்தினேன். இன்று இங்கு இருப்போரில் பலர் இந்தியாவுக்குத் திரும்பும்போது வேறு பலர் அங்கு ஆராய்ச்சிக்கென வருவார்கள்; வருபவர்களெல்லாம் பெர்க்லி தமிழ்ச் சங்கத்தை மேலும் மேலும் வளர்ப்பார்கள்.

பெர்க்லி — கல்கி இலக்கிய பரிசுத் திட்டம் பற்றிய அறிவிப்பு அமரர் கல்கியின் நினைவு நாளான டிசம்பர் ஐந்தாம் தேதியை ஒட்டி வெளியாகும் இந்த இதழில் இடம் பெற்று விட்டது. பரிசுத் தொகையான ரூபாய் ஐயாயிரமும் எந்த விதமாகப் பகிர்ந்து அளிக்கப்படும் என்பதைப் பற்றியும் போட்டி சம்பந்தமான இதர விவரங்களையும் கூடிய விரைவில் கல்கியில் பிரசுரிக்கிறோம்.

வாழ்க, பெர்க்லி தமிழ்ச் சங்கம்!

வளர்க, அமெரிக்க — இந்திய நல்லுறவு!

அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பைப் பெற்று அந் நாட்டில் பத்து வாரங்கள் சுற்றுப் பயணம் செய்த நமது துணை ஆசிரியர் திரு கி. ராஜேந்திரன், அதன் பின் ஜப்பான் நாட்டுக்கும், ஹாங்காங், பாங்காக், குவாலாலம்பூர், சிங்கப்பூர் முதலிய நகரங்களுக்கும் சென்றுவிட்டு, இலங்கை வழியாகச் சென்ற 23ந் தேதி சென்னைக்குத் திரும்பினார். தமது பிரயாணம் வெற்றிகரமாக அமைய வாழ்த்தனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்.

உங்களுக்கே... பருவ மங்கையின் பைந்தளிர் மேனியெழில்.



இளமை கொஞ்சிப் புதுமெருகு மிளிரும் எழிலுக்கே... ஜெய் அழகு சோப்! சரும நெகிழ்ச்சிக்கான எண்ணெய்கள் கொழித்திட, ஆழ ஊடுருவிச் சுத்தமிடும் அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. விலை உள்ளளவும் எல்லை மீறிய செழிப்புடன் கமழும் அதன் மல்லிகை மணம் உங்களைக் கொள்ளைகொள்ளும். மறவாதீர்கள், நவீனமான உலோக ஜிகினாத் தாளுறை தரித்தது ஜெய் ஒன்றுதான்.

ஜெய்—நீங்கள் நினைப்பதை விடக் குறைவான விலை உள்ள அதி விசேஷ அழகுசாதன சோப்!

உங்கள் எழில் பெருக

ஜெய்

அழகு சோப்

உங்கள் மனங்கவர் மணங்கமழ்வது.



டாடா
தயாரிப்பு

235A TM.

இமயமலை அடிவாரத்தில் உள்ள இரு எழில் மிக்க பிரதேசங்கள் காஷ்மீரமும் குலு பள்ளத்தாக்கும். இவற்றுக்கு நுழைவாயிலா யிருப்பது பட்டாண்கோட் சந்திப்பு.

முன்பு இந்தப் பிரதேசங்கள் பஞ்சாபின் பகுதியாக இருந்தன. தற்போது ஹிமாலயப் பிரதேசத்தின் சிறப்பு மிக்க உறுப்பு. வழியில் பல சுக வாசஸ்தலங்கள்.

தொடர்ந்தாற்போல் இரண்டு ஆண்டுக் காலம் எல்லைப்புறத்தில் குளிரிலும், பனியிலும், அவற்றின் கொடிய பிரிவினாலும் வாடிய இந்தியப் படையினர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இந்த இடங்களில் தங்கித் தங்களைப் புதுப்பித்துக் கொள்ளுகிறார்கள், அவர்களுக்குக் குடும்பத்துடன் தங்க

வைஜ் நாத்



ஆகிய இடங்களில்—வாழும் மக்கள், அவர்கள் எந்தச் சமயத்தை, உட்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் டோக்ராக்கள் எனப்படுவர். பாரதம் என்ற வண்ணப் பட்டாடையில் வனப்பு மிக்க ஜரிகை விளிம்பு இந்த டோக்ரா இனம். இவர்களுக்கான சில சிறப்பான வாழ்க்கை அம்சங்கள்: முதலாவது ஓவியம், அடுத்தது காவியம்.

ஹிமாலயப் பிரதேசத்தின் காங்டா பள்ளத்தாக்கில் வரையப்படும் சித்திரங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. மிகச் சிறிய அளவில் தீட்டப்பட்டிருக்கும் இந்த உருவங்களின் முகத்தில் பல ரஸபேதங்கள் காணப்படுகின்றன. மயக்க மயக்கத்தில் உள்ள புரு, சினங்கொண்ட யானை, இசையின் நெகிழ்ச்சியில் குழையும் ஆவினங்கள் ஆகியவை மனங் கவரும் தன்மையுடையவை. பற்பல ராகங்களுக்கான உருவக ஓவியங்கள் இந்தப் பிரதேசத்தில் உருவானவையே!

கிராமங்களில் உள்ள வீடுகளின் சுவர்களிலும், நிலை வாசல்களிலும் மயிலும் மைனாவும் சிறகடித்துப் பறக்கும். மலரும் கொடியும் அசைந்து சிரிக்கும். அனைத்தும் மலைகளிடையே கிடைக்கும் இயற்கை வண்ணப் பொடிகளால் ஆனவை. 'சிவகாமியின் சபதத்தில்' வந்த நாகநந்தி அறியாத இரகசியம் இவர்களுக்குத் தெரியும்!


நிலத்தின் பரப்பு மக்களின் உணவுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இங்குள்ள கனிச் செல்வமும் நீர்விசை மின்னுற்றலும் இன்னும் சரியான அளவில் மக்களின் உபயோகத்துக்குப் பயன்

1. ஆனந்த நடனமிடும் ஐங்கரன்
2. வைஜ்நாத் ஆலயம்

விடுதி, கடைத் தெரு, பால் பண்ணை, அனைத்தும் இங்கு உள்ளன. கூடவே படையினர் 'துருப் பிடித்து' விடாமல் பாதுகாக்கக் கடுமையான பயிற்சியும் நடக்கிறது.

காலஞ்சென்ற பிரதாப் சிங் கெய்ரோனைப் பற்றி அரசியல் துறையில் எத்தனையோ மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் பாஞ்சால மண் வளத்திலும், மக்களிடமும் அவர் மிக நம்பிக்கை வைத்திருந்தார். அவரது முயற்சியின் சின்னங்கள் இந்தப் பிராந்தியத்தின் வழி நெடுகக் காணக் கிடைக்கின்றன. கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்புச் சாலைகள், பட்டுப் பூச்சிகள் செழிப்பதற்கேற்ற தோட்டம், கால்நடைச் செல்வம் பெருகப் பொலி காளைகள், ரெஸின் என்ற பிசின் தயாரிக்கும் ஆலைகள் எல்லாம் வழியில் காணக் கிடைக்கின்றன. ஜெர்மனியின் ஒத்துழைப்புடன் மண்ணியலைப் பரிசோதித்துப் பொறுக்கு விதைகளைப் பயிரிட்டுள்ள பண்ணை ஒன்றைக் காண நேர்ந்தது. இந்த முறைகளினால் விளைச்சல் நூறு சத விகிதம் அதிகரித்திருப்பதாக அறிகிறோம். கெய்ரோனைக் கூடப் பாராட்டத் தோன்றுகிறதல்லவா?


இப்பகுதியில் — பாஞ்சாலத்தின் வடமேற்குப் பகுதி, ஜம்மு மாநிலம், ஹிமாசலப் பிரதேசம்




படவில்லை. இந்தப் பிரதேசத்தை முன்பு பல குறுநில மன்னர்கள் ஆண்டு வந்தனர். வெளி நாட்டிலிருந்து படையெடுத்து வந்த மொகலாயர் களின் கொடுமையைச் சமாளிக்க ஆண்கள் அனை வருமே படைக்கலம் தாங்க வேண்டியிருந்தது. அதனால் பல குடும்பங்கள் இராணுவ சேவையைத் தங்கள் வாழ்முறையாகக் கொண்டிருந்தன. இயற் கையாகவே இவர்களிடம் படைத் திறன் அதிகம்.

இரண்டாவது உலகப் போரிலும் அண்மையில் பாகிஸ்தானுடன் நிகழ்ந்த மோதலிலும் இவர்கள் தங்கள் எல்லையற்ற திறனைக் காட்டிப் புகழை நாட்டியுள்ளனர். இந்த மக்களின் காவியங் களிலும், சிறப்பாக நாட்டுப் பாடல்களிலும் பிரிவின் துயரமும், விரக தாபமும் அதிகமாகப் பிரதிபலிக்கின்றன. இவைகளை ஆழ்ந்து படிக்கும் போது நமது சங்கநூல்கள்நினைவுக்கு வராமல்இரா.

பொதுவாகப் பஞ்சாபிப் பெண்களை அழகுமிக்க வர்கள் என்று சொல்வதுண்டு. ஆனால் நெருங்கிப் பார்த்தால் அவர்களிடையே பயிர்ப்புணர்ச்சி குன்றி யிருப்பது தெரிய வரும். அந்த மங்கையரிடையே






1. ஆறுமுகன். 2. டோக்ரா குடும்பம்.

தி.சா.ராஜு

ஆண்தன்மைமிகுதி. மீசை அரும்பியிராத பெண்களின் சதவிகிதம் மிகக் குறைவு. டோக்ரா பெண்களும் பஞ்சாபியரைப் போலவேதான் உடை அணிகிறார்கள். என்றாலும் அவர்களது குற்றுருவம், தாழம்பூ நிறம், உடல்அமைப்பு, பெரிய திலகம் அனைத்திலும் மென்மையான பெண்ணியல்பு விகசிக்கிறது. இந்த மக்க ளுடைய காவியத்திலும் ஓவியத்திலும் விரகதாபம் அழுத்தமாக விவரிக்கப்படு வதில் வியப்பே இல்லை. சமீப காலம் வரையில் இந்தக் குடும்பங்களில் பெண் ணெடுக்க மிகப் பெருந் தொகையைப் பிள்ளைவீட்டார்கள் வதூ தட்சிணையாகக் கொடுக்க வேண்டியிருந்தது நியாயமே! எந்த விலையும் இவர்களுக்கு அதிகம் என்று கூற முடியாது. ஆழமான வண் ணங்களில் உள்ள பல நிற ஆடைகள் அணிகிறார்கள். அரையில் உடுத்தும் ஸல்வார், உடலை மறைக்கும் குடுத்தா, தலையையும், மேனியையும் தழுவும் துப் பட்டா மூன்றும் வெவ்வேறு நிறங்கள். எல்லா நிறமும் இவர் களுக்குப் பொருந்து கிறது.


மக்களின் மொழி டோக்ரி. போரும் காத லும் பொருத்தமாக இணைந்தஇனியபாஷை. மக்கள் — அதிலும் சிறப் பாகப் பெண்கள் பேசும் போது ஆரோகண அவ ரோகணங்கள் அழுத்த மாக ஒலிக்கின்றன. பேசும் ஒலியில் இசை யின் கட்டுக்கோப்பு இருக்கிறது. பஞ்சாபி மொழி இதன் அடித் தளம். அதிலே அரபி யும் பார்ஸியும் ஒளி விடுகின்றன.

ஃ ஃ ஃ



தூணில் எழில் மங்கை

பட்டான் கோட்டி லிருந்து பொம்மையைப் போன்ற சிறு ரயில். அதற்குக் கம்பிகள் இல் லாத ஜன்னல். மலை களைப் பிளந்து கொண்டு ரயில் விரைகிறது. பல இடங்களில் இருட் குகைகள். இருபுறமும் உயர்ந்த செழுமையான பசுமரங்கள். பிசினை எடுக்க உதவியாக அவற்றில் மண் கிண் ணங்கள். மலர்ப் புதர்கள். பெரிய பெரிய இலைகள் உள்ள



"ஏம்பா டிரைவர், எங்கிட்டே நீ இந்தக் காரை ஓட்ட வந்து எத்தனை வருஷமாச்சு ?"

"ஏதோ நாலு வருஷம் தள்ளிட்டேனுங்க !"

கொடிகள் சால விருட்சங்களைத் தழுவி நிற்கின்றன. கொத்துக் கொத்தாகக் கறிவேப்பிலை. இருபுறமும் மலர்ச் செண்டுகள் முக்கியமாக, அந்திமந்தாரை, ஊதா, பழுப்பு, உதிரச் சிவப்பு என்று எத்தனையோ காணக் கிடைக்காத புதியபுதிய வண்ணங்கள். வண்ணமும் வனப்பும் மிக்க இந்தப் பிரதேசத்துப் பறவைகளைச் சாதாரணமாகச் சமவெளியில் காண இயலாது.

எதிரே ஆகாயத்தையும் அளாவி வளர்ந்து கிடக்கும் நெடுமலைகள். அதன் மடிப்புக்களில் மேகத் துண்டுகள் உலாவுகின்றன. அக்டோபர் மாதத் தொடக்கத்தில் அவைகளுக்கு வெள்ளிப் போர்வை கிடைத்துவிடும். சாரல்களில் நீண்ட உயர்ந்த பைன், யூகலிப்டஸ், தேவதாரு விருட்சங்கள். பீய்ச்சி அடிக்கும் நீர்க் கணைகள், இடையிடையே காட்டாறு, நீர்வேகத்தினால் செதுக்கப்பட்ட உருண்டையான பாறைக் குவியல்கள், தொடர்ந்து பாறைகளின் மத்தியில் மிளிரும் பசும் வயல்கள், மனிதன் அங்கேயும் இயற்கையின் அருள் பெறுவதை நிரூபிக்கும்.

பஸ் செல்லும் பாதை ஓரத்தில் சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. செங்கல் வீடுகளே கிடையா. கூரைகளுக்குக் கூடக் கல் தகடுகளையே வேய்ந்திருக்கின்றனர். வசதி மிக்கவர்கள் மர வீடுகள் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள், பனியின் கொடிய தன்மையிலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு. கடையில் உள்ள சிறப்பான அம்சம் பழங்கள். சாதாரணமாகத் தமிழ் நாட்டுக் கிராமங்களில் காணக் கிடைக்காத கனி வகைகள் நாஷ்பாதி, பியர்ஸ், ஆலுபுக்காரா, ஜாபானி, ஆடு, ஆப்பிளில் பலவகை, பல நிறம். நாஷ்பாதியின் தோல் மிக மெல்லியது. உள்ளே தேனைப் பனிக்கட்டியுடன் பிசைந்து வைத்திருக்கிறது. அவ்வளவு தண்மை, இனிமை. வீதியிலே இருக்கும் அங்காடிக்காரர்கள் கூட வாதுமையும் அக்ரோட்டும் விற்பனை புரிகிறார்கள்.

கிராமப்புறத்திலுள்ள பெண்கள் சிறு வயதிலிருந்தே முகமலரினைத் திரையிட்டே மறைத்து வைத்துக் கொள்ளுகிறார்கள். லல்வார், இறுக்கமான கம்மீஸ், மார்பையும் கழுத்தையும் தலையையும் மறைக்க முயலும் சல்லாத் துணி — இதுவே எல்லா வயதுப் பெண்களின் ஆடையுமாகும்.

புது ரோஜா மலரை ஒத்த இரண்டு வயதுச் சிறுமியை அருகில் அழைத்து உன் பெயர் என்ன என்று வினவினேன். அவள் துப்பட்டாவினால் நெற்றி வரையில் மறைத்துக் கொண்டு, 'பப்லி' என்று பதிலிறுத்தாள். பெண்கள் திலகம் அணியத் தவறுவதில்லை. பாஞ்சால மங்கையருக்கும் இவர்களுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு இது.

உறுமிக்கொண்டே மூடுபனியைப் பிளந்து கொண்டு முன்னேறுகிறது மலை பஸ். குறுகலான, ஆனால் உறுதி மிக்க நெடுஞ்சாலை. ஒரு பக்கம் பசுமை போர்த்த மலைச் சுவர். அதனின்று பல இடங்களில் நீர் அருவி வெளிப்படுகிறது. மறுபுறம் ஒரே சரிவு. கிடுகிடு பள்ளம். அத்தனை பசுமையையும் அகண்டத்தை நினைவுபடுத்தி இறையுணர்வை உண்டாக்குகிறது. பல இடங்களில் ரயில் பாதை உடன் வருகிறது. தேயிலைத் தோட்டங்கள் எதிர்ப்படும்போது பாலம்பூர் வந்து விட்டது என்று அறிகிறோம். இங்கு பாதை வளைந்து உயருகிறது. அடுத்து அல்ஹிலால். இது ஒரு சுக வாசஸ்தலம். அடுத்த மூன்றாவது மைலில், பைஜ்நாத் என்ற சிறு நகரத்தை அடைகிறோம்.

ஃ ஃ ஃ

இலங்கை மன்னனான இராவணன் நித்தியத்துவத்தை வேண்டி இந்த இடத்தில் தவம் புரிந்ததாக வரலாறு. தன் தவத்தின் இறுதியில் தன் தலையையே கொய்து வேள்விக் குண்டத்தில் இட்டதாகவும் அப்போது இறைவன் பிரசன்னமாகி அவனுக்குச் சாளக்கிராமம் ஒன்றைக் கொடுத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. இந்த லிங்கத்தை அவன் இராமேசுவரத்தில் வைக்கும்படியாகச் செய்தது நாரதரின் தந்திரம். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வரலாறு. இப்படி நடந்தேறாதிருந்தால் இராமாயணம் வேறு விதமாக முடிந்திருக்கும். இந்தத் தலத்தில் இறைவன் தசகண்டனின் மரண பயத்தைப் போக்கியதால் இதற்கு பயநாத் (பைஜ்நாத் என்று பின்னால் மருவியது) என்ற பெயர் ஏற்பட்டது.

பின்னால் பாண்டவர்கள் இங்கு ஒரு கோயிலை நிறுவினார்கள். தற்போதுள்ள ஆலயம் அந்த இடத்திலேயே கட்டப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இது கி. மு. இரண்டாம் நூற்றாண்டினது என்று அங்குள்ளவர்கள் சொன்னாலும் உள்ளே இருக்கும் சிற்பங்கள் கி. பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டையே நினைவுறுத்துகின்றன. ஆலயத்தின் அமைப்பு சோழர் காலத்துக் கற்றளியைப் போலவே உள்ளது.



கோயில் சிறியதுதான். சிற்பங்களின் பாணியும் வடநாட்டினுடையதாகத்தான் அமைந்திருக்கிறது. ஆகம முறைப்படி எழுந்த கோயில் என்பது விளங்குகிறது. வேறெங்கும் காண இயலாத படையாகக் கொண்ட சிற்ப வகைகள்.

நிலை வாசலிலேயே நர்த்தனமிடும் ஆனந்த கணேசரைக் காண்கிறோம். வெளிப் பிராகாரத்தில் மயில் வாகனத்தில் அமர்ந்து நகை முகத்துடன் விளங்கும் ஆறுமுகம் வடநாட்டில் எளிதில் காணக் கிடைக்காத ஒரு காட்சி.

சிவனைத்தான் அர்த்தநாரி என்று புராணங்கள் வர்ணிக்கின்றன. இங்கு கருடனின் மேல் பவனிவரும் மகாவிஷ்ணு ஈருருவத்தில் வலப்புறம் ஆணாகவும் இடப்புறம் மங்கையாகவும் காட்சி தருகிறார்.

முன்புறம் உள்ள இரு நந்திகள், குப்தர் காலத்துச் சிற்பத்தை நினைவூட்டுபவை. சிறிய நந்தியின் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கும் உருவம் தென்னாட்டுப் புராண வரலாற்றையே நினைவூட்டுகிறது.

முதல் முயற்சி —1—



கர்ப்பக்கிருகத்தில் உள்ள லிங்கம் சுயம்பு. தானே எழுந்தது. அதை வெள்ளி நாகங்கள் சூழ்ந்துள்ளன. பின்னும் ஸத்யநாராயணன், கங்கை, பார்வதி ஆகிய உருவங்கள். பக்தர்களே லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து மலர் தூவி வழிபடலாம்.

உட் பிராகாரத்தில் உள்ள சுவர்களில் பல கலை வடிவங்கள். தீபமேந்திய பெண்ணுருவங்கள், சமணர் காலத்திய சிற்பங்களை நினைவூட்டுகின்றன.

இரு பெரிய கல்வெட்டுக்கள் நாகரி, கிரந்த எழுத்துக்களைப் போன்ற சாரதா லிபியில் உள்ளன. காஷ்மீர இலக்கியத்தில் ஸம்ஸ்கிருதத்தையே சாரதா என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

நமஸ்தே சாரதா தேவி
காஷ்மீர புரவாஸினி

என்று மொழி வழிபாட்டுடன் தொடங்குகிறார் கவிஞர். தற்போது மாநில எல்லைகள் குறுக்கிட்டாலும் இவை அனைத்தும் ஒரே கலாசாரப் பகுதியின் அங்கமாகவேதான் இருந்து வருகின்றன.

ஆதிசங்கரரும் வழிபட்டுத் துதித்த துவாதசலிங்க க்ஷேத்திரங்களில் ஒன்றாக இதைக் கூறுகின்றனர். சிவராத்திரி இங்கு பெரிய திருவிழா. ஆவணித் திங்கட்கிழமை இங்கு சிறப்பான பூஜை நாளாகக் கருதப்படுகிறது.

பல பஞ்சாபிக் குடும்பங்களுக்கு இந்தத் தலமூர்த்தி குலதெய்வம். அவர்களிடையே பைஜ்நாத் என்ற பெயர் வெகு சாதாரணமானது. பி. என். என்ற முன்னட்சரங்கள் எந்தப் பஞ்சாபி ஹிந்துவின் பெயரிலாவது இருக்குமானால் அவரது பெயர் பைஜ்நாத் என்று உறுதியாகக் கூறிவிடலாம்.

கஜினி முகமதின் கண்ணுக்குத் தப்பிய இந்தக் கலைவடிவங்கள் காலதேவனின் கொடுமைக்குள்ளாகியிருக்கின்றன. கடும் குளிரும் மழையும் வெய்யிலும் சிற்பங்களை மழுங்க வைத்திருக்கின்றன. ஆலயத்தைப் புதுப்பித்துச் சிறப்பிக்க இங்கே ஒரு காமகோடி இல்லையே என்று வருந்தவே செய்கிறோம்.

பெரிய கடைத் தெரு. மணாலி, குல்லு, மண்டி ஆகிய இடங்களிலிருந்து வரும் கனி வகைகள் இங்கு விற்பனையாகின்றன. எதிரே அடுக்காக நீல மலைகள், அதன் அடிவாரத்தில் செழுமையாக முதிர்ந்த நெல் வயல்கள். புதிய நெல்லின் மணம்தான் எத்தனை இனிமை! தசரா சமயத்தில் நெல் அறுவடைக்குப் பிறகு கோதுமையைப் பயிரிடுகிறார்கள். இந்தப் பிரதேச மக்கள் அரிசி உணவு உண்பவர்கள் என்பது புதிய செய்தி.

பியாஸ் நதியில் இணையத் துடிக்கும் வெள்ளி நதிகள் கதிரொளியில் பளீரென்று மின்னுகின்றன. நீலவானம், வெண்சிகரம் பசுமலை, பொன் கதிர், வெள்ளி ஆறு, வண்ண மலர்கள் ஆகியவற்றை உற்றுப் பார்க்கும்போது நாமும் ஏன் ஒரு நெல்மணியாக, நீர்த்துளியாக, பனி முத்தாக மாறி இந்த இனிய காட்சிகளுடன் ஒன்றிவிடக் கூடாது என்ற ஏக்கம்தான் தலை தூக்கி நிற்கிறது.

இயற்கை தீட்டிய இந்த வண்ணச் சித்திரங்களைக் காண்பதே இந்த இனிய அனுபவத்தைப் பெறுவதற்குத்தான் என்று கூறுகிறான் இந்தப் பிரதேசத்துக் கவியான பில்ஹணன்.

அதிலே ஏதாவது ஐயமுண்டா?

உங்கள் சமையல்

பிரச்சினைக்கு முடிவு காண்கிறது

கால்காஸ்





ஒரு கால்டெக்ஸ் தயாரிப்பு

சமையல் அறையிலே கால்காஸ் இருந்தால், சமையல் செய்வதிலே உள்ள ஆனந்தம் உங்களுக்குப்புரியும். கால்காஸ் உபயோகிக்க எளிதானது...கொடியில் பற்றிக் கொள்கிறது ...உடனடியாக சூடு கொடுத்து, சமையல் நேரத்தை மணிக் கணக்கில் குறைக்கிறது...சிக்கனமானதும் கூட. கால்காஸ் சுத்தமானது...கரியில்லை புகையில்லை.. தேய்த்துக்கழுவும் தொல்லையில்லை.

கால்காஸ் அபாயமற்றது

விசேஷமான மூடியைக் கொண்ட அபாயமற்ற இரும்பு சிலிண்டர்களில் கால்காஸ் வருவதால், ஒழுக்கோ, கையாளுவதில் தவறுதலோ எதுவும் நேராது.

வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது

ஏக போக விநியோகஸ்தர்கள் :

ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கம்பெனி,

48-9-5 கோவாபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப்பட்டினம் 4. போன் : 3516

கன்னமாரா அனெக்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ் 2.

போன் : 83428

ஏஜெண்ட்ஸ்: மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டினம், விஜயவாடா, ஏலூரு, குண்டூர், பலகோல், ராஜமுந்திரி, நெல்லூர், விஜயநகரம், மசூலிப்பட்டினம்,சேலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கர்நூல், சித்தூர், திருப்பதி, பொப்பிலி, பார்வதிபுரம், ராமச்சந்திரபுரம், சோம்பேட்டா, நரசராவ்பேட்.

C.S.C.G. 34 TA.

அத்தியாயம் 18

தனது மனத்துக்குள் சில திட்டங்களை உருவாக்கிக்கொண்ட ரவி பட்டாணியனை வாசலிலேயே இருக்கச் சொல்லி விட்டு வீட்டினுள் சென்றான்.

தணிகாசலம் இவனைப் பார்த்தவுடன் ''வா! தம்பி வா!'' என்று அன்புடன் அழைத்தார். ரவி உடனே சாஷ்டாங்கமாக அவர் காலில் விழுந்தான். ''ஸார்! நீங்க என் தகப்பனார் மாதிரி!'' என்று கூறி எழுந்து நின்றான்.

தன் மகனுக்குத் தங்க இடம் அளித்தவன் என்ற முறையில் ரவியிடம் தணிகாசலத்துக்கு ஏற்கனவே ஒரு விதமான பற்றுதல் ஏற்பட்டிருந்தது. இப்போது இம்மாதிரி அவன் கூறியதும் அவருக்கு அவன் மீது அளவு கடந்த அபிமானம் விழுந்தது. ''தம்பி ரவி! உன்னை மாதிரி பசங்க இந்தக் காலத்திலே எங்கே இருக்கானுக? உன் சிநேகிதம் என் மவனுக்குக் கிடைச்சது நான் செஞ்ச புண்ணியம்'' என்று மனமுருகக் கூறினார். ரவி அவர் பக்கத்தில் அமர்ந்தான். ''ஸார்! நீங்க எனக்கு ஒரு சின்ன உதவி செய்யணும்'' என்றான்.

''என்ன செய்யணும்? சொல்லு. செய்துப்புடுவோம்'' என்றார் தணிகாசலம்.

''கைச் செலவுக்காக ஒருத்தன்கிட்டே கடன் வாங்கிப்புட்டேன். அவன் இப்ப கழுத்தை நெரிக்கிறான். உங்களைப் பார்த்து என் தகப்பனார்னு நினைச்சுக்கிட்டான். அவன் நினைக்கிற மாதிரியே நீங்க என் தகப்பனார்மாதிரி நடிச்சு என்னைக் காப்பாத்தணும்!''

''என்னது? உன் தகப்பனாரா? அந்த மாதிரி பேத்து மாத்து வேலையெல்லாம் நான் செய்ய மாட்டேன்!''

''ஸார்! உங்க மகனுக்கு ஓர் ஆபத்துன்னு நீங்க உதவ வேண்டாமா? உங்க மகன் கடன் வாங்கியிருந்தால் நீங்க என்ன செய்திருப்பீங்க?''

''அவனைச் செருப்பாலே அடிச்சிருப்பேன். என் மகன் எதுக்குய்யா கடன் வாங்கணும்?''

''அதுதானே? அவன் எதுக்குக் கடன் வாங்கணும்? அவனுக்காக நான்தான் கடன் வாங்கிட்டேனே?'' என்று புளுகினான் ரவி.

''முத்துக்காகவா நீ கடன் வாங்கினே?''

''பின்னே என்ன ஸார்? கையிலே இருந்த பணம் எனக்கு ஒருத்தனுக்குச் சரியாயிருந்திருக்கும். முத்து செலவுக்கெல்லாம் பணத்துக்கு எங்கே போறது?



யாரோ இவர் யாரோ?

சோ

கடன் வாங்கினேன். இப்ப அவன் ஜூலியாச் சுத்தறான். நான் மாட்டிக் கிட்டு முழிக்கிறேன்.''

''தம்பி ரவி! நான் தெரியாமல் பேசிட்டேன்! மன்னிச்சுக்க. எவ்வளவு கடன் சொல்லு. பத்து ரூபாயா? பதினைஞ்சா? சொல்லு, இப்பவே நான் அடைச்சுடறேன்.''

கடன் எவ்வளவு தொகை என்று தெரிந்தால் அவர் மூர்ச்சை போட்டு விடுவார் என்று அறிந்திருந்த ரவி, ''ஸார்! நீங்க பணத்தைக் கொடுக்க வேண்டாம். இப்ப அந்தக் கடன் காரனை உள்ளே கூப்பிடறேன். நீங்க அவன்கிட்ட 'இன்னும் ஒரு வாரத் துலே முடிச்சுடலாம்'னு சொல்லுங்க. அப்புறம் நான் அவனைக் கவனிச்சுக் கிறேன்'' என்றான்.

''பேசாமப் பணத்தைத் திருப்பிக் குடுத்துருவோமேய்யா?''

''ஸார்! நீங்க அந்தமாதிரி செய்தா என்னை அவமானப்படுத்தின மாதிரி!''

''சேச்சே! அப்படியெல்லாம் பேசாதே!'' ரவியினுடைய தாராள மனப்பான்மையையும் பெருந்தன்மையையும் எண்ணித் தணிகாசலம் வியந்தார்.

''ஸார்! அடுத்த வாரம் எங்கப்பா கிட்டேருந்து எனக்குப் பணம் வரும். அப்போ நான் அந்தக் கடனைத் திருப் பிக் கொடுத்திடறேன். இப்ப மட்டும் நீங்க தயவுசெய்து என் தகப்பனார் மாதிரி நடிச்சு அந்தக் கடன்காரன் கிட்டப் பேசி அவனை அனுப்பிச்சுட் டாப் போதும்!''

''சரி, அவனைக் கூப்பிடு! என் மகன் முத்துவினாலே உனக்கு எவ்வளவு கஷ் டம்! ஆமாம்! அவன் ஏன் இப்படிக் கடன் வாங்கற அளவுக்குச் செலவு வைக்கறான்? சுத்த ஊதாரியாப் போய்



விட்டானா? அவன் தலையிலே கிராப்பைப் பார்த்தப்பவே நான் தெரிஞ்சுக்கிட்டேன்!''


''ஸார்! நீங்க முத்துவைப் பார்த்தீங்களா?''

''அது ஒரு பெரிய கதை. அப்பாலே சொல்றேன். முதல்லே கடன்காரனைக் கூப்பிடு!''

ரவி அங்கிருந்து பட்டாணியனிடம் விரைந்தான். ''இதோ பாருப்பா! எங்கப்பா இப்ப பணம் கொண்டு வரலையாம். இன்னும் ஒரு வாரத்துலே முடிச்சுடலாம்னு சொல்றாரு. நீயே அவர்கிட்ட வந்து கேளு!'' என்றான் ரவி, பட்டாணியனிடம்.

''சரி! உங்கப்பா ஒரு 'டைம்' கொட்க ஸொல்லு. அந்த 'டைம்' மேலே நம்பன் வரான்'' என்று கூறி ரவி விரித்த வலையில் தானாக வந்து விழுந்தான் பட்டாணியன். 'தான் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொள்கிறோம்' என்று ஒரு மனிதன் நினைக்க நேர்ந்தால், அப்போது, அவன் செய்யப் போகும் காரியம் பெரிய முட்டாள்தனமாகத்தான் போய் முடியும் என்பது நிச்சயம். பட்டாணியன் தான் மிகச் சாமர்த்தியமாக நடந்துகொள்வதாக நினைத்துக் கொண்டு ரவியைப் பின்தொடர்ந்து உள்ளே சென்றான். ரவியோ தனது சாமர்த்தியத்தை எண்ணி வியந்துகொண்டு பட்டாணியன் பின்தொடரத் தனிகாசலத்தை நெருங்கினான். அப்போதுதான் தனிகாசலம், 'நல்லவேளை! கடனை நானே திருப்பித் தந்து விடுகிறேன் என்று மரியாதைக்காக நான் கூறியதை ரவி ஏற்றுக் கொள்ளவில்லை. தகப்பனாக நடித்து, ரவியைத் திருப்திப்படுத்தி, பண நஷ்டம் இல்லாமல் இப்போது தப்பித்துக் கொள்ளலாம். பத்து ரூபாயோ, பதினைந்து ரூபாயோ, பணம் பணம்தானே! என்ன இருந்தாலும் நம்





மானேஜர்: உமக்கு வரவரத் தலையில் மூளையும் வளரவில்லை. முடியும் வளரவில்லை. வழுக்கைதான் வளர்ந்துண்டு வரது.

சாமர்த்தியமே சாமர்த்தியம்!' என்று தம்மைத் தாமே மெச்சிக் கொண்டிருந்தார்.

ரவி அவரை அணுகினான். தணிகாசலம் பட்டாணியனைப் பார்த்தார். "இவன்தானா கடன் கொடுத்தான்?" என்றார்.

ரவி, "ஆமாம் அப்பா! அப்பா, நீங்களே அவன்கிட்டச் சொல்லிடுங்கப்பா. அப்பா! நான் சொன்னா அவன் நம்பலேப்பா. அதனாலேப்பா நீங்க ஒரு தடவை சொல்லிடுங்கப்பா!" என்று பல 'அப்பா'க்களைப் பேச்சிலே சேர்த்துக் கூறினான். கடைசியில் எதற்கும் ஒன்று கூடவே இருக்கட்டும் என்று "என்னப்பா?" என்றும் கேட்டு வைத்தான்.

தணிகாசலம் ஆரம்பித்தார். "மகனே ரவி! நீ பேசாமல் இருடா, மகனே. நான் பேசிக்கிறேண்டா மகனே!" என்று ரவியின் அப்பாக்களுக்குப் பதிலாகப் பல மகன்களைத் திருப்பித் தந்தார் தணிகாசலம்.

பட்டாணியனுக்கு வியப்புத் தாங்கவில்லை. எந்தத் தந்தையோ மகனோ ஒருவருக்கொருவர் இவ்வளவு வாஞ்சையோடு அழைத்துப் பேசி அவன் பார்த்ததேயில்லை. இவ்வளவு தூரம் பாசத்தால் இவர்கள் பிணைக்கப்பட்டிருக்கும்போது, ரவிக்காகப் பத்திரத்தில் கையெழுத்துப் போடுவதை, தணிகாசலம் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

தணிகாசலம் பட்டாணியனை நோக்கினார். அவன் அவரிடம் "ஸாப்! நிம்பள் டைம் சொல்லுங்கோ. அப்ப நம்பள் வரான்" என்றான்.

"இன்னும் ஒரு வாரத்திலே எல்லாம் முடிச்சுப்பிடலாம். இப்ப நீ போயிட்டு வா" என்றார் தணிகாசலம்.

"அச்சா ஸாப்!" என்று விடைபெற்றுச் சென்றான். ரவியை நன்றாகச் சிக்க வைத்து, அவன் தகப்பனாரிடமே வாக்குறுதி பெற்ற மகிழ்ச்சியோடு, பட்டாணியன் சென்றான். அரை நிமிடத்துக்குத் தகப்பன் போல் நடித்துத் தன் மகனுக்காக ரவி வாங்கிய பத்து பதினைந்து ரூபாய்களைத் தாம் மிச்சப்படுத்திக் கொண்டு விட்டோம் என்ற மகிழ்வு தணிகாசலத்துக்கு. இவரை வைத்துப் பட்டாணியனை ஏமாற்றியதில் ரவிக்குப் பரம திருப்தி. பரிபூரணத் திருப்தியடைந்த இந்த மூன்று ஆத்மாக்களைக் கண்டு விதி சிரித்துக் கொண்டிருந்தது.

பட்டாணியன் வெளியேறிய பிறகு ரவியும், தணிகாசலமும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"எப்படி ஸார் நம்ம வேலை?" என்றான் ரவி.

தணிகாசலம், "பிரமாதம்! எப்படி ஏமாத்திப்புட்டோம்! மகனேன்னேன், நம்பிட்டான்!" என்று கூறி மகிழ்ந்தார்.

நடந்ததை நினைவில் நிறுத்திப் பட்டாணியனைக் கேலி செய்வதாக நினைத்துக்கொண்டு ரவி, தணிகாசலத்தைப் பார்த்துத் தமாஷாக "அப்பா!" என்றான்.

அவரும் அதே பாணியில் "மகனே!" என்றார்.

"அப்பான்னா நீங்கதான் அப்பா!" என்றான் ரவி.

"மகன்னா நீதான் மகன்!" என்றார் தணிகாசலம்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தார் ரவியைத் தேடி வந்த சின்னதுரை.

தணிகாசலமும், ரவியும், 'அப்பா, மகனே!' என்று அன்பு வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருப்பதைப் பார்த்து, தணிகாசலத்தை ரவியின் தகப்பனார் என்றே அவர் நினைத்துக் கொண்டார். "இவ்வளவு நாகரிகமான ரவியின் தகப்பனார், இப்படி ஒரு கிராமத்துவாசிபோல் இருக்கிறாரே" என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்.

"வாங்க ஸார்!" என்று அவரை வரவேற்றான் ரவி.

"ஒண்ணுமில்லையப்பா. இந்த வழியாப் போய்க்கிட்டிருந்தேன். சரி, உன் வீட்டுக்கும் வந்ததில்லையே, நுழைஞ்சுட்டுப் போவோம்னு வந்தேன்" என்றார். பெரிய மனிதர்கள் யார் வீட்

550 லட்சம் பேருக்கு ஆடையணிவிக்கப் போதுமான செயற்கை இழைகளை ஓர் ஆண்டிலே உற்பத்தி செய்கின்றனர் குவாலியர் ரேயான்.




ஒரு கிலோ செயற்கை இழைகளிலிருந்து 15 மீட்டர் துணி தயாராகிறது. அதாவது ஒரு ஆள் ஓராண்டு காலம் உடுத்தப் போதுமான துணி. குவாலியர் ரேயான் ஆண்டு தோறும் 550 லட்சம் செயற்கை இழைகளை உற்பத்தி செய்கிறது; 550 லட்சம் பேருக்கு ஆடையணிவிக்கப் போதுமான துணி அது. துணி உற்பத்திக்குத் தேவையான இழைகளை வழங்குவதோடு நின்றுவிடுவதில்லை குவாலியர் ரேயான் பணி; உணவு உற்பத்திக்கு இடம் பண்ணுகிறது. எவ்விதமெனில், பருத்திச் சாகுபடிக்காகப் பயன்பட்டுவரும் செழிப்புள்ள ஏராளமான நிலங்களை உணவுப் பயிர்களின் உற்பத்திக்கென விடுவிக்கிறது. குவாலியர் ரேயானுக்காக ஏதேனும் அயல்நாட்டு எந்திர சாதனங்களோ, மூலப் பொருள்களோ தேவையா என்றால் அதுவுமில்லை. உள்நாட்டிலிருந்தே அனைத்தையும் பெற்றுக்கொள்கிறது. தனக்கு வேண்டிய ரேயான் சகக் கூழினைத் தானே தயாரித்துக்கொள்கிறது குவாலியர் ரேயான். தவிர, தேவைப்படும் நுட்பமான எந்திரங்கள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறது எஞ்சினியரிங் டிவிஷன்.

நாட்டுச் செல்வத்தைப் படைத்திட உதவுவது குவாலியர் ரேயான்.


தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்) கோ. லிட்., [illegible], நாக்தா, குவாலியர்.

SOBHAGYA GR 25A TM



உயர்தர ஏஸிஸி ரிஃப்ராக்டரிகள்

...மீடியம், ஹை மற்றும் ஸூப்பர் அலுமினா கொண்டவை



கட்னியில் உள்ள ஏஸிஸியின் ஃபயர்ப்ரிக் தொழிற்சாலையில் மிக நூதன முறைகளைக் கையாண்டுதான் உயர்தர ரிஃப்ராக்டரிகள் தயாரிக்கப்படுகின்றன. இவை, நீங்கள் குறிப்பிடும் உருவம், சைஸ் மற்றும் தரத்தில் வேண்டிய அளவு தயாரித்து தரப்படும்.

ஏஸிஸியின் ரிஃப்ராக்டரிகள் விரிசல் வெடிப்புகள், தேய்வு மற்றும் இரசாயனசக்திகளை எதிர்ப்பவை. இவை சாதாரண ஃபயர்ப்ரிக்குகளைவிட நீடித்து உழைப்பவை, சிக்கனமானவை.

ஏஸிஸியின் ரிஃப்ராக்டரிகள் IS விதிகள் 6-1953 மற்றும் 8-1953 க்கு ஏற்பத்தான் தயாரிக்கப்படுகின்றன.

உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்:

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லி.

தலைமைக் காரியாலயம்:
'ஸிமெண்ட் ஹவுஸ்', 121, க்வீன்ஸ் ரோட், பம்பாய்.

கிளைகள்:
பம்பாய் . அஹமதாபாத் . பெங்களூர் . கல்கத்தா . . கோயம்புத்தூர்
புது டில்லி . இந்தூர் . கான்பூர் . மதராஸ் . பாட்னா . ஸெகந்திராபாத்

ஏஸிஸி
கட்னி

தி அஸோஸியேட்டெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிட்டெட்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிட்டெட்

CMI 5508

டுக்காவது போகும்போது வழக்கமாகச் சொல்லும் வார்த்தைகள் இவை. மற்றவர்களைத் தேடி அவர்கள் வீட்டுக்குச் சென்றால், அது தங்கள் கௌரவத்துக்கு ஓர் இழுக்கு என்று அவர்கள் நினைப்பதால் இந்த வார்த்தைகள், அவர்களுக்குச் சுபாவமாகவே வந்து விடுகின்றன. அதாவது, "உன்னைத் தேடி, உனக்கு மதிப்புக் கொடுத்து, நான் உன் வீட்டுக்கு வரவில்லை. ஏதோ தெருவிலே உன் வீடு இருக்கிறது. போனால் போகட்டும் என்று உள்ளே நுழைந்தேன்" என்று சொல்லாமல் சொல்கிறார்கள்.

"நல்ல சமயத்திலே வந்தீங்க, வாங்க!" என்றான் ரவி.

"உங்கப்பாவையும் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சதே" என்று ரவியிடம் கூறிவிட்டுச் சின்னதுரை, தனிகாசலத்தைப் பார்த்து, "வணக்கம் வாங்க!" என்றார்.


தனிகாசலம் மரியாதையாக எழுந்து நின்று, "வணக்கங்க" என்றார்.

ரவி தனிகாசலத்தைப் பார்த்து, "அப்பா! இவர்தான் மிஸ்டர் சின்னதுரை. நான்தான் உங்ககிட்ட சொல்லியிருக்கேனே — ரொம்ப நல்லவர் அப்பா இவரு!" என்றான்.

தனிகாசலம் சட்டென்று நிலைமையைத் தாம் புரிந்து கொண்டதாக நினைத்துக் கொண்டார். 'முத்துவுக்காக ரவி இந்தச் சின்னதுரை என்பவரிடமும் ஏதோ கடன் வாங்கியிருக்கிறான். அவரையும் சமாதானப்படுத்தி அனுப்பவே, இப்போது தன்னை அப்பா என்று கூறிச் சமாளிக்கிறான்' என்று நினைத்துக் கொண்டார் தனிகாசலம்.

இந்தச் சமயத்தில் சின்னதுரையும் சாமர்த்தியமாக ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவது என்று தீர்மானித்தார். 'ரவி தன் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வந்தால், தன் வீட்டிலேயே குடியேறி விடுவான். 'ரேஸ் டிப்ஸ்' சுலபமாகக் கிடைக்கும். பையனும் அழகன், படித்தவன், வசதி படைத்தவன். தந்தை நாட்டுப்புறமானால் என்ன? எப்படியாவது இந்தத் தனிகாசலத்தைச் சம்மதிக்க வைத்துத் தன் மகள் சித்ராவை ரவிக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டார், சின்னதுரை.

ரவி, தான் கனகசபையின் மகன் என்பதை மறைக்க, தனிகாசலத்தைத் தன் தந்தையென்று சின்னதுரை நம்பும்படி செய்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான்.



தேவையில்லாத இடங்களிலெல்லாம் பல அறிவிப்புப் பலகைகளைக் காண்கிறோம். அவை பெயருக்காக மட்டுமே உள்ளன. மக்களின் மனத்தில் பதியும் வண்ணம் வாசகங்களை அமைக்கலாமே! இதோ சில உதாரணங்கள்:

'பார்க்'கில்: நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே புல்லைப் பிடுங்கிக் கொறிப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் உங்களுடைய இன்றைய இரவு உணவை மாட்டுக்குப் போடவேண்டும்!

குறுகிய வளைவில்: சற்று மெதுவாகவே செல்லுங்கள். ஆஸ்பத்திரியில் எப்போது வேண்டுமானாலும் இடம் கிடைக்கும்!

'ரேஸ்' மைதானத்தில்: அதிகமாகக் குதிக்காதீர்கள். குதிரைகள் நின்று உங்களை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடலாம்!

நூல் நிலையத்தில்: உரக்கப் படித்து நீங்கள் படும் கஷ்டத்தைப் பிறரையும் அடையச் செய்யாதீர்கள்!

ரயில் நிலையத்தில்: அதிகமாக 'லக்கேஜ்' கொண்டு வரவேண்டாம். போர்ட்டர் விலாசம் தெரியாமல் உங்களையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு போய் விடலாம்!

சினிமா தியேட்டரில்: இந்தப் படத்தை எடுத்தவரின் விலாசத்தை அறிய ஆயுதமொன்றுமில்லாமல் மானேஜரை அணுகவும்!

பரீட்சை அறையில்: சுலபமாக வாங்கக் கூடிய ஒரு மார்க்கும் வேண்டாமெனில் 'காப்பி' அடிக்கலாம்!

சினிமா நிறைவில்: தேசிய கீதம் இசைக்கப் படும்போது அயல்நாட்டு ஒற்றர்கள் மட்டும் வெளியே செல்லலாம்! —ராமன்

தனிகாசலம் இப்போது ஒருமுறை தந்தையாக நடித்து விட்டதால், சரளமாகப் பேச ஆரம்பித்தார். "ரவி எங்கிட்ட எல்லாம் சொல்லிட்டான். இன்னும் ஒரு வாரத்திலே முடிச்சுப் பிடலாம்" என்றார் தனிகாசலம்.

சின்னதுரை திகைத்து நின்றார். 'இந்த ரவி தனக்கு முன்பாகவே கல்யாண விஷயத்தைத் தந்தையிடம் கூறியிருக்கிறான் போலிருக்கிறது. நல்லதாகப் போயிற்று' என்று நினைத்தார். ஆனால் தனிகாசலம் இவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை வைத்துக்கொள்ளச் சொல்கிறாரே என்று எண்ணித்



''ஊர் பெயர் எதுவும் இல்லாமே எனக்கு இரண்டு மொட்டைக் கடிதாசிகள் வந்திருக்கு!''
''எனக்கு ஊர் பெயருடன் இரண்டு மிரட்டல் கடிதாசிகள் வந்திருக்கு!''

தயக்கத்தோடு ''ஒரு வாரத்துக்குள்ளேயா?'' என்று கேட்டார்.

தணிகாசலம், ''நம்ப முடியலே? நான் சொல்றேன்யா! ஒரே வாரம். எல்லாம் நான் பார்த்துக்கிறேன். எனக்கு எல்லாம் தெரியும்!'' என்றார், கடன்காரனை ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டு.

சின்னதுரை இந்த விஷயத்தில் வாதம் புரிந்துகொண்டு காரியத்தையே கெடுத்துக் கொள்ள விரும்பாமல், ''ரொம்பச் சரி. சந்தோஷம். நான் வரேன். நீங்க இன்னிக்குச் சாயந்திரம் அவசியம் எங்க வீட்டுக்கு வரணும்'' என்று கூறினார்.

தணிகாசலம், ''ஆஹா! அதுக்கென்ன, வரேன்!'' என்று சொல்ல, சின்னதுரை புறப்பட, ரவி, ''இதோ வரேன் அப்பா!'' என்று தணிகாசலத்திடம் கூறிவிட்டுச் சின்னதுரையோடு வாசலுக்கு வந்தான்.

சின்னதுரை, ரவியிடம் ''ஏம்பா, ரவி! உங்கப்பா வரப்போறதா நீ எங்கிட்ட சொல்லவேயில்லையே!'' என்றார்.

''திடீர்னு வந்துட்டார் ஸார்! இப்படி ஒரு அப்பா வருவார்னு நான் எதிர்பார்க்கவேயில்லே.'' ரவியினால் கூடச் சில சமயங்களில் உண்மை பேச முடியும்.

''அவர் பேர் என்ன?'' என்றார் சின்னதுரை.

''தணிகாசலம்'' என்று ரவி பதிலளித்தான்.

''ரவி! நீ பெரிய ஆளப்பா! எனக்கு முன்னாடியே சித்ராவைக் கல்யாணம் செய்துக்க அவர்கிட்ட நீ சம்மதம் கேட்டிருக்கிறே. நானே கேட்கலாம்னு நினைச்சேன். நீ முந்திக்கிட்டே.''

இப்போதுதான் சின்னதுரை தணிகாசலத்திடம் பேசிய வார்த்தைகளுக்கு ரவி, முழுமையாக அர்த்தம் புரிந்து கொண்டான். தன் அதிர்ஷ்டத்தை நினைத்து அவன் சிரித்துக் கொண்டான். அதைப் பார்த்த சின்னதுரை, ''வெட்கப்படாதே. சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சுப்பிடலாம். ஒரு வாரம்னார் உங்கப்பா. அதுதான் கொஞ்சம் பயமாயிருக்குது!'' என்றார்.


''அதெல்லாம் பயப்படாதீங்க ஸார்! நான் அவர்கிட்டச் சொல்லி வேணும்னா கொஞ்சம் தள்ளி வைக்கச் சொல்றேன்!'' என்று தைரியம் கூற, சின்னதுரை மகிழ்வோடு விடைபெற்றார்.

தணிகாசலம் கடன்காரனைச் சமாளித்து அனுப்பிய திருப்தியோடு அமர்ந்தார். சின்னதுரையை நன்றாக ஏமாற்றியதோடு அல்லாமல், தணிகாசலம் தன்னையும் அறியாமல் தன் திட்டத்துக்குப் பலியானதை நினைத்துச் சிரித்துக் கொண்டே ரவி உள்ளே வந்தான்.

சனீசுவர பகவான் விநாயகரை விரோதித்துக் கொண்ட சம்பவம் ரவிக்குத் தெரிந்திருந்தால் அவன் இவ்வாறு மகிழ்ந்திருப்பானா? இதற்கு முன்தினம், மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் கனகசபை விநாயகர் எதிரில் தோப்புக்கரணம் போட்டுக்கொண்டிருந்தபோது, விநாயகர் சற்றே கண் அசைத்தார். ரவியின் தகப்பனார் கனகசபையின் மனத்தில் திடீரென்று 'ரவியை உடனே பார்க்க வேண்டும்' என்ற எண்ணம் உதயமாயிற்று. 'சின்னதுரைக்குத்தான் ரவியை மிகவும் பிடித்து விட்டது. நான் சின்னதுரைக்கு எழுதிய கடிதத்துக்கோ பதில் இல்லே. நேரில் சென்று சின்னதுரையைப் பார்த்துக் கல்யாண விஷயத்தைப் பேசி முடிவு செய்துவிட வேண்டியதுதான்' என்று தீர்மானித்தார். விக்னேசுவரர், ''சனீசுவரா, இப்போது பார், என் வேலையை!'' என்று மனத்துக்குள் கூறிக் கொண்டார். சின்னதுரையைப் பார்க்க அன்றிரவே சென்னைக்குப் புறப்பட்டார், கனகசபை.

இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி முன்னால் நடந்திருக்கிறது. சின்னதுரையை எந்த நிமிடமும் கனகசபை சென்று பார்த்துத் தன் வேஷமெல்லாம் அம்பலமாகிவிடலாம் என்று சிறிதும் உணராத ரவி, தணிகாசலத்திடம், ''ஸார், சனீசுவரன் கிருபையாலே, என் இஷ்டப்படியே எல்லாம் நடந்துகிட்டு வருது, ஸார்!'' என்று கூறிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



மணக்கோலம்

பி.வி.ஆர்

அத்தியாயம் 10

தாயார் எவ்வளவுக் கெவ்வளவு மனம் விகசித்துப் போயிருந்தாளோ, அவ்வளவுக்கும் சீதா சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். அவளுக்குச் சந்தோஷப்படுவதா சந்தேகப்படுவதா அல்லது பயம் கொள்ளுவதா என்று கூடத் தெரியவில்லை. கல்யாணம் என்றாலே மாமா பிள்ளையும், ரகுபதியும் தான் கண் முன்னால் நின்று அவளைச் சித்திரவதை செய்தார்கள். பந்தாட்டக்காரன் பந்தைக் காலால் உதைத்து ஆடுவதுபோல் விதி அவளை உதைத்து உதைத்து விளையாடுகிறதா? ரவி அவளிடம் என்ன அழகைக் கண்டு இப்படியொரு முடிவுக்கு வந்திருக்கிறான்? ஒரு வேளை இது சந்தானத்தின் காரியமாக இருக்குமோ? இதே சந்தானம் அன்று ரகுபதியின் குணத்தை அறிந்து வரனை ஒதுக்கும்படி அம்மாவிடம் சொன்னான். அவள் அவனுடைய வார்த்தையை மீறி நடந்து கடைசியில் அதன் பயனையும் பெற்றாள். இப்போது சந்தானமே மகிழ்ச்சியுடன் இந்தத் தகவலைக் கொண்டு வந்திருக்கிறான்! ஒரு வேளை இதுவே ஒரு நல்ல சூசகமோ?

சீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய மனத்தளத்தில் ஒருவித திருப்தியும் சந்தோஷமும் ஊற்றெடுக்கின்றன என்பதை அவள் உணர்ந்திருந்தாலும், நினைவுகள் கொண்டு வந்து கொட்டிய பழைய சம்பவங்கள் அவள் மனத்தில் குழப்பத்தையும் பயத்தையும் ஏற்படுத்தின.

சீதாவுக்கும் ரவிக்கும் திருமணமாகப் போகிறது என்று தெரிந்தவுடன் ஜானு என்றுமில்லாத குதூகலத்துடன் துள்ளினாள்.

''அக்கா! எனக்கு அன்றைக்கு அந்தக் கல்யாணம் நின்ன போதே தெரியும். உனக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்குன்னு!'' என்றாள் அவள்.

''நாம் எதிலேயும் அவசரப்படக் கூடாது ஜானு!''

''உனக்கு எப்போதுமே இந்தத் தோல்வி மனப்பான்மைதான்....''

''நான் வேறு எதைக் கண்டிருக்கிறேன்?''

''நீ கவலையே படாதே, அக்கா! இந்தக் கல்யாணம்தான் உனக்கு நிச்சயமான கல்யாணம்..... இப்பத்தான் நீ வாழ்க்கையிலே பிரவேசிக்கப் போறே!''

''எனக்கு என்னமோ பயமாயிருக்கு. ஒரு நம்பிக்கையே விழமாட்டேன் என்கிறது.''

''அதுக்குக் காரணம் உன் மனசுதான். முன்னாலே வந்தது இரண்டும் இரண்டு பீடைகள்..... அது ஒழிஞ்சப்புறம்தான் உனக்கு நல்ல காலம் வரணும்னு இருக்கு. இல்

லாட்டா, இப்போது ஒருத்தன் — அதுவும் எம். ஏ., பி. எல். படிச்சவன் — தானாகவே வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முன்வருவானேன்?''

''அதை நினைச்சால் இன்னும் பயம் அதிகமாகிறது...போயும் போயும் என்கிட்டே என்ன இருக்கு? நீயாவது அழகா இருக்கிறாய்....''

''நீ ஒரு பைத்தியம் அக்கா! ...உன்னைப் பற்றி நீயே தாழ்வாக நினைக்கிறதை உசந்த குணம்னு நீ எண்ணறே. கண்ணாடியிலே பார்க்கிறபோது உனக்கு உன் கண்ணுக்கே தெரி



யாத ரகசியங்கள் ஆயிரம் இருக்கும். ஆனால் இன்னொருத்தன் கண்ணுக்கு அவன் பார்க்கிற கோணத்திலோ அல்லது விதத்திலோ அவையெல்லாம் இல்லாவிட்டால் சில ரகசியங்களாவது தெரியலாம்.... ரவியின் கண்ணில் என்ன பட்டிருக்கிறதோ? தனக்கு நீதான் ஏற்ற மனைவின்னு அவன் மன சிலே ஏன் தோணியிருக்கப்படாது?''

சீதா பெருமூச்செறிந்தாள்.

'' என்னதான் நீங்கள் எல்லாரும் என்னை அதிர்ஷ்டக்காரின்னு சொன்னாலும் எனக்கு ஒன்னும் பிடிபடமாட்டேன் என்கிறது.... எல்லாம் ஒரு பெரிய சொப்பனம் மாதிரி தோணறது. இதுவும் கடைசி நிமிஷத்துலே நின்னு போயிடுமோன்னு அடிக்கடி பயம் உண்டாகிறது.....''

ஜானு வீறுப்பாக எழுந்தாள். இரு கைகளையும் கட்டிக் கொண்டு மார்பின் மேல் வைத்தவளாகச் சொன்னாள்:

''பிரம்மாவே இறங்கி வந்தாலும் இந்தக் கல்யாணம், உனக்கு மூன்றாவது தடவையாக நிச்சயமாகியிருக்கிற கல்யாணம் நிற்காது. என் உசிரையே பணயம் கொடுத்தாவது இந்தக் கலியாணத்தை நடத்தி வைப்பேன்...இது நிச்சயம்!''



தங்கையின் ஆவேசத்தைக் கண்டு சீதா பிரமித்தாள். எப்போதும் சிரிப்பும் களிப்புமாய் ஓர் அலட்சியத்துடன் நடந்து கொள்ளுகிற ஜானு ஏன் இப்படி வெறி பிடித்தவளைப் போலக் கத்துகிறாள்? சீதாவுக்குப் புரியவில்லை.

நாட்கள் சென்றன. கோதண்டராமன் இறந்து போய் ஒரு சில நாட்களே ஆகியிருந்ததால் ரவியின் கலியாணத்தை உடனே நடத்திவிடப் பாக்கியம் இஷ்டப்படவில்லை. தன் மகன் விவாகம் செய்து கொள்ள முடிவுசெய்து விட்டான் என்ற திருப்தி இருந்தாலும், போயும் போயும் முன் பின் தெரியாத ஓர் ஏழைக் குடும்பத்திலிருந்து பெண் எடுப்பதை அவள் விரும்பவில்லை. ஆனால் தன் சொல் ரவி, அகிலா இவர்களிடம் என்றுமே செல்லாது என்று அவளுக்குத் தெரியும். மேலும் கணவனை இழந்த துக்கம் இன்னும் ஆறாத துக்கமாக இருந்து வருகிறது. அவள் எப்படித் தலையிட்டு, தன் அதிகாரத்தை நிலைநாட்ட முடியும்?

ரவியின் மனத்திலும் கம்பெனி காரியங்களை யெல்லாம் ஒழித்துக் கட்டிய பிறகுதான், மனச் சமாதானத்துடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அகிலா அதை மேலும் ஆமோதித்தாள். உயிலில் கண்டபடி எல்லோருக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாகி விட்டது. கம்பெனியைப் பொறுத்த மட்டில் கொடுக்கவும் வாங்கவும் என்ன பாக்கியிருக்கிறது என்று ரவிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவ்வப்போது ராஜா அவனிடம் ஏதோ புரியாத பாஷையில் பேசுவான். அவனும் தலையசைத்து விட்டு ராஜாவை அனுப்பி விடுவான், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று.

ராஜாவுக்கு ஒரு வீடு கிடைத்திருந்ததுதான் காரணமோ என்னவோ, அவனிடம் இதுவரையில் கண்டறியாத பயமும் மரியாதையும் இருப்பதை அகிலாவும் ரவியும் கண்டார்கள். அகிலா இருக்கிற திசைக்கே ராஜா வராமல் இருந்தது, அவளுக்கே எல்லையில்லாத ஆச்சரியத்தையும், ராஜா மீது ஒரு திருப்தியையும் கொடுத்தது. இதற்குக் காரணம், இத்தனை காலமாக இருந்த பின்பலம் இப்போது இல்லாததுதான் என்று அவள் நினைத்தாள்.

ஒரு நாள் ராஜா ரவியைத் தேடிக் கொண்டு வந்தான்.

''என்ன ராஜா?'' என்று ரவி அவனை வினவினான்.

''கம்பெனி சிப்பந்திகளுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுக்கணும். இல்லா விட்டால் மூன்று மாசச் சம்பளத்தைக் கொடுத்தாக வேண்டும்....''

''சம்பளத்தைக் கொடு.... பாங்கி யில்தான் வேண்டிய பணம் இருக் குமே. இல்லியா?''

''இருக்கும்... இருக்கும்...ஏழெட்டுப் பேர்களுக்கு மூன்று மாசச் சம்பளம்னு நெறைய ஆகுமே...''

''பரவாயில்லே.... உழைத்ததற்குப் பிரதியாக அதுவும் ஏதோ கொ ம் பிராவிடண்டு ஃபண்டும்தானே கொடுக் கிறோம்?''

''சரி... ஒரு குமாஸ்தாவை மட்டும் வைத்துக் கொள்ளுகிறேன். சில பழைய கணக்குகளை யெல்லாம் குளறி வைத் திருக்கிறார்கள்.....''

''ராஜா, இதெல்லாம் எனக்குத் தெரியாது.... நீ பொறுப்பாக நடந்து கொள்..... எப்படியெப்படி எதை எதைச் செய்யணுமோ அப்படிச் செய்... கடைசியிலே வந்து, 'க்ளோஸ்' பண்ணி யாச்சன்னு சொல்லு.... இன்னும் எத்தனை நாட்களாகும்?''

''குறைஞ்சது ரெண்டு மாசமாவது ஆகும்.''

''இப்போதே ரெண்டு மாசமாகி விட்டது......''

''முப்பது, முப்பத்தைந்து வருஷ வியாபாரம்.... இரண்டு வருஷங்களா ஸிலோன்லே யிருந்து கொஞ்சம் பாக்கி வரணும்....''

''எவ்வளவு?''

''ஒருத்தன் எண்பதாயிரம் தரணும். இன்னொருத்தன் நாற்பதாயிரம்..... பெரியவர் யோசனை செய்யாமல் கடனு கக் கொடுத்த பணம்...நேரிலே போனாத் தான் கிடைக்கும் போலிருக்கு....''

''என்னைப் போகச் சொல்றயா? என்னாலே முடியாது.... இன்னும் ரெண்டு லெட்டர் போட்டுப் பாரு.... வரலேன்னு நேரே போ... எக்ஸ்சேஞ்ச் கெடுபிடியிலே ஸிலோன் கவர்ன்மெண்ட் என்ன ஆர்டரைப் போட்டுத் தொலைச் சிருக்கோ....!''

''அப்போ நானே போகிறேன்.... பாஸ்போர்ட்டுக்கு 'அப்ளை' பண்ணிட றேன்......''

''யெஸ்.... அதுதான் தேவலை....''

ராஜா செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த ரவி, அவன் மாறிவிட் டானோ என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

தன் காரியத்தின் முதல் படி வெற்றி கிடைத்து விட்டது என்று தனக்குள் மகிழ்ந்துகொண்டே அன்று ராஜா ஜானுவைச் சந்தித்தான்.

''ஜானு, ஒரு சமாசாரம்...ரொம்ப ரொம்ப முக்கியமான சமாசாரம்!'' என்றான் அவன்.

''சமாசாரத்தைச் சொல்லுங்கள்... அப்புறம் அது முக்கியமா இல்லையா என்று நான் சொல்கிறேன்.... ஆனா அதைவிடப் பெரிய சமாசாரத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்'' என் றாள் ஜானு.

''என்ன அது? உங்க அம்மா சரின்னு சம்மதிச்சுட்டாளா...?''

''உங்களுக்கு எப்பவும் உங்க நினைப் புத்தான்!'' என்று ஜானு சிரித்துக் கொண்டே கடிந்தாள். பிறகு ''என்ன சமாசாரம்?'' என்று கேட்டாள்.

''நான் ஸிலோனுக்குப் போகிறேன்!''

''பூ! இவ்வளவுதானா?''

''ஏன், உனக்கு அலட்சியமாக இருக்கா?''

''அமெரிக்கா போகிறேன்னு சொல் லுங்கள், அது ஒரு குட் நியூஸ். இங் கிலாந்து போறேன், பிரான்ஸ் போகி றேன்னு சொல்லுங்கள், பெருமையா இருக்கும். காலை நீட்டினா இடிக்கிற இலங்கை போறது என்ன பெரிய விஷயமா?''

''கம்பெனி விஷயமாப் போறேன்.''

''சொந்தச் செலவிலே நீங்க போக மாட்டீர்கள்னு எனக்குத் தெரியும். அது சரி, எப்போ புறப்படுகிறீர்கள்?''

''பாஸ்போர்ட்டுக்கு இன்னிக்குத் தான் எழுதிப் போட்டிருக்கேன்... ஒரு வாரத்திலே கிடைச்சுடும்'' என்ற ராஜா, ''நீயும் வருகிறாயா?'' என்று கேட்டான்.

அடுத்த கணமே அவள் பாம்பு போலச் சீறினாள்.

''என்னை என்னன்னு நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதோ மனம் விட்டுப் பழகினா, நீங்களே எல்லாம் சுதந்திரமாகச் செய்யலாம்னு மனக் கோட்டை கட்டுகிறேளே!... இந்த ஜானு ஐஸ்கட்டி மாதிரியும் இருப்பாள். பழுக்கக் காய்ச்சின இரும்பு இருக்கே அது மாதிரியும் சுடுவாள்.''

''கோபிச்சுக்காதே, ஜானு... நான் இப்ப வரையான்னு கேட்கலே...''

''பின்னே?'' அவளுடைய **ஆத்திரம்** இன்னும் அடங்கவில்லை.

''எல்லாரும் கும்பகோணத்துக்கும் குடவாசலுக்கும் ஹனிமூன் போறா. நாம் இலங்கைக்குப் போவோமேன்னு...''

''அதுன்னு சொல்றதுக்கு ஆளைக் காணும். அஷ்டபுத்திரர்களுக்குப் பேர் வைக்கிறீர்கள் நீங்கள்!''

''என் தாயார் இன்னிக்கோ நாளைக்கோ வருவாள் பாரேன்!...'' என்றான் ராஜா.

''வரட்டும்! அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்...''

''இன்னிக்கு நீ ஒரு மாதிரியா இருக்கே...''

''நான் எல்லாம் சரியாத்தான் இருக்கேன். உங்க புத்திதான் வக்கரிக்கப் போறது! அது இருக்கட்டும். உண்மையைச் சொல்வீர்களா, நான் ஒரு கேள்வி கேட்டால்?''

''உன்னிடம் நான் எதையும் மறைக்க மாட்டேன், ஜானு!''

''ரவிக்கு உங்கள் மீது ரொம்ப அதிருப்தியாமே? பண விஷயத்திலே உங்களை நம்பறதில்லையாமே!''

''யார் சொன்னார்கள்?'' அவன் வெகுண்டான்.

''யார் சொன்னால் என்ன? உண்மையைச் சொல்லுங்கள். எனக்கு உங்களைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்ள உரிமை இருக்கிறது.''

''அந்தச் சந்தானம் மூட்டி விட்டிருக்கிறான். உன் மனசைக் கலைக்கிறதுக்கு அவன் குழி தோண்டறான்.''

''அப்படியே இருக்கட்டும். நீங்கள் என் கேள்விக்குப் பதில் சொல்லப் போகிறீர்களா இல்லையா?''

திடீரென்று ராஜாவின் குரல் ஒரேயடியாகக் கனிந்தது.

''கோதண்டராமன் என் மீது உசிரையே வைத்திருந்தார். இதை நான் சொல்லி உனக்குத் தெரிய வேண்டாம். அவர் எழுதி வைச்சிருக்கிற வீடே சொல்லும். தம் பிள்ளையிடம் சொல்லியிராத ரகசியங்கள் எல்லாம் என்னிடம் அவர் சொல்லியிருக்கிறார். இதைக் கண்டு ரவிக்கும் அவன் தங்கைக்கும் வயிற்றெரிச்சல்.... அந்த அகிலாவும் சந்தானமும் நெருங்கிப் பழகுகிறார்கள். ஆனா, அவர்களுடைய சிநேகம் இன்னும் வெளியே வரவில்லை....''

''இதையெல்லாம் நான் நம்பத் தயாராக இல்லை. சந்தானம்தான் உங்களைப் பற்றி என்னிடம் சொன்னார். அவர் யாரைப் பற்றியும் அனாவசியமாகத் தூஷிக்க மாட்டார். நல்லது இருந்தால் அதைப் பற்றிப் பேசுவார், இல்லாவிட்டால், 'எனக்குப் பிடிக்கவில்லை', 'எனக்குத் திருப்தியில்லை' என்று ஏதாவது மழுப்புவார்.''

''சந்தானம் என்ன சொன்னான்?''

''நான் கேட்டதற்கு எனக்குப் பதில் சொன்னார்!''



''வர வர ஞாபகமறதி அதிகமாப் போச்சு! குடை வரும்போலிருக்கு. மழையைக் கொண்டுவர மறந்து விட்டேன்!''

''அதனாலே, உன் மனசு மாறிடுத்தா ஜானு?'' இப்போது ராஜாவின் குரல் குழைந்தது.

''அவருடைய அபிப்பிராயம் காரணமாக நான் மாறி விடவில்லை. ஒரு பெண் தன் மனசை மாத்திக்கவும் மாட்டாள். ஆனா, அவள் மனசிலே ஒரு வைராக்கியம் தோன்றிவிட்டால் ஆசைகளைத் துறந்துவிடத் தயாராக இருப்பாள்...''

''நீ என்ன சொல்லறே?'' ராஜாவின் பயம் குரலில் எதிரொலித்தது.

''நான் யாருக்குமே இல்லாதவளாகி விடுவேன். அவ்வளவுதான். வாழ வேண்டும் என்ற துடிப்புகளெல்லாம் திடீரென்று அஸ்தமித்துவிடும். எனக்கு வரப்போகிற கணவர் கண்ணியமுள்ளவர், நேர்மையானவர், பண்பும் ஒழுக்கமும் நிறைந்தவர் என்று நாலுபேர் பேசுவதைக் கேட்க நான் விரும்புவேன்.''

''இதுவரையில் தப்புச் செய்தவன் திருந்தலாமல்லவா? ஆசையுடன் அவன் செய்துகொண்ட விவாகம் அவனை மாற்றலாம் இல்லையா? அதுமாதிரி எத்தனையோ பேர் மாறியிருக்கிறார்கள்!''

''அப்போ, நீங்கள் இதுவரையில்?'' அவன் அவளையே வெறித்துப் பார்த்தான். எப்படி முடிப்பது என்று தெரியவில்லை.

''உண்மைதான். ஆனா இனிமேல் உன்மீது ஆணையாக...''

ஜானுவின் கண்களில் நீர் தளும்பியது. ''சிதம்பரம் உங்களை வாயாரப்

புகழ்ந்தபோது நான் மகா அதிருஷ்டக்காரி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனு... ஆனு. இப்போ உண்மையான ராஜா என் கண் முன்னே நிக்கறபோது, என் கண்ணே இருண்டு போகிறது!'' என்ருள்.

ராஜா ஒரு கணம் நிதானித்துவிட்டு, ''எனக்கு மன்னிப்பே கிடையாது என்ருல் நான் பாபியாகவே இருக்கிறேன்... எவ்வளவோ அக்ரமங்களைச் செய்த கோதண்டராமனையே உலகம் மன்னித்து விட்டது... ஆனல் நான் ஏதோ அற்ப விஷயங்களில் முறை கெட்டு நடந்து கொண்டதற்கு மன்னிப்பு இல்லையென்ருல் நான் என்ன செய்ய முடியும்? உன்னை என் நினைவிலேயே பூட்டி வைத்துக் கொண்டு அலேகிறேன்... அப்போது உனக்குத் திருப்தியாக இருந்தால் சரி...'' என்ருன்.

''உங்களை மன்னிக்க வேண்டியது ரவி. அவரிடமே போய்க் காலில் விழுங்கள்..''

''விழுந்தால் நடந்ததையெல்லாம் மறந்துவிடுவாயா, ஜானு? கறை படிந்து விட்ட உன் எண்ணம் மாறுமா?''

''அதைப் பற்றி இப்போது என்ன?''

''ஜானு! நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்வே கிடையாது...''

ஜானு சிரித்தாள். ''இது மாதிரி எத்தனையோ ஆண்கள் எத்தனையோ பெண்களிடம் சொல்லி வாழவும் வாழ்ந்திருக்கிருர்கள், வேறு பெண்களுடன்!''

''என்னையும் அவர்களுடன் சேர்த்து விடாதே!''

ஜானுவுக்கு என்னதான் ராஜாவின் மீது கோபமும், இப்படி இருக்கிருரே என்ற எரிச்சலும் வந்தாலும், அவன் மனத்தில் வெறுப்பு உதிக்கவில்லை. அவன் அருகே இருக்கையில் என்னதான் அவள் பிணங்கிப் பேசினுலும், முகத்தில் அடிப்பது போல் தன் அபிப்பிராயங்களை வெளியிட்டாலும் அவன் தலை மறைந்தால் அவள் மனத்தில் வேதனை பிறந்தது. ராஜா அவளுடைய மனத்தை ஈர்க்கிருன் என்பதை அவளால் மறுக்க முடியவில்லை. அவனுடன் இருக்கையில் குதூகலத்துடன் உரையாடா விட்டாலும், இல்லாதபோது மனம் வெறிச்சோடுவது போன்ற பிரமை எழுந்தது.

தான் தவறுகள் இழைத்திருப்பதை ராஜா ஒப்புக் கொண்டதையே மனமாரச் சிலாகித்துக் கொண்டாள். அவளுக்காக அவன் தன் குற்றத்தை உணர்ந்து அவளிடமே மன்னிப்புக் கேட்டிருப்பதும் அவளுக்குப் பெருமையை அளித்தது. இந்த ராஜாவே, அவளுக்கு நாளை கணவனுக வாய்த்தாலும் அதற்காக அவள் வருத்தப்படவே வேண்டாம். ராஜா திருந்தக்கூடியவன். இளமையின் திமிரிலும், தன் மீதே உள்ள அசாத்திய நம்பிக்கையிலும் அவன் கர்வமடைந்து, பிறரைச் சுலபமாக ஏமாற்ற முடியும் என்று கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிருன். ஜானு அவனை நிச்சயமாக மாற்றி விடுவாள்! இதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை.

அவள் அன்று வீட்டை அடைந்தபோது, கூடத்தில் அம்மாவுடன் இது வரை முன்பின் பார்த்திராத, வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ஐம்பது வயது மதிக்கக்கூடிய அவள் செக்கச் செவேல் என்றிருந்தாள். அவளுடைய மூக்கும் விழியுமே அவள் யாராக இருக்கக் கூடும் என்பதை அவளுக்குச் சொல்லிவிட்டன. ராஜாவின் தாயார்.

ஜானுவைக் கண்டதும், ''இவள் தான்!'' என்று பாகிரதி வந்தவளிடம் அறிமுகப்படுத்தினுள். பிறகு ஜானுவை நோக்கி, ''இவர் யாருன்னு தெரியுமா?'' என்று கேட்டாள்

தலைகுனிந்த ஜானு, ''திருவான்மியூரிலிருந்து.....'' என்று இழுத்தாள்.

லட்சுமி அம்மாள் சிரித்துக் கொண்டே, ''கண்டுபிடித்து விட்டாளே!'' என்ருள். பிறகு, ''இவளைப் பற்றி அவன் சொல்லாத நாளே கிடையாது. எத்தனையோ வரன் வரும். பேச ஆரம்பித்தால் சீறி விழுவான்.... எனக்குக் கல்யாணமே தேவை இல்லை என்பான்! நச்சரித்தால் வீட்டை விட்டு ஓடிப் போய் விடுவேன்னு பயமுறுத்துவான்...இப்போ என்னடான்னு என் காலிலே விழுருன். உங்க மனசு எப்படின்னு தெரிஞ்சுக்கலாம்னு'' என்ருள்.

''என் பொண்ணே தன் மனசு என்னங்கிறதைக் காட்டினப்புறம் நான் என்ன சொல்றதுக்கு இருக்கு?.... முதல்லே மூத்தவளுக்கு ஆகணும்.... பகவான் புண்ணியத்திலே அது நடந்து விட்டால், ஒரு பெரிய பாரம் குறையும். ஜானுவைப் பத்தி நான் என்னிக்குமே கவலைப்பட்டதில்லை....''

''ஒருத்தன் பெண்டாட்டியை இன்னொருத்தன் கட்ட மாட்டான். நம்ம நல்லதை நினைச்சுச் செய்ய ஆரம்பிக்கிறோம்..அப்புறம் தெய்வம் விட்ட வழி!'' என்று கூறி விடைபெற்றுள் லட்சுமி அம்மாள்.

(தொடரும்)

தோடகற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும்

கால்நடைகளின் நலனையும் பால்வளத்தையும் பெருக்குவதற்கு சாலச் சிறந்த தீனி, தோடகற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும். இவற்றின் ஒரே ஒரு கிலோ அளவை சைலேஜ் அல்லது வைக்கோலுடன் சேர்த்துக் கொடுத்தால் போதும், பசும்புல் கிடைக்காதபோதுகூட, கால்நடைகளை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்கமுடியும். தோடகற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும், சைலேஜில் இருக்காத சத்தாகிய புரதப்பொருள்களைத் தருவதோடன்றி, உடல்வளர்ச்சியை உண்டுபண்ணி, அளவிலும் தரத்திலும் பால்வளத்தை மேம்படுத்துகின்றன.

முடிவாகப் பார்க்கும்போது, முழுப் பருத்திக் கொட்டையையோ, தோடகற்றாத பருத்திப் பிண்ணாக்கையோ தீனியாகக் கொடுப்பதை விட மலிவானவை தோடகற்றியபருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும்; ஏனெனில் அவை மாடுகளிடமிருந்து தரமான பாலை அதிக அளவில் கறக்க உதவுபவை.

உங்கள்
மாடுகளுக்கு
வழங்கி
வந்தால்
உங்களுக்கு
அதிகப் பாலும்
பால் பண்டங்களும்
கிடைக்கும்!



SOBHAGYA-CCA 7 TM

தோடகற்றிய பருத்திவிதைப் பிண்ணாக்கும் பிழிசத்துக்களும் கால்நடைகளின் உடல்வளர்ச்சி, பால்வளம் இரண்டையும் பெருகச் செய்கின்றன!

AICOSCA

ஆல் இந்தியா காட்டன்ஸீடு கிரஷர்ஸ் அஸோஸியேஷன்,
ரவி சேம்பர்ஸ், டாமரிண்ட் ஸ்ட்ரீட், பம்பாய்-1





அத்தியாயம் 47

உயிர் காத்த தெய்வம்

அர்ச்சகர் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்த பொழுது, அந்த இருவரும் சற்றுத் தள்ளிப் போய்விட்டதால், இருளில் உருவம் சரியாகத் தெரியவில்லை. கண்களை இடுக்கிக்கொண்டு இருளில் பார்வையால் துழாவினார். ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

''பிரமையாக இருக்கும்... இருட்டில் என்ன தெரிகிறது..? மேலும் இந்த நேரத்தில் ஒரு பெண் பிள்ளை இந்த இடத்துக்கு வருவாளா என்ன...?'' என்று அர்ச்சகர் தமக்குள்ளேயே முனகிக் கொண்டார். இருந்தாலும், சந்தேகம் தூண்



டவே, மீண்டும் திரும்பிப் பார்த்தார். அதே சமயம் ஒரு மின்னல் பளிச்சிட்டு மறைந்தது. அர்ச்சகர் திகைத்துப் போனுர். அவர் சந்தேகப்பட்டது சரி தான். ஆற்றங்கரையை நோக்கிச் செல்லும் அந்த இருவரில் ஒரு நபர் பெண்தான் என்பதை மின்னல் காட்டி விட்டது. அந்தப் பெண் முக்காடிட்டிருந்தாள். கறுப்புப் புடவை அணிந்திருப்பதுபோல் தோன்றியது. அர்ச்சகர் சற்றுப் பார்த்தார். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. டார்ச்சின் ஒளிதான் விட்டு விட்டுத் தெரிந்தது.

''உம்... காலம் கெட்டுப் போச்சு!'' என்று தலையில் அடித்துக் கொண்டு தம் பாதையில் நடந்தார் அர்ச்சகர்.

ஆற்றங்கரையை நோக்கி நடந்து கொண்டிருந்த இருவரும் பேசாமலே சென்று கொண்டிருந்தனர். ஆற்றங் கரையை நெருங்கியதும் ''தீக்ஷிதர் வாள்! இனிமேல் டார்ச்சை அடிக்காதீர்கள். பாலத்துக்குப் பக்கத்தில் உள்ளவர்களுக்கு வெளிச்சம் தெரிந்து விடும்'' என்ருள் அந்தப் பெண்.

''மழை பெய்து வழுக்குகிறது. ஜாக்கிரதையாகப் போக வேண்டும், திரிவேணி! முரட்டுத்தனமாக ஏதாவது செய்து விடாதே, ஜாக்கிரதை'' என்ருர் தீக்ஷிதர்.

திரிவேணி கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ரேடியம் பூசப்பட்டிருந்த எண்கள் இருட்டில் கண் சிமிட்டின.

''ஒன்பது முப்பத்தைந்துதான் ஆகிறது. இன்னும் நாற்பது நிமிஷம் இருக்கிறது ரயில் வர'' என்று முணகிளுள் திரிவேணி.

''அவர்களெல்லாம் எங்கே பதுங்கி இருக்கிருர்களோ?''

''எல்லாம் குறிப்புப் படத்தில் பார்த்துவிட்டேன். அதோ பாலத்துக்குப் பக்கத்தில் பெரிய மரம் இருக்கிறதே, அதன் மேல்தான் ரங்கமணியும், காசிலிங்கமும், மீனுட்சிநாதனும் இருப்பார்கள். அப்பாவும் இன்னும் இரண்டு பேரும் மரத்துக்கு நூறு அடி தள்ளி இருக்கிற ஒரு பெரிய புதருக்குள் ஒளிந்திருப்பார்கள். மற்றவர்கள் வயல் வரப்பில் இருக்கும் புதருக்குள்



இருப்பார்கள். பாலத்தில் வைக்கப் பட்டிருக்கும் 'டைனமைட்' வெடி குண்டை வெடிக்க வைக்கும் பேட்டரி, அந்த மரத்தின் மீதிருக்கும். பாலத் தின் மீது ரயில் வண்டி வந்ததும் ரங்கமணிதான் பாட்டரி விசையை அழுத்த வேண்டும்'' என்றாள் திரிவேணி.

''அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. பழி வாங்க வேண் டும் என்று துடித்துக் கொண்டிருந் தான்'' என்று முனகினார் தீக்ஷிதர்.

இருவரும் ஆற்றங்கரைக்கு வந்து விட்டார்கள். சுற்று முற்றும் பார்த் தார்கள். எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. ஆற்று வெள்ளத்தின் இரைச் சல் பரவியிருந்தது. பக்கத்தில் ரயில் பாதை. பதினைந்தடி உயரத்துக்கு மேல் இருந்தது. தண்டவாளத்துக்கு இரு பக்கங்களிலும் பெரும் பள்ளம். பள் ளத்தில் வயல்கள் இருந்தன. வயல் வரப்பின் மேல்தான் இருவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு தவளை பாடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து, பல தவளைகள் கோஷ்டி கானம் பாடத் தொடங்கின. நடக்கப் போகும் சம்பவத்துக்கு இப்போதே பக்கமேளம் கொட்டுவதுபோல் தவளைகள் கத்தத் தொடங்கி விட்டன.

''நாம் இப்படி நின்று கொண்டிருந் தால் மின்னல் வெளிச்சத்தில் நம்மைப் பார்த்து விடுவார்கள். புதர்களின் மறைவிலேயே குனிந்து நடக்க வேண் டும்'' என்றாள் திரிவேணி, தீக்ஷிதரின் காதுக்குள். தீக்ஷிதர் புதர் மறைவில் குனிந்து நின்றுகொண்டு பாலத்தைப் பார்த்தார்.

ஆற்றுக்குக் குறுக்கே அமைந்திருக் கும் பாலத்தின்மேல் இரும்புச் சட்டங் களால் சதுரமாக அமைக்கப் பட் டிருந்த பிரும்மாண்டமான கூண்டு, அந்த இருளிலும் மங்கலாகத் தெரிந் தது. பாலத்தின்மீது ரயில் வண்டி மேலாக ஓடும்போது, அந்தப் பிரும் மாண்டமான இரும்புக் கூண்டுக்குள் நுழைந்து செல்லும்.

''அந்தக் கூண்டுக்குள் நுழைந்து விட்டால் யாரும் பார்க்க முடியாது. அதற்குள் நுழையும் வரையில் ஜாக்கிர தையாகப் பதுங்கிப் போக வேண்டும்'' என்றார் தீக்ஷிதர்.

திரிவேணி ஒரு மேட்டில் ஏறி நின்று கொண்டு இருட்டிலேயே சுற்றுப் புறங்களைக் கூர்ந்து பார்த்தாள். குறிப்புப் படத்தில் கண்டிருந்த ஒவ் வோர் இடத்தையும் கவனமாகப் பார்த்தாள். இருட்டா யிருந்தாலும், இருட்டிலேயே கண்கள் ஓரளவு பழகி விட்டதால், சுற்றுப்புறப் பகுதிகள் மங்கலாகத் தெரிந்தன. திடீரென்று வீசிய மின்னல் ஒளியில் பாலமும், பக்கத்தில் இருந்த பெரிய ஆலமரமும் கரையில் இருந்த கோயிலும் நன்கு தெரிந்தன.

''டார்ச்சைக் கொடுங்கள்... இந்தப் புதருக்கடியில் உட்கார்ந்திருங்கள். அரை மணிக்குள் திரும்பி வந்து விடுவேன்'' என்றாள் திரிவேணி. விளக்கை அவளிடம் கொடுத்தார் தீக்ஷிதர்.

'' ஜாக்கிரதையாகப் போம்மா. தண்டவாளம் ரொம்ப உயரத்தில் இருக்கிறது. பார்த்து ஏறு. வழுக்கும்'' என்று எச்சரித்தார்.

திரிவேணி டார்ச்சை இடுப்பில் செரு கிக்கொண்டு, புடவையை வரிந்து கட்டிக் கொண்டு, தண்டவாளத்தின் மேட்டில் தொத்தி ஏறத் தொடங் கினாள். தீக்ஷிதரின் நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. கண் களைச் சுருக்கிக் கொண்டு, திரிவேணி மேட்டில் ஏறிக் கொண்டிருப்பதைக் கூர்ந்து பார்த்தார்.

மழையின் ஈரம் இருந்ததால் ஏறும் போது திரிவேணிக்கு வழுக்கியது. முண்டு முண்டாயிருந்த கற்களைப் பற்றிக் கொண்டு தொத்தி ஏறினாள். ஒரு கல் புரண்டுவிடவே, கால் வழுக்கி உருண்டுவிடப் பார்த்தாள். நல்லவேளை! அவள் கால் வேறு ஒரு கல்லின் மீது தாக்குக் கொடுத்துக் கொண்டது. அந் தக் குளிர் நேரத்தில் கூடத் திரி வேணியின் நெற்றியில் வியர்வை வழிந்தது. மிகுந்த சிரமத்துடன் மேட்டில் ஏறித் தண்டவாளத்தை அடைந்து விட்டாள். மேட்டில் ஏறி வந்த களைப்பால் மேல் மூச்சு வாங் கியது. தண்டவாளத்தில் உட்கார்ந்து விட்டாள். காலில் இரண்டு மூன்று இடங்களில் கற்கள் உரசி இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நெற்றி வியர் வையைத் துடைத்துக் கொண்டாள். தண்டவாளம் சேர்மாதேவி ஸ்டேஷ னுக்குச் செல்லும் பாதையை உற்றுப் பார்த்தாள். சிறிது தூரம் வரையில் தண்டவாளம் தெரிந்தது. அதற்குப் பிறகு இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. எதிர்த் திசையில் பார்த்தாள். ஆற்றுப் பாலம் தெரிந்தது. பாலத்தின் மீது ஏதாவது தெரிகிறதா என்று சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தாள். இருட்டிலேயே வெகு நேரம் இருந்து விட்டதால் கண்களுக்கு அந்த இருட்டிலும் ஓரளவுக்குச் சுற்றுப் புறத்தைப் பார்க்கும் சக்தி வந்து

விட்டது. கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் — ஒன்பது ஐம்பது....

பரபரப்புடன் தண்டவாளத்தின் ஊடே தவழ்ந்தபடியே பாலத்தை நோக்கி நகர்ந்தாள். பாலத்தை அடைந்து விட்டால் இரும்புக் கூண்டு அவளை மறைத்துக் கொள்ளும். அது வரை அவள் பதுங்கித்தான் போக வேண்டியிருந்தது. எழுந்து நடந்தால் ஒருவேளை மின்னல் வெளிச்சத்தில் அவள் உருவம் மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் தெரிந்து விடும் என்பதால் தவழ்ந்தே சென்றாள்.

புதருக்குள் இருந்த தீக்ஷிதர், தண்டவாளம் இருந்த மேட்டைக் கூர்ந்து பார்த்தார். இருட்டில் பூதாகாரமாக மேடுதான் தெரிந்தது. திரிவேணி தெரியவில்லை.

அச்சகத்தில் பார்த்த குறிப்புப் படத்தை நினைவுபடுத்திக் கொண்டாள் திரிவேணி. பாலத்தின் ஆரம்பத்திலிருந்து மூன்றாவது கண்வாயில், வெடி குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து வைத்திருந்தாள். அந்தக் குண்டுகளை வெடிக்க வைக்கும் மின்சாரத்தைக் கொடுக்கும் பாட்டரியையும் வெடிகுண்டுகளையும் இணைக்கும் மின்சாரக் கம்பிகளை அந்த இடத்திலிருந்தவாறே துண்டித்து விடலாம் என்று முதலில் நினைத்தாள். ஆனால் மின்சாரக் கம்பி பாலத்தின் மூன்றாவது கண்வாயிலிருந்து நேரே கீழ் நோக்கித் தொங்கியவாறு பேட்டரி இருக்கும் மரத்தை அடைவதால் எப்படியும் மூன்றாவது கண்வாய்வரை அவள் சென்றுதான் ஆக வேண்டும்.

நகர்ந்து நகர்ந்து பாலத்தை நெருங்கி விட்டாள். கீழே நதி இரைச்சலுடன் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது. கிழக்கில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது. நல்ல வேளையாக அடிவானத்தில் மேகம் இருந்ததால் நிலவின் ஒளி அதிகமாக இல்லை. பாலம் ஆரம்பமாகுமிடத்தில் அவள் நின்ற இடத்துக்கு நேர் கீழேதான் குறிப்புப் படத்தில் காட்டப் பட்டிருந்த அடர்த்தியான ஆலமரம் இருந்தது. அந்த மரத்தை உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. அந்த மரத்தில்தான் ரங்கமணி இருக்கிறான் என்ற உணர்வு அவள் மன வேதனையைக் கிளறியது.

எவ்வளவு பெரிய பயங்கரச் செயலுக்குத் துணிந்து விட்டார்!

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். சந்திரன் உயரக் கிளம்பிக் கொண்டிருந்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் அவள்.

ஒன்பது ஐம்பத்தைந்து.

மெதுவாகப் பாலத்தின் மீது நடக்கத் தொடங்கினாள். பாலத்தின் மீது அமைந்திருந்த இரும்புக் கூண்டு, அவளை மறைத்துக் கொண்டது. இரு தண்டவாளங்களுக்கும் குறுக்கே அமைந்திருக்கும் அகலமான கட்டைகள் மீது காலை ஊன்றி நடந்தாள். இரண்டாவது கண்வாய்க்கு நடுவில் வந்ததும் சற்று நின்றாள், மூச்சு வாங்கியது. சுற்று முற்றும் பார்த்தாள். வயல்களிலிருந்த தவளைகள் போட்ட இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. கீழே குனிந்து பார்த்தாள். தண்டவாளக் குறுக்குக் கட்டைகளின் இடைவெளியில் கீழே ஆற்று வெள்ளம் ஓடுவது தெரிந்தது. நிலவு வெளிச்சத்தில் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பத்து.

இன்னும் பதினைந்து நிமிஷங்கள் தாம் இருக்கின்றன. அதற்குள் அவள் வேலையை முடித்து விட்டுப் பாலத்தை விட்டும் வெளியே வந்து விடவேண்டும்.

திடீரென்று நரி ஊளையிடுவது போல் கேட்டது. நிதானமாகக் கவனித்தாள். சத்தம் ஆல மரத்துக்குப் பக்கத்திலிருந்து வந்தது. அதைத் தொடர்ந்து சற்றுத் தள்ளியிருந்த வேறு ஒரு நரி ஊளையிடுவது போல் கேட்டது.

பரபரப்புடன் நடக்கத் தொடங்கினாள். கால் வழுக்கிக் குறுக்குக் கட்டைகளின் ஊடே புகுந்துவிடப் பார்த்தது. சமாளித்துக் கொண்டாள். மூன்றாவது கண்வாய்க்கு வந்ததும் கீழே உட்கார்ந்து கூர்ந்து கவனித்தாள். தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. இடுப்பிலிருந்த பேட்டரி விளக்கை எடுத்து முன் பக்கத்தைக் கையினால் மறைத்துச் சிறிது ஒளி மட்டும் வெளிவரும்படி செய்துகொண்டு தண்டவாளத்தின்மீது தேடிப் பார்த்தாள். இரண்டடி தூரத்தில் ரப்பர் உறையிட்ட மின்சார இணைப்புக் கம்பி தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டாள். உடனே உற்சாகத்தால் அவள் முகம் மலர்ந்தது. உடம்பிலும் தெம்பு வந்து விட்டது. கம்பியை மெதுவாக இழுத்துப் பார்த்தாள். அதன் ஒரு பக்கத்து முனை பாலத்துக்குக் கீழே தொங்கியபடி கரையில் இருந்த ஆலமரத்துக்குப் போயிருந்தது. மறு பக்கத்து முனை தண்டவாளத்தின் அடியில் நுழைந்திருந்தது. எத்தனை வெடிகுண்டுகள் அந்த இடத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன என்பதை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் வெடிகுண்டுகளை இணைக்கும் மின்சாரக் கம்பிகள் அவளுக்குக் கிடைத்துவிட்டன. **(தொடரும்)**

அபகரணம்

ஏ.எஸ்.ராகவன்



வகமதி இன்னமும் யாரையும் தேர்ந்தெடுக்கவில்லை.

அத்தைக்கு அதே விசாரம். 'தை, தை' என்று குதித்துக் கொண்டு தை மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அப்பா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பொழுது விடிந்ததும் செய்தித் தாளைப் பரப்பிக் கொண்டு, அ முதல் ஃ வரை—அதாவது விளம்பரத்திலிருந்து அச்சிட்டு, பிரசுரிப்பது இன்னார் என்பது வரை—உலக விவகாரத்தைப் பார்க்கிறாரே தவிர, வீட்டுக்குள் நடப்பைப் பார்ப்பதில்லை. ''வகவுக்கு இருபத்தைந்து வயது ஆகிறது என்கிறாயா? ஆகட்டுமே! அவளுடைய கல்யாணம் முடிய வேண்டும் என்கிறாயா? முடியட்டுமே!... இதோ பார், பாங்கில் பணம் தயாராக இருக்கிறது. மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பது அவள் பொறுப்பு. இதில் நான் தலையிட மாட்டேன்'' என்பார் அவர்.

''அவளுக்கு என்ன தெரியும்?'' என்பாள் அத்தை.

''என்ன தெரியாது? அப்படி ஏதும் தெரியாதவளாக இருந்தால், அவளுக்கு எதற்குக் கல்யாணம்?''

அப்பா வக்கீலுக்குப் படித்தவரில்லை. வியாபாரத்தில் கெட்டிக்காரர். எதிலும் லாப, நஷ்டம் பார்க்கிறவர்.

''அழகுதான். எல்லாம் தெரிந்த பிறகு தான் அந்தக் காலத்தில் கல்யாணம் செய்தார்களோ?''

''அது அந்தக் காலம். அப்போது தெரிந்திருந்தால் குற்றம். இப்போது தெரியாமல் இருப்பது குற்றம். கல்யாணத்துக்கு முன்னமேயே குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் போதனை கிடைக்கிற நவயுகத்தில் வாழ்கிறோமே, அக்கா, நீ இன்னமும் பத்தாம் பசலியாக இருக்கிறாயே!''

''ராம! ராம!... குடும்பத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கும் அவசியமே தவிர, குடும்பத்தையே இயற்கைக்கு விரோதமாகக் கட்டுப்படுத்தலாமா?''

''பார்த்தாயா, உன் 'பிலாஸபி' எடுபடாது என்றேனே!'' அப்பா சிரிப்பார்.

வகமதிக்கு இந்த மாதிரி சம்பாஷணைகளை, பல கோணங்களில் கேட்டுக் கேட்டுப் பழக்கமாகிவிட்டது. அவளும்தான் பல கோணங்களிலிருந்து தன் எதிர்காலத்தைப் பார்க்கிறாள். ஒரு முக்கூட்டு ரஸ்தாவில் நின்று கொண்டு எந்தப் பக்கம் நடை போடுவது என்று புரியாத கலக்கம் அவளை ஆட்கொண்டிருக்கிறது.

''எனக்குத் தெரியாது. இந்தத் தையிலாவது கல்யாணம் முடிந்தாக வேண்டும்'' என்றாள் அத்தை தீர்மானமாக.

''உன் மருமானிடம் போய்ச் சொல்லேன், அக்கா.''

''அவள் உன் பெண்தானே? உனக்கு மேலே கட்சி பேசுகிறான்.''

''பேசத் தெரிந்தவனுக்கு நியாயமும் தெரியும்தானே?''

''நியாயம் ஏது இந்த வீட்டிலே? எல்லாம் அநியாயம்தான். இப்படி ஒரு பொறுப்பில்லாத குடும்பம் பூலோகத்தில் அதிசயம்தாண்டாப்பா.''

இதற்கும் சிரிப்பு. பிடி கொடுக்காமல் எதிராளியையும் புண்படுத்தாமல் சிரிப்பது லாபமான வியாபார தந்திரம்.

''எனக்கென்ன? எப்படியோ போங்கள். இதுபற்றி இனிமேல் பேசினால் என் பேர் விசாலம் இல்லே.'' அத்தை இப்படிப் பயமுறுத்தியது எத்தனையோ தடவை. ஆனால் மசிகிறவர்கள் யார்?

வகமதி பெருமூச்சு விட்டாள்.

கவர்ச்சியாகத் தோன்றிய வாழ்க்கையில் மதிநுட்பத்தோடு செயலாற்ற வேண்டிய சாமர்த்தியமும் இரண்டறக் கலக்கிற ஈடுபாடும் முக்கியமான பிரச்னைகளாக அவளை இத்தனை காலமும் தயக்கத்தில் ஆழ்த்தி யிருந்தன. ஒரு வகையில் அப்பாவின் 'விட்டேத்தியான' போக்குக்கு அவனே காரணம். கல்யாணப் பேச்சை எடுத்தாலே முகத்தைக்கடுத்துக் கொண்டு, 'அதெல்லாம் படிப்பு முடிந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் அப்பா' என்று உதறியவள் அவள்தான். படிப்பு முடிந்தபிறகு, 'யோசித்துச் செய்து கொண்டால் போகிறது' என்றான். யோசித்து முடிக்க அவகாசம் நிறையத் தேவைப் பட்டது. அசட்டுப் பெண்ணாக இருந்தால் வலிய ஏரில் பூட்டி விரட்டி அடிக்கலாம். புத்திசாலிப் பெண்ணாக இருந்ததால் அசடாகிறவரையில் காத்திருக்க வேண்டி யிருக்கிறதே!

''வாடாப்பா, வா...'' அத்தை வரவேற்றாள். அந்தக் குரல் எழுந்தால் வந்திருப்பவன் சுதாகர் என்பதை வகமதி அறிந்து கொள்வாள்.

''வக எங்கே?'' என்று அவன் கேட்டான்.

''மாடியில் இருக்கிறாள்.... இரு, காப்பி சாப்பிட்டு விட்டுப் போ. ஏண்டாப்பா, இன்ஷியூரன்ஸ் ஏஜண்டா குப்பை கொட்டுகிறாயே, இந்தப் பெண்ணின் மனசை இன்ஷ்யூர் பண்ண முடியவில்லையா உன்னால்?''

சுதாகர் சிரித்தான்.

''நாளைக் கடத்தினால் பாலிஸியே 'லேப்ஸா'கிவிடும்டாப்பா.''

''ஓஹோஹோ!'' சுதாகர் விலாப் புடைக்கக் கெக்கலித்தான்.

மாடிப் படி வளைவில் தோல் பையுடன் அவன் வருவது அழகான காட்சியாக இருந்தது. அவனே அழகன். நெளி நெளியாய்க் கேசம். மடிப்புக் கலையாத உடை. மடிப்புக் கலையாத முறுவல்.

''அத்தை சொல்வதைக் கேட்டாயல்லவா?'' என்றான்.


''உம்...''

''உன் பதில் என்ன? இந்த ஒரு 'பிஸினஸ்' இத்தனை வருஷங்களாய்த் திகைய மாட்டேன் என்கிறதே!''

''இதுவும் பிஸினஸ்தானா?''

''வாழ்க்கையே ஒரு வியாபாரம்தான், வக.... ஒன்றும் ஒன்றும் இரண்டாகி, பிறகு மூன்று நான்கு ஐந்தாகிற கூட்டல் கணக்கு யுகாந்தரமாக நடைபெற்று வருகிற சிருஷ்டி தர்மம்... ஐந்துக்கு மேல் குடும்பம் ஆறு, ஏழு என்று பெருகாது! நஷ்டத்தில் ஓடும்!''

அவள் அவனையே பார்த்தாள். அழகுக் கவர்ச்சிக்குப் பின் வாழ்க்கையை எடை போடுகிற அவனுடைய பொருளா



தார சித்தாந்தம் ஏனோ அவளுக்கு உள்ளூற அச்சத்தைத் தந்தது.

"உங்கள் விளக்கத்துக்கு நன்றி, சுதாகர். நான் வாழ்க்கைக் கணக்கில் நஷ்டத்தைக் காண விரும்புகிறேன்... அதாவது என்னையே இழக்க விரும்புகிறேன். உங்கள் நோக்கத்துக்கு இந்த வழி ஒத்து வராது" என்றாள் வசுமதி.

அவன் போய் விட்டான். நிச்சயமாக இந்த பிஸினஸ் திகையாமல் போனது அவனுக்கு வருத்தம்தான். ஆனால் இதுவே மற்றொரு வெற்றிக்கு அடித்தளம் என்கிற சமாதானம் கைவந்த மனசு அவனுக்கு.

"வாங்கோ.... வாங்கோ...." அத்தை உபசரித்தாள்.

அந்தக் குரல் எழுந்தால் வந்திருப்பவர் பேராசிரியர் சுந்தரம் என்பதை வசுமதி அறிந்து கொள்வாள். இரட்டை மண்டை படைத்தவர்களுக்கு அறிவும் இரட்டிப்பாக இருக்குமோ? அவருடைய பட்டங்கள் பெயருக்குப் பின் முழ நீளம் இருந்தன. இலேசாக முன் தலையில் வழுக்கை விழுந்திருந்தாலும் கண்களில் நல்ல கூர்மை மின்னும்.

"சுமதி எங்கே?"

"மாடியில் இருக்கிறாள். இருங்கள். காப்பி சாப்பிட்டு விட்டுப் பேச ஆரம்பிக்கலாம். பேசினால்தான் பொழுது போவதே தெரியாதே உங்களுக்கு?... இவ்வளவு பேசுகிறீர்களே, அவள் மனசை இன்னமும் தெரிந்து கொள்ள முடியவில்லையா உங்களால்?"

பேராசிரியர் முறுவலித்தார்.

"அவளுக்கு மனசாவது இருக்கிறதா என்று கண்டுபிடியுங்களேன்!"

இதற்கும் அழுத்தமான முறுவல். அவர் அதிகம் சிரிக்க மாட்டார்.

"அத்தைக்கு விசாரம், பாவம்!" என்றார் அவர் அவளிடம்.

"உம்..."

"உன் முடிவு என்ன சுமதி?"

அவளைச் 'சுமதி' என்றே அவர் அழைப்பார். வகரத்தை ஏன் விழுங்கி விட்டார் என்பது அவளுக்குப் புரிந்ததில்லை.

"அறிவற்ற வாழ்க்கை அர்த்தமற்றது. சுமதி என்றால் நல்ல புத்தி படைத்த பெண் என்று அர்த்தம். அந்தப் பெயரே எனக்கு உவப்பாக இருக்கிறது" என்றார் அவர், விளக்கமாக.

"அறிவு மட்டும் போதுமா ஸார்?"

"நல்ல கேள்வி கேட்டாய்... வேறு என்ன வேண்டும்? அறிவால் பணத்தைச் சம்பாதிக்கலாம்... அறிவால் நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். அறிவுதான் எதற்கும் அடிப்படை, சுமதி."

"அறிவற்ற ஜனங்கள் சந்தோஷமாக இல்லையா?"

"சந்தோஷம் என்பது அவரவர் மனநிலைக்கு ஏற்றவாறு உருவாவது. ஒருவருடைய சந்தோஷம் மற்றவருடைய துக்கத்துக்குக் காரணமாகவும் இருக்கலாமே! புத்திசாலி எங்கும் சந்தோஷமாக இருப்பான்."

"என் கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை."

ஒரு முறுவல். மூளையைத் தீட்டிக்கொள்கிற நிதானம். பிறகு பேச்சு வெளிப்பட்டது.

"சுமதி! அழகுக்காக நடைபெறுகிற திருமணங்களும் பணத்தை முன்னிட்டு நடைபெறுகிற திருமணங்களும் முடிவில் அர்த்தமற்றுப் போய் விடுகின்றன. அழகும் பணமும் காலத்தால் அழியும். அறிவோ விருத்தியாகும். புத்தி இல்லாமல் வாழ்கிற ஜனங்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்பதை என்னால் ஏற்க முடியாது. அவர்கள் பிரமையில் தங்களை ஏமாற்றிக் கொண்டு தவிக்கிறவர்கள். அவ்வளவே."

"நல்லது... எனக்கு அறிவு வேண்டாம். அது என்னைக் குழப்பிக் கொண்டே யிருக்கிறது."

பேராசிரியர் புறப்பட்டு விட்டார். 'ப்ராயி'டின் மனத் தத்துவத்தின்படி சுமதியின் இந்தப் போக்கு எந்த வகையைச் சேர்ந்தது என்பதைக் காண வேண்டும். முடிந்தால் இதையே ஒரு 'தீஸி'ஸாக எழுதிப் பட்டம் பெறலாம் போலிருக்கிறதே!

"அட தடி ராமா, இத்தனை நாட்கள் எங்கேடா போயிருந்தே?" என்று கூவினாள் அத்தை.

கப்புணி வந்திருக்கிறான் என்பது புரிந்து விட்டது வசுமதிக்கு. அவன் வருவதும் போவதும் ஒரு கணக்கில் அடங்காது. சில சமயம் வந்து கொண்டே யிருப்பான். அப்புறம் வலை போட்டுத் தேடினாலும் அகப்பட மாட்டான். கிராமத்தில் வெகு காலம் கழித்தவனாதலால் இன்னமும் முரட்டுத்தனம் அவனை விட்டுப் போகவில்லையோ என்று தோன்றும்.

"வடக்கே கல்கத்தா, பம்பாய் என்று சுற்றிவிட்டு வருகிறேன்" என்றான் கப்புணி.

"ஏது வடக்கே பயணம்?"

"பம்பாயில் வேலை கிடைக்கும்னு சொன்னார்கள். வேலையும் கிடைச்சது... நான்தான் ஓடுகாலியாயிற்றே! அங்கிருந்து கல்கத்தா போனேன். அங்கேயும் வேலை கிடைச்சது."

"பின்னே ஏன் வந்துட்டே?"

"எனக்கு எங்கேயும் தரிக்கவில்லை மாமி. வேலையை விட்டுப் போகவே கூடாது என்று மானேஜர், உதவி மானேஜர், டைரக்டர்கள் எல்லாம் 'கேரோ' செய்து பார்த்தார்கள். நான் கிளம்பி வந்து விட்டேன்."

"அட, போடா! அவனவன் வடக்கே போயி என்னமாப் பொழைக்கிறான்?"

"அதைச் சொல்லாதீர்கள், மாமி! பொழைக்கணும்னு வடக்கு என்ன, தெற்கு என்ன? டிம்பக்டூவுக்கு அனுப்புங்களேன், அங்கேயும் பிழைக்க முடியும். மனசு தரிக்கவில்லை என்றல்லவா சொல்கிறேன்!"

"அது ஏன் தரிக்கவில்லை?"

"அது மனசுக்கல்லவா தெரியும்! ஆணைப்பட்ட மகரிஷிகளுக்கே இந்த மனசு அடங்கவில்லையாமே, கேவலம் இந்தக் கப்புணிக்கு அடங்குமா?"

"சரி, சரி.. டிபன் காப்பி சாப்பிடு."

"ஏதேது இன்றைக்குக் கேசரியும் வடையும் செய்திருக்கிறீர்களே, என்ன விசேஷம்?"

"ஒரு விசேஷமும் இல்லை. நாக்குக்கு ருசியாக ஏதாவது வேணுமோ இல்லையோ?"

"வசுமதி எங்கே?"

வலியா?　　ஜலதோஷமா?





பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம், வலிகளைத் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கை கண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசை வலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானாலும், மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கைவசமே வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது



அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

கா-3769

''மாடியில் இருக்கிறான்.''

''நல்லவேளை, பிழைத்தேன்!''

''கல்கத்தாவிலிருந்து காசி ரொம்ப தூர மோடாப்பா?''

''யார் சொன்னது? கூப்பிடு தூரம்தான் மாமி. கேசரி ரொம்ப ஜோராக இருக்கிறது. காசிக்குப் போகணுமா? நான் அழைத்துக் கொண்டு போகிறேன். கவலைப்படாதேங்கோ. அடேடே, அடேடே... போதும், போதும்... இவ்வளவு கேசரியை எப்படிச் சாப்பிடுவது?''

வசுமதி கீழே இறங்கி வந்தாள்.

''நீ வந்துவிட்டாயா?.... வருவதற்குள் ஓடிவிட வேண்டுமென்று நினைத்தேன்'' என்றான் கப்புணி.

''ஏன்?'' என்றாள் அவள்.

''பயம்தான் காரணம்.''

''என்னைக் கண்டு நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்?''

''உனக்காக ஒரு பொம்மை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். அதைப் பார்த்தால் நீ கோபப்படுவாய். சத்தம் போடாமல் மாமியிடம் கொடுத்து விட்டு நழுவிவிடலாம் என்று பார்த்தேன்...''

''என்ன பொம்மை அது?''

''நீ கோபப்படுவதில்லை என்று சொன்னால் காட்டுகிறேன்.''

''கோபப்படும்படியான சாமானைத்தான் பரிசு தருவது உங்கள் வழக்கமோ?''

''அப்படி யில்லை, எனக்கு அந்தப் பொம்மையைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது. உடனே வாங்கி விட்டேன். அப்புறம்தான் ஒருவேளை உனக்குக் கோபம் வருமோ என்கிற சந்தேகம் வந்துவிட்டது.''

''காட்டுங்கள். சிரித்துவிட்டுக் கோபப்படுகிறேன்.''

அவன் அதைக் காட்டினான். அவளால் சிரிக்கமுடியவில்லை. ஒரு கருங்குரங்கு அவளைப் பார்த்து உறுமும்போது சிரிக்கவா முடியும்?

''முடிந்தால் சிரி. இல்லாவிட்டால் கோபித்துக்கொள். வெறுமனே உறுமினால் நன்றாக இல்லை'' என்றான் கப்புணி.

அதைக் கேட்ட பிறகு அவள் சிரித்து விட்டாள். தத்ரூபமான அந்தக் கருங்குரங்கு [illegible] சிரித்துக் கொண்டிருந்தது.

''கல்கத்தாவில் வாங்கினேன் உனக்காக.''


''வேறு பொருள் அகப்படவில்லையோ?''

''மனக்கும் பட்டை வாங்கி விட்டேன். அவ்வளவுதான்.''

''வடக்கே போய் என்ன தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டாள் வசுமதி.

[illegible]

[illegible] வன் பணம் பண்ணுகிறான்; உழைக்கிறவன் உழைக்கிறான். உல்லாசமாக வாழ்கிறவன் வாழ்கிறான். வடக்காவது தெற்காவது! மனசுதானே முக்கியம்? எனக்கென்னவோ ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. அங்கே எல்லாம் கோவில்களிலே நம் பக்கத்து அழகு இல்லை, வேலைப்பாடு இல்லே. ஆனால் தெய்வம் அங்கேயும் இருக்கிறது. நீ பார்க்கிற பார்வையில்தான் அழகு இருக்க வேணுமே தவிர



ரஷ்யாவைச் சேர்ந்த உஸ்பெக் நகரின் தெருக்களில் பல சிலைகளை வைக்கப் போகிறார்கள். இதில் உள்ள விசேஷம்: இந்தச் சிலைகள் மனிதனால் செதுக்கப்பட்டவை அல்ல. இயற்கையே செதுக்கிய சிற்பங்கள் இவை.

'ஜிரேனுடி' என்ற மலைப் பகுதியில், ''இயற்கை சிற்பக்கூடம்'' ஒன்று உள்ளது. கற்பாறைகள் உப்புக் காற்றாலும், தண்ணீராலும், சூரிய ஒளியாலும் அரிக்கப்பட்டு, அதன் விளைவாகக் கரடி, யானை, நாய் முதலியவை போல் உருவம் பெற்றன. இப்படி இயற்கையாகவே சிலை ஆகிய சில பொருள்கள்தான் மேற்படி கலைக்கூடத்தில் உள்ளன. இந்த இயற்கைச் சிலைகளில் சிலதான் ''உஸ்பெக்'' நகரை அலங்கரிக்கப் போகின்றன!

—தகவல்: சம்பத் குமார்

* * *

பார்க்கப்படுகிற பொருளில் அழகு இருக்க வேணும்னு அவசியம் இல்லே.''

''அழகாகப் பேசறேடாப்பா!'' என்றாள் அத்தை.

உண்மைதான். பெரிய தத்துவத்தைச் சுலபமாக அவன் பேசிவிட்டான் என்று வசுமதிக்குத் தோன்றியது.

''ஆனால் பேசினால் ஆயிடுத்தா? நல்ல வேலையை விட்டுட்டு வந்து நிற்கிறியே புத்தியில்லாமல்!'' என்றாள் அத்தை.

அவன் சிரித்தான். ''வேலையை நான் உதறுவேன், மாமி. ஆனால் வேலை என்னை உதறுது. [illegible]

[illegible]

''அப்படிப்பட்ட உத்தியோகத்தை விடுவானேன்?''

''மனசு தரிக்கவில்லையே.''

அத்தைக்கு இந்த விளக்கம் புரியவில்லை என்பதல்ல; பிடிக்கவில்லை. ஆண் பிள்ளையாகப் பிறந்தவர்கள் பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டும் என்பது அவள் கொள்கை. வாசற் பக்கம் போனான், 'எக்கேடு கெட்டால் எனக்கு என்ன?' என்று எண்ணியவாறே.

''மனசு ஏன் தரிக்கவில்லை?'' என்று கேட்டாள் வசுமதி.

அவன் சிரித்தான். ''வசுமதி! என்னால் கல்கத்தாவிலும் இருக்க முடியாது, பம்பாயிலும் இருக்க முடியாது. இந்த ஊரை விட்டு என்னால் எங்கேயும் போகவும் இனிமேல் முடியாது'' என்றான்.

''ஏன்?''

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அந்தப் பார்வை அவளைக் குடைவதுபோல் இருந்தது.

''வசுமதி! உனக்குப் புரியவில்லையா?''

அவளுக்குக் குபீரென்று உடலே குளிர்ந்து விட்டது. கப்புணியின் நெஞ்சில் பொங்கி நின்ற தாபம் அவனுடைய கண்களின் வழியே பொத்துக் கொண்டு வந்தது.

''மனம் தரிக்கவில்லை. இதை அங்கேயெல்லாம் போய்த்தான் நான் தெரிந்து கொண்டேன், வசுமதி. ஏன் இங்கேயே அது தெரியக் கூடாதோ? சில ரகசியங்கள் சில சந்தர்ப்பங்களில்தான் வெளிப்படும் போலிருக்கிறது.''

''ஆமாம்'' என்றாள் அவள். அவளுக்கும் அப்போதுதானே அந்த ரகசியம் புலனாகியிருக்கிறது!

அவன் அழகனல்ல, சுதாகரைப் போல. அறிவாளி அல்ல, பேராசிரியரைப் போல. ஆனால் அவர்கள் இருவருக்கும் இவனுடைய மனசு இல்லையே! கருங் குரங்கைப் பிடித்து வந்தாலும் அது சிரிக்கிறது. மனசின் பாஷை விசித்திரமானதுதான்.

''இதோ பார், நான் வெறும் கப்புணிதான். ஆனால் உன்னை வசுமதியாக என்றென்றைக்கும் போஷிக்க முடியும் என்னால். சும்மா போக்குக் காட்டினால் நான் மசியப் போவதில்லை. இப்போது தீர்மானமாக வந்திருக்கிறேன்'' என்றான் அவன்.

''என்ன தீர்மானம்?'' என்று கேட்டாள் அவள் கேலியாக.

''உன்னைக் கொத்திக் கொண்டு போவது என்கிற தீர்மானம்.''

''ஓஹோ!''

''என்ன ஓஹோ?.. இனிமேல் நீ தப்பிக்க முடியாது. ஆமாம்.''

''இப்படி மிரட்டுவதுதான் அழகோ?''

''பின்னே என்ன? நீ முரண்டு பிடித்தால் அதுதான் வழி.''

''நான் முரண்டு பிடிக்கிறேனா?''

''இல்லையா?... வசுமதி, நீ....நீ...?''

அத்தை வந்து விட்டாள். அவள் முகம் சிவந்திருந்தது. புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு கப்புணியைக் கண்டு நாணியவாறு அவள் நழுவுவதைப் பார்த்தால் அநேகமாக அவர்களுடைய உரையாடலை அவள் கேட்டுவிட்டாள் என்று புரிந்தது.

வசுமதி வெட்கத்துடன் மாடிக்கு ஓடினாள்.

மறுநாள் காலையில் அப்பா செய்தித் தாளைப் பார்க்க அவகாசம் இல்லாமல் நல்ல நாள் பார்க்கிற காரியத்தில் ஈடுபட்டிருந்தார்.

அத்தைதான் 'தை, தை' என்று குதிக்கிறாள். தை வர இன்னும் மொட்டு மொட்டென்று இருபது நாட்கள் காத்திருக்க வேண்டுமே!

வசுமதி பெருமூச்சு விடுகிறாள், நிலவைப் பார்த்து.


துறவறத் துறவுக்குத் தண்டனை

எழுநூறாண்டுகளுக்கு முன் பிரயாகை வெள்ளத்தில் விட்டல் பந்தும் அவர் மனையாள் ரகமாபாயும் விழுந்து மாண்ட போது உருகாத நெஞ்சில்லை. அதுகாறும் அவர்களைத் தூஷித்து வந்தவர்களும் அவர்களது குழந்தைகளிடம் இப்போது பரிவும் பரிதாபமும் கொண்டனர்.


அதுகாறும் ஏன் தூஷித்தனர்? இடைக் காலத்தில் சந்நியாச ஆசிரமம் பூண்டிருந்த விட்டல் பந்த் துறவறத்தைத் துறந்து மீண்டும் ரகமாபாயுடன் குடும்பம் நடத்தியதால் தூஷணைக்கு ஆளானார்.

மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த விட்டல் பந்துக்கு இளமையிலிருந்தே துறவறத்தில்தான் ஆசை. அவர் க்ஷேத்திராடனம் புரிந்து வருகையில் ஆளந்தியில் ஸித்தோபந்த் என்ற பிராமணர் தமது மகள் ரகமாபாயை அவருக்கு மணம் முடிக்க விரும்பினார். விட்டல் பந்த் மறுத்தார். ஆனால் அன்றிரவு அவரது கனவில் ஆண்டவனே தோன்றி ரகமாபாயை ஏற்குமாறு பணித்தான். திருமணமும் ஆயிற்று.

ஆயின் விட்டல் பந்தின் மனம் இல்வாழ்க்கையில் ஈடுபடவில்லை. அவர் வீட்டை விட்டுக் காசி சென்றடைந்து, அங்கு ராமாநந்த ஸ்வாமியிடம் சந்நியாஸம் பெற்றார். விஷயம் அறிந்த மாமனார்க்காரர் காசிக்கு வந்து, விட்டல் பந்தை வற்புறுத்தி மீண்டும் மஹாராஷ்டிரத்துக்கு அழைத்து வந்து மண வாழ்க்கையில் ஈடுபடுத்தினார். விதியை நொந்து கொண்டு விட்டல்பந்த் சந்நியாசத்தை விடுத்து மீண்டும் கிருஹஸ்தரானார். நாலு குழந்தைகளுக்குத் தந்தையுமானார். அவற்றில் மூன்று ஆண் பிள்ளைகள். விட்டல் பந்த் ஆசிரம தருமங்களை மீறியதால் இப் பிள்ளைகளுக்கு விரதபந்தனம் செய்ய முடியாது என்று பிராமணர்கள் மறுத்து பகிஷ்கரித்த போதுதான் அத்தம்பதி பயங்கரமான முடிவுக்கு வந்தனர். பிரயாகை சென்று தற்கொலை செய்து கொண்டனர். அதன்பின் விரதபந்தனம் செய்யப்பட்ட குழந்தைகளில் ஒருவரே ஞானேசுவரர். தமது பதினைந்தாவது வயதிலேயே கீதைக்கு ஞானேசுவரி என்ற உரை எழுதி மஹாராஷ்டிர இலக்கியத்துக்கும் பக்தி மதத்துக்கும் அடிகோலிய மகா புருஷர் இந்த ஞானேசுவரர். —வி.



ஹைதராபாத் பிரமுகரும் பிரபல வக்கீலுமான ஸ்ரீ நரசிம்ம அய்யங்கார் அவர்களுக்கு 2-11-67ல் ஸ்ரீ ஏழுமலையான் புண்ணிய பூமியில் 71வது வயது பூர்த்தி வைபவம் நடந்தபோது திருப்பதி ஸ்ரீவேதாந்த தேசிக ஸ்ரீஸூக்தி சுதாஸ்வாதினி சபாவின் தரப்பில் ஸ்ரீ வேங்கடபக்தி பூஷண: என்ற பட்டத்தை அளித்துக் கவுரவிக்கப்பட்டார்.



உயர்திருவாளர் சுப்பையா பிள்ளை அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா 2-11-67 அன்று திருநெல்வேலியில் அதிவிமரிசையாக நடந்தேறியது. ஏராளமான பிரமுகர்களும், பந்து மித்திரர்களும் குழுமியிருந்து அறுபதாண்டு நிறைந்த மூத்த தம்பதியரை வணங்கி ஆசி பெற்றனர். திரு சுப்பையா பிள்ளை அவர்களின் குமாரர் எழுத்தாளர் திரு ர. சு. நல்லபெருமாள் தம் தந்தையிடம் ஆசி பெறுவதைப் படத்தில் காணலாம்.

கல்யாணம் ஆனால்....

"நான் மகிழ்ச்சியோடு இருப்பேனா என்று பார்த்துச் சொல்லுங்கள் ஜோசியர் ஐயா!"

"கல்யாணம் ஆனால் மகிழ்வோடு இருப்பாய்!"

"சரி, கல்யாணம் ஆகுமா என்று பார்த்துச் சொல்லுங்கள்!"

"ஒரு வேலை கிடைத்தால் நிச்சயம் கல்யாணம் ஆகிவிடும்!"



"அப்படியானால் வேலை கிடைக்குமா என்றுதான் பாருங்களேன்!"

"பரீட்சை பாஸானால் வேலை கிடைப்பது உறுதி!"

"தயவு செய்து பரீட்சை பாஸாகுமா என்று பார்த்து விடுங்கள்!"

"நன்றாக எழுதியிருந்தால் பாஸாக என்ன தடை?"

"பின்னே நன்றாக எழுதியிருக்கிறேனா என்று பார்த்துச் சொல்லுங்கள்...!"

"நன்றாக எழுதியிருக்கிறாயா, இல்லையா என்று எனக்கு எப்படித் தெரியும்? உனக்குத் தானே தெரியும்?"

— கலாசாமி

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சர்ச்சிலுக்கும் அடி சறுக்கும்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம், சர்ச்சில் ஒரு போர்க் கப்பலுக்கு விஜயம் செய்தார். அங்கு ஒரு பகுதியில் ஓர் இளம் அதிகாரி தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் மாலுமிகளிடம் சகஜமாகப் பழகுகிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினார் சர்ச்சில். "உங்களுடைய பிரிவில் பணியாற்றும் அனைவரின் பெயர்களும் உங்களுக்குத் தெரியுமா?" என்றார். அவருடைய கேள்வி அதிகாரியைத் திடுக்கிட வைத்தது. ஆனால் அந்தக் கணமே சமாளித்துக் கொண்டு பதில் அளித்தார்: "ஓ! தெரியும் சார்!" என்றார். சர்ச்சில் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டார்; அருகில் இருந்த ஒரு வீரனைச் சுட்டிக் காண்பித்து, "இவருடைய பெயர் என்ன?" என்று வினவினார். உடனே துணிவுடன் "ஆர்தர் ஸ்மித் சார்" என்றார் அதிகாரி. அதிகாரி கூறியது சரிதானா என்று அறிய விரும்பிய சர்ச்சில் அவ்வீரனை அழைத்தார். "உன் பெயர் என்ன?" என்று வினவினார். புத்திசாலியான அந்த வீரன் சிறிதும் தயங்காமல் "ஆர்தர் ஸ்மித், சார்!" என்று பதில் தந்தான். ஆனால் உண்மையில் அவனுடைய பெயர் வில்லியம்.



— புதியவன்

வீராங்கனையின் காதல் கடை

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனியில் விமான ஓட்டியாகப் பணி செய்தவள் ஃப்ராங் ஊஹ்ஸே. பெர்லினை ருஷியா கைப்பற்றியபோது இவளும் மாட்டிக் கொண்டாள். அவசர அவசரமாக ஒரு சிறிய விமானத்தில் ஏறித் தன் கைக்குழந்தையோடு தப்பினாள். ஆனால் அதிலும் பிடிபட்டு விட்டாள்.

இன்று நாற்பத்தியேழு வயதிலும் கவர்ச்சி குன்றாத ஃப்ராங் ஊஹ்ஸே அதே ஜெர்மனியிலுள்ள ஃப்ராங் ஃபோர்ட்டில் உலகமே கண்டறியாத பெரும் 'காதல் கடை' வைத்திருக்கிறாள். 'காதல் கடை' என்று சொன்னால் போதாது. 'காதல் ஸூபர் மார்க்கெட்' என்றே சொல்ல வேண்டும். அங்கு விற்கப்படுபவை அத்தனையும் சிருங்கார சாதனங்கள்தாம். அழைக்கும் போது நடனமிக் கொள்ள ஓர் உடுப்பு; இதைத் தடவி ஸ்நானம் செய்தால் உடல் மின்னுமாம். தித்திக்கும் சாக்லேட்டுகள்: இவற்றைச் சுவைத்தாலே காதல் சிந்தனைகளைக் கிண்டி விடுமாம். இங்கு விற்கும் ஒரு வாசனைத் திரவியத்தைத் தெளித்துக் கொண்டால் எதிராளி உங்களிடம் 'நிபந்தனையின்றிச் சரணாகதி' அடைந்துவிடுவாராம். இன்னும் இங்கு சொல்லத் தகாத பல உபகரணங்களும் உண்டு. இப்படிப்பட்ட காதல் சாதனங்களை விற்று வருஷத்துக்கு மூன்று கோடிக்கு மேல் சம்பாதிக்கிறாள் ஊஹ்ஸே. நாலே சிப்பந்திகளுடன் 1951ல் இக்கடையைத் தொடங்கினாள். இன்று நூற்றுக்கணக்கான சிப்பந்திகளும் போதாமல் கம்ப்யூட்டர்களையும் வைத்துக் கொண்டு வியாபாரம் நடத்த வேண்டியிருக்கிறதாம். இக்கடையின் வாடிக்கைக்காரர்கள் இருபது லட்சம்பேர் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.



இருபத்தியொரு வயதுக்கு மேலானவர்களே இங்கு அனுமதிக்கப்படுவதால் ஊஹ்ஸே மீது ஜெர்மானிய சர்க்காரால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆயினும் அவள் தன் தொழிலுக்குப் புறம்பான தொழில் செய்வதாகப் பலர் அவ்வப்போது வழக்குத் தொடுத்துத்தான் வருகிறார்கள்.

ஆதாரம்: 'ஹிந்து' ஞாயிறு சஞ்சிகை

இருகலந்த லட்சணம்

தவறு செய்திருக்கும்பொழுது பணிந்து போகிறவன் புத்திமான். ஆனால் தவறு செய்யாதிருக்கும்போது பணிந்து போகிறவன் கல்யாணமானவன்.

ஆதாரம்: 'இங்கிலீஷ் டைஜஸ்ட்'
தகவல்: 'விஸ்கி'

ஷா - அப்பாஸ்: ஒரு சபாஷ்!

மகிழ்வான அல்லது மெச்சத்தக்க செயலை ஒருவர் செய்தபோதும், அல்லது கேள்விப் படும் போதும் சம்பந்தப்பட்டவர்களின் கையைப் பிடித்துக் குலுக்கி, 'சபாஷ்' என்கிறோம்.

இந்த 'சபாஷ்' எங்கிருந்து எப்படி வந்தது?

1587-ல் பாரசீகத்தை ஷா—அப்பாஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அப்போது பாரசீகத்தைக் கைப்பற்ற துருக்கியும் உஸ்பெக்கும் முயன்றன. ஆனால் இவர்களை எதிர்த்து ஷா — அப்பாஸே வென்றான்.

1607ல் ஷா—அப்பாஸ் இந்தியாவின் மீது படையெடுத்தபோது, ஷா — அப்பாஸை வென்றவன் ஜஹாங்கிர்.




தோல்வி கண்ட ஷா — அப்பாஸ், தனது தோல்வியை மறைக்கத் தந்திரம் ஒன்றைக் கையாண்டான். தான் ஜஹாங்கிருடன் நட்புப் பாராட்டியே வருவதாகவும், தனக்குத் தெரியாமல் படையெடுப்பு நடந்து விட்டதாகவும், தன் வீரர்களில் பெரும்பாலோர் தற்போது கூட ஜஹாங்கிருடன் நட்புப் பாராட்டியே வருவதாகவும், தனக்குத் தெரியாமல் படையெடுப்புச் செய்த ஒருசில வீரர்கள் ஜஹாங்கிருடன் போரிட்டதைத் தான் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், முஸ்லிம்களாகிய தாங்கள் இருவரும் ஒற்றுமையாகவே இருக்க விரும்புவதாகவும் ஷா — அப்பாஸ் ஜஹாங்கிருக்கு ஓலை அனுப்பினான்.

இதன் உண்மையை அறிந்த ஜஹாங்கிர் ஷா-அப்பாஸின் புத்தி கூர்மையை மெச்சினான். தோல்வி தன்னைத் தழுவி இழிவு உண்டாக்கக் கூடாது என்பதற்காக ஷா—அப்பாஸ் கையாண்ட முறையைப் பாராட்டினான்.

அது முதல் மெச்சத் தக்க செயல்களை யார் செய்தாலும் 'ஷா......அப்பாஸ்' என்று பாராட்டலானான். ஷா - அப்பாஸிலிருந்தே ஷ...... பாஸ், சபாஷ் என்று பாராட்டும் வழக்கம் உண்டாகி விட்டது.

தகவல்: ஆர். சலாமுல்லா

சுருங்கச் சொல்லல்



பிரெஞ்சு ஆசிரியரான பாஸ்கல் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கூறுகிறார்: 'கடிதத்தை மிக நீட்டிவிட்டேன். காரணம் இதைவிடச் சுருக்கமாக எழுத எனக்கு அவகாசம் இல்லாததுதான்.'

ஆதாரம்: 'கரோனெட்' தகவல்: 'ஜானகி'

ஆண்டுக்கொரு கோடி!

★ ஒரு மணி நேரம் தினமும் படிக்கும் ஒருவர் ஒரு வருஷத்தில் ஒரு கோடி வார்த்தைகளைப் படிக்கிறார்.

★ 24 மணி நேரத்துக்குள் உங்கள் தலை ரோமம் ஓர் அங்குலத்தில் ஐந்தில் ஒரு பங்கு வளர்கிறது.

★ 23 செகண்டுகளுக்குள்ளாக இரத்தம் தேகத்தை ஒரு சுற்றுச் சுற்றி வருகிறது.


பணக்கார ஏழைகள்


குபேர நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலும் ஏழைகள் இல்லாமல் இல்லை. அங்கு மொத்தம் 46 லட்சம் பேர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் உழல்கிறார்கள். கல்வி இல்லாமை, நோய் இவைகள்தான் வறுமைக்குக் காரணம். இவர்களுக்கெல்லாம் அரசாங்கம் உதவிப் பணம் கொடுத்து ஆதரித்து வருகிறது. வருடத்துக்கு இதற்காக அரசாங்கம் 200 கோடி ரூபாய் செலவழிக்கிறது. மொத்தம் 60 லட்சம் அமெரிக்கர்கள் அரசாங்க ஆதரவில் இருக்கிறார்களாம். இவர்கள் குடியிருப்பது சுகாதார வசதியில்லாத வீடுகளில். சாப்பிடுவது பெரும்பாலும் பீன்ஸ்தான்.

ஆனால் அமெரிக்க ஏழைக்கும் மற்ற ஏழைகளுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! 'கெண்டக்கி' என்ற இடம் தரித்திரத்துக்குப் பேர்போனது. இங்கே இருப்பவர்களில் 88 சதவிகிதக் குடும்பங்களில் துணி துவைக்கும் இயந்திரம் உண்டு. 67 சதவிகித வீடுகளில் டெலிவிஷன் இருக்கிறது. 42 சதவீதக் குடும்பங்களில் டெலிபோன் உண்டு. 55 சதவீத ஜனங்களிடம் கார் இருக்கிறது!


ஆதாரம்: 'நியூஸ் வீக்'

தகவல்: கே. ராமச்சந்திரன்





ரொம்பப்
பெரிதும் அல்ல
ரொம்பச்
சிறிதும் அல்ல




1½ டன் எடை சாமான் ஏற்றும்

பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. குறுகச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D 300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும், போக்குவரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300.

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் ● 3,112 மி.மீ. (123") WB அல்லது 3,366 மி.மீ. (133") WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் ● சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

* (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)



“குளித்துவிட்டு அரை மணி நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சமையல் ஆகவில்லையா?” என்று ஒன்பது மணிக்கே பறந்தான் செல்லப்பா.

“இந்த ஞாயிற்றுக்கிழமையும் ஆபீசுக்குப் போக வேண்டுமா உங்களுக்கு?” என்றாள் பூமா.

“போகாவிட்டால் மலை மலையாகக் குவிந்து கிடக்கும் வேலைகளையெல்லாம் செய்ய அஸிஸ்டெண்டா இருக்கிறான்?”

“இப்படி ஞாயிற்றுக்கிழமைகூட ஓய்வெடுத்துக் கொள்ளாமல் உழைக்கிறீர்கள், மற்ற நாட்களிலும் வீட்டுக்கு வருவதற்கு இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகிறது. ‘ஓவர் டைமா'வது கொடுக்கிறார்களா? இப்படி உயிரை விட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?”

“ஓவர்டைமா! நன்றாகச் சொன்னாய் போ! வேலையை விட்டு நீக்காமலிருக்க வேண்டுமே என்று நான் பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்... அதுதான் முன்பே சொன்னேனே, கம்பெனிக்குப் போதுமான லாபம் கிடைக்கவில்லை என்று

சீட்டுக்குக் கிழித்த சீட்டு

எஸ். வைத்தியநாதன்



எட்டுப் பேருக்குச் சீட்டுக் கிழித்து அனுப்பி விட்டார்கள். நல்ல வேளையாக நான் தப்பினேன். அந்த எட்டுப் பேர்களின் வேலைகளையும் சீட்டுக் கிழியாத நாங்கள்தான் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டியிருக்கிறது. ஓவர் டைம் அலவன்ஸ் கேட்டால் வீட்டுக்கு அனுப்பி விடுவான்!”

“இப்படியா பிழிந்தெடுப்பான் ஒரு ஆபீஸில்! நன்றாய்த்தானிருக்கு! ஆமாம், போனஸ் என்ன ஆச்சு? இன்னும் முடிவாகவில்லை என்று சொன்னீர்களே!”

“கம்பெனிக்கு லாபம் இல்லையென்றால், போனஸ் எப்படிக் கிடைக்கும்? இந்த வருஷம் போனஸ், கீனஸ் என்று மூச்சுக் காட்டக்கூடாது என்று கண்டித்துச் சொல்லி விட்டார்கள்!

“போனஸ் கிடையாது, ஓவர் டைம் கிடையாது! ஆனால் வேலை மட்டும் இராப் பகலா ராட்சஸன் மாதிரி செய்ய வேண்டும்! இந்த அக்கிரமம் எங்கே அடுக்கும்?”

“அடுக்குமோ அடுக்காதோ, அதற்கும் விதியற்றுப் போய்த்தானே வேலை பார்க்கிறோம் அங்கே! உத்தியோகம் பார்த்துத்தான் ஆகணும் என்று அவர்கள் ஒன்றும் கட்டாயப்படுத்தவில்லை! நமக்குக் கஷ்டமாயிருந்தால் விலகிக் கொள்வதை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை!....சரி சரி, நீ போய்ச் சீக்கிரம் இலையைப் போடும் வழியைப் பார்.”

பூமா போய் விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் செல்லப்பா சாப்பிட்டு விட்டுக் கிளம்பி விட்டான்.

காலை ஒன்பதரை மணியிலிருந்து இரவு பதினொரு மணி வரை, ஞாயிற்றுக்கிழமை உள்பட ஓடாக உழைக்கும் கணவனுக்கு உடல் நலம் குன்றாமல் இருக்க வேண்டுமே என்று பிரார்த்தித்துக் கொண்டாள் பூமா.

அன்று மத்தியானம் அழுக்கெடுத்துக் கொண்டு போவதற்காகச் சலவைக்காரன் வந்தான். துணிகளை எடுத்துப் போட்ட பூமாவின் கையில் செல்லப்பாவின் சொக்காய் ஒன்றின் பையிலிருந்த கடிதம் ஒன்று கிடைத்தது. கிராமத்தில் இருக்கும் செல்லப்பாவின் தந்தை எழுதிய கடிதம் அது என்பதைக் கவனித்தாள் பூமா. ‘இது எப்போது வந்தது? அவர் என்னிடம் சொல்லவே இல்லையே!' என்று வியப்புடன் எண்ணமிட்டவாறு துணிகளைக் கணக்கெழுதிக் கொண்டு சலவைக்காரனிடம் போட்டு அனுப்பிய பிறகு அக்கடிதத்தைப் படிக்கலுற்றாள்.

இரண்டு நாள் முந்தி வந்திருந்த அந்தக் கடிதத்தில் அவள் மாமனார் எழுதியிருந்ததாவது:

''அன்புள்ள செல்லப்பாவுக்கு, ஆசீர்வாதம். இங்கு உன் அக்காவும் அம்மாவும் நானும் சௌக்கியம்..... போன மாசமே நீ பணம் அனுப்பவில்லை. என்னமோ சமாதானம் எழுதிவிட்டாய். இந்த மாசமும் இன்று இருபத்து நாலு தேதி ஆகியும் நீ ஒன்றும் அனுப்பவில்லை. வயசான காலத்தில் எங்களுக்கு எவ்வளவு திண்டாட்டமாக இருக்கும் என்பது உனக்குத் தெரியாததல்ல. ரொம்பச் சிரமப்படுகிறோம்....ஆகவே இந்தக் கடிதம் கண்ட உடனேயாவது பணம் அனுப்புவாய் என்று எதிர்பார்க்கிறேன். பூமாவும், குழந்தையும் சௌக்கியமா?

அன்புள்ள அப்பா.''

துளியும் எதிர்பாராதது இந்தச் செய்தி. பூமாவுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

செல்லப்பாவின் அப்பா தங்கள் சொந்தக் கிராமமாகிய மாங்காட்டில் கிராம போஸ்ட் மாஸ்டரா யிருந்தார். அந்த உத்தியோகத்தில் அவர் சம்பாதித்தது ரூபாய் இருபத்தைந்து. அதை வைத்துக் கொண்டு அவர், அவர் மனைவி, அவருடைய விதவைப் பெண் ஆகிய மூவரும் எப்படிச் சாப்பிட முடியும்? எனவே, செல்லப்பா தன் சம்பளத்திலிருந்து மாதாமாதம் ஐம்பது ரூபாய் அப்பாவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தான். இரண்டு மாசமாக அந்தப் பணம் அவருக்கு ஏன் அனுப்பப்படவில்லை?

செல்லப்பாவுக்கு நூற்று எழுபத்தைந்து ரூபாய் சம்பளம். பிடிப்பெல்லாம் போகக் கைக்கு நூற்றைம்பதுதான் வரும். அதில் அப்பாவுக்கு ஐம்பது ரூபாய் அனுப்பியது போக நூறு ரூபாயைக் கொணர்ந்து பூமாவின் கையில் கொடுப்பான். அதை வைத்துக்கொண்டு அவள் கணவன், தான், இரண்டரை வயசுக் குழந்தை ஆகிய மூவர் கொண்ட குடும்பத்தை நடத்த வேண்டும். சிரமமான சர்க்கஸ் வேலைதான். என்றாலும் இடறி விழாமல், அடிபடாமல், காயம் படாமல், மிக்க சாமர்த்தியத்துடன் அந்த வேலையைச் செய்து வந்தாள் பூமா. செட்டும் கட்டுமாகக் குடித்தனம் பண்ணி, பைசா கடன் வாங்காமல், அண்டை அயலார் மதிப்பில் மிக்க கௌரவமான ஸ்தானத்துடன்காலம் தள்ளி வந்தாள்.

சென்ற இரு மாதங்களிலும் வழக்கம்போல் அவளிடம் நூறு ரூபாய் கொடுத்தான் செல்லப்பா. மீதிப் பணம் என்னவாயிற்று? ஏன் அப்பாவுக்கு அனுப்பவில்லை? அதைப் பற்றித் தன்னிடம்கூட அவன் ஏன் ஒன்றும் சொல்லவில்லை? இந்தக் கடிதம் வந்து இரண்டு நாட்கள் ஆகியும் இதைப் பற்றியும் அவன் பிரஸ்தாபிக்காத மர்மம் என்ன?

அந்தப் புதிரை விடுவிக்க வேண்டும் என்ற குறுகுறுப்பை அவளால் உதற முடியவில்லை. உள்ளத்தின் கொந்தளிப்பைத் தாங்க முடியாமல் அன்று மாலை ராமலிங்கத்தின் வீட்டை நோக்கிக் கிளம்பினாள். ராமலிங்கம் செல்லப்பாவின் ஆபீஸ் சகா. அப்போது ராமலிங்கம் வீட்டில் இருந்தான்.

பூமா விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று தயங்கிக் கொண்டிருக்கையில் ராமலிங்கமே அதைத் தொடங்கி அவள் காரியத்தை எளிதாக்கி விட்டான். ''ஏன், அம்மா! செல்லப்பாவுக்கு நீங்களாவது புத்திமதி சொல்லி அவனைத் தடுக்கக் கூடாதா? இப்படி அழிந்து போகிறானே!''

திடுக்கிட்ட பூமா, ''ஏன், எதைச் சொல்கிறீர்கள் நீங்கள்?'' என்றாள்.

''அடப் பாவமே! விஷயமே தெரியாதா உங்களுக்கு?'' என்று ராமலிங்கம் செய்தியைக் கூறினான்.

செல்லப்பாவுக்கு இரண்டு மாத காலமாகச் சூதாட்டப் பைத்தியம் பிடித்திருக்கிறதாம். ரங்



காட்ட கோஷ்டியில் சேர்ந்திருந்தாலும் அவன். மணவாளன் என்னும் கைதேர்ந்த சூதாடியின் வீட்டில் நித்தியம் ஜமா சேர்கிறதாம். தவறாமல் அங்கு ஆஜராகி விடுகிறானும் செல்லப்பாவும். தினம் தப்பாமல் தோற்கிறானும்.

பேயினால் அறையப்பட்டவள்போல் ஆனாள் பூமா.

"அவன் தினமும் பாதி ராத்திரியில் வருவதைப் பற்றி நீங்கள் எதுவும் கேட்பதில்லையா?..... இன்றுகூட அவன் போயிருப்பானே! விடுமுறை நாட்களில் காலை பத்தரை மணிக்கே 'ஸெஷன்ஸ்' ஆரம்பமாகி விடுகிறதாம்! நீங்கள் அதைப் பற்றியும் விசாரிக்கவில்லையா?"

பூமா என்ன பதில் சொல்வாள்? மாமனுக்குப் போக வேண்டிய பணம் என்னவாயிற்று என்று புரிந்து விட்டது.

கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "இந்த வருஷம் போனஸ் கொடுத்தார்களா?" என்று கேட்டாள் பூமா.

"கொடுக்காமல் என்ன? மேளதாளத்தோடு கொடுத்தார்கள். போன மாசம் முப்பதாந்தேதியே சம்பளத்தோடு இன்னொரு மாதச் சம்பளத் தொகையையும் போனஸாகக் கொடுத்து விட்டார்கள். போனஸ் கொடுக்கவில்லை என்றானா செல்லப்பா? சதுர்முக யாகத்தில் ஆகுதியாகியிருக்கும்..... பாவிப் பயல்!"

"நீங்களெல்லாம் புத்தி சொல்லக் கூடாதா?" என்றாள் பூமா குமுறியபடி.

"எவ்வளவோ சொல்லி விட்டோம் அம்மா! அவன் கேட்டால்தானே! நாங்கள் எல்லோரும் ஓரளவுதான் சொல்லலாம். எல்லையை மீறினால், "உனக்கென்னடா, உங்கப்பன் வீட்டுப் பணத்தையா தோற்கிறேன்?" என்று கேட்டுவிட்டால் எங்கள் மரியாதை என்னவாகும்?..... நீங்கள்தான் அவனைச் சீர்திருத்த வேண்டும், புத்திமதிகூறி! அது உங்கள் உரிமை... கடமையும்கூட!"

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள் பூமா, குமுறும் உள்ளமும், துடிக்கும் இதயமும் பற்றியெரியும் வயிறுமாக.

அன்றிரவு பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டான் செல்லப்பா.

அவன் சாப்பிட்டுவிட்டுக் கையலம்பட்டும் என்று காத்துக் கொண்டிருந்த பூமா, "ஏன், இன்று சற்றுச் சீக்கிரமாகவே வந்து விட்டீர்கள்? கச்சேரியே முடிந்துவிட்டதா? அல்லது உங்கள் கைக்காசெல்லாம் தீர்ந்து விட்டதா?" என்றாள் ஏகத்தாளமாக.

"கச்சேரியா! காசா!" என்று திடுக்கிட்டான் செல்லப்பா.

"ஆமாம், கச்சேரிதான்! மணவாளன் வீட்டில் நடக்கிறதே அந்தக் கச்சேரி! அந்தக் கச்சேரிக்குத்தான் உங்கள் போனஸ் பணம் தத்தமாகியிருக்கிறது. அந்தக் கச்சேரிதான் இரண்டு மாசமாக உங்களை, 'அப்பாவுக்கு அனுப்ப வேண்டிய பணத்தை இங்கே கொண்டு வா!' என்று கேட்டு வாங்கி விழுங்கி இருக்கிறது!"

ஒரு கணம் ஆடு திருடிய கள்ளனைப் போல் விழித்த செல்லப்பா தாங்கவொண்ணு சீற்றத்துடன் உறுமினான்: "எனக்கு வந்த கடிதத்தை நீ எதற்காகப் படித்தாய்? என்ன ஈனத்தனமான வேலை இது!"

"நீங்கள் செய்து கொண்டிருப்பதை விடவா ஈனத்தனமான வேலை இது?"

"கொஞ்சம் ஜாக்கிரதையாகவே பேசு! இல்லா விட்டால் நான் ரொம்பப் பொல்லாதவனாயிருப்பேன்! நான் எங்கப்பாவுக்குப் பணம் அனுப்புவேன், அனுப்பாமல் இருப்பேன். அதைப் பற்றிக் கேட்க நீ யார்?" என்று கத்தினான் செல்லப்பா.

"நானா! நீங்கள் தாலி கட்டிய உங்கள் மனைவி!.... நீங்கள் சீரழிவதைத் தடுக்க உரிமையும் கடமையும் உள்ளவள்!"

"போதும்! போனால் போகிறதென்று பார்த்தால் அதிகப் பிரசங்கம் வரம்பு மீறப் போகிறதே! மீண்டும் இந்தத் தோரணையில் பேசுவாயானால் பல்லை உடைத்து விடுவேன்! ஜாக்கிரதை! என் சம்பளத்தை என் இஷ்டப்படி எது வேணுமானாலும் செய்வேன் நான். நீ அதையெல்லாம் பற்றி விமரிசன வியாக்கியானங்கள் செய்ய வேண்டியதில்லை" என்று கூச்சலிட்டு விட்டுப் படுக்கையறையை நோக்கிச் சென்றுவிட்டான் செல்லப்பா.

மறு நாள் பொழுது விடிந்தது. இருவரும் ஒருவரையொருவர் ஏறிட்டுப் பார்க்காமலே எதுவும் பேசிக் கொள்ளாமலே — காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

மணி எட்டு இருக்கும். அவர்கள் வீட்டுக்கு எதிர்ச்சாரியில் நாலைந்து வீடு தள்ளியிருந்த அரிசிக் கடை திறந்தாயிற்றா என்று தெருவுக்கு வந்து எட்டிப் பார்த்தாள் பூமா. திறந்து விட்டிருந்தார்கள். பையும் பணமும் எடுத்துக் கொண்டு கடைக்குப் போகலாம் என்று உள்ளே சென்றாள்.

சமயத்துக்கு உதவும் என்று கால் ரூபாயும், பத்து பைஸாவும், ஐந்து பைஸாவுமாக அவ்வப்போது ஒரு தகர டப்பாவில் போட்டு வைத்திருந்தாள் அவள். அதில் இப்போது ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் சேர்ந்திருக்கும். அந்தப் பணத்தை எடுத்துத்தான் இப்போது அரிசி வாங்க எண்ணினாள் அவள்.

சமையலறைக்குப் போய் அலமாரியைத் திறந்து மேற்படி சேமிப்பு டப்பாவை எடுத்துத் திறந்த அவளுக்குச் 'சொரேர்' என்றது! டப்பாவில் ஒற்றைப் பைசாவைக் கூடக் காணோம்!

விஷயம் சட்டென்று மின்னலைப் போல் அவள் மூளையில் பளிச்சிட்டது.

கொல்லையிலிருந்து குளித்துவிட்டு உள்ளே வந்தான் செல்லப்பா அப்போது.

"டப்பாவில் போட்டு வைத்திருந்த பணத்தை எதற்கு எடுத்தீர்கள்? அதுவும் சீட்டாட்டத்தில் என்னாகிவிட்டதா?" என்றாள் அவள் வேதனையும் சீற்றமுமாக.

"மறுபடியும் திமிராகப் பேசாதே, சொல்லி விட்டேன்!"

"அதட்டிப் பேசி விட்டால் போதுமா? இப்போது அரிசி வாங்கப் பணம் இல்லையே, என்ன பண்ணுவது? பாழும் ரங்காட்டம் எவ்வளவு தாழ்ந்த நிலைக்கு உங்களைக் கொணர்ந்து விட்டது! சூது, பொய்,



விளக்கெண்ணெயிலிருந்து அத்தர்



மல்லிகைப் பூ மணப்பதற்கு அதில் உள்ள ஜாஸ்மோன் என்ற சத்தே காரணம். விளக்கெண்ணெயில்கூட இச் சத்து இருக்கிறது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால் இப்பொழுது விளக்கெண்ணெயிலிருந்து செயற்கை மல்லிகை அத்தர் தயாரிக்கச் சாத்தியமாகியிருக்கிறது.

தகவல்: ''ரமன்''

ஆதாரம்: ''ஸயன்ஸ் டைஜஸ்ட்''

* *

திருட்டு ! பஞ்சமா பாதகங்களில் இன்னும் இரண்டுதான் பாக்கி !''

''நாயே ! ராத்திரியே பிடித்துப் பார்க்கிறேன், என்ன, வாயில் வந்தபடியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாய்....! அரிசி இல்லாவிட்டால் மண்ணைத் தின்னேன்!'' என்று கத்திக் கொண்டே பாய்ந்த செல்லப்பா அவளைப் 'பளார் பளார்' என்று வெறி கொண்டவனைப் போல் ஆத்திரம் தீருமட்டும் அறைந்து தீர்த்தான். பிறகு டிரஸ் பண்ணிக் கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்!

அவன் சாப்பிடாமல் கிளம்பி விட்டான் என்ற நினைவு திடீரென்று வந்து அவளைத் திடுக்கிடச் செய்தது. பட்டினியுடன், ஆபிஸில் எப்படி வேலை செய்வான்? ஹோட்டல் கிட்டலில் சாப்பிட்டுக் கொள்வான் என்று எண்ணி அவள் சமாதானப்படுத்திக் கொள்வதற்குமில்லை. அவனிடம் பணம் ஏது? அவன் தான் அவள் சேர்த்து வைத்திருந்த சில்லறையையும் எடுத்துக் கொண்டு போய்த் தோற்று விட்டு வந்திருக்கிறானே!

தன்னை அவன் அடித்து நொறுக்கியதும், அதனால் ஏற்பட்ட வலியும் அவளுக்கு மறந்து போய் விட்டன. அவன் சாப்பிடாமல் போய் விட்டானே என்ற தவிப்புதான் அவள் உள்ளத்தில் மேலோங்கின.

ஆனால்.... இப்போது அரிசிக்கு என்ன செய்வது? மூலாதார வஸ்து இல்லாமல் அவன் பசியைப் பற்றி வெறும் கவலைப்பட்டு என்ன பயன்? அவளுக்கோ யாரையும் ஒரு பைஸாவோ, கடுகோகூடக் கடன் கேட்டுப் பழக்கமில்லை !

சட்டென்று அவளுக்கு வேங்கடாசலபதி உண்டி ஞாபகம் வந்தது. அந்தக் காசை எடுத்து உபயோகித்துக் கொண்டால் பிற்பாடு, வட்டி சேர்த்து மீண்டும் போட்டு விடலாம் என்ற தீர்மானத்துடன் உண்டியை எடுத்துக் கவிழ்த்தாள். நல்ல வேளையாக இரண்டேகால் ரூபாய் இருந்தது.

மகிழ்ச்சியுடன் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் அரிசி வாங்கிக் கொண்டு வந்து அடுப்பை மூட்டிச் சமையலைத் தொடங்கினாள். சமையல் முடியப் பதினொரு மணி ஆகியது.

நெடு நாட்களாக உபயோகப்படாமல் உள்ளே கிடந்த டிபன் காரியரை எடுத்துத் தேய்த்துச் சுத்தம் பண்ணி, சாதம், கறி, குழம்பு வகையறுக்களை அதில் எடுத்து வைத்தாள். பக்கத்து வீட்டு அம்மாளிடம் குழந்தையைக் கொண்டு போய் விட்டாள்.

ஒரு கையில் டிபன் காரியரும் மற்றொரு கையில் தண்ணீர்க் கூஜாவுமாகக் கணவனின் காரியாலயத்துக்குக் கிளம்பி விட்டாள் பூமா. செல்லப்பா வேலையாயிருந்தது ரஸாயன உரங்கள் தயாரிக்கும் கம்பெனியொன்றில். அவர்கள் வீட்டிலிருந்து இரண்டு மைல்களுக் கப்பால் நகரத்திலிருந்து சற்று ஒதுப்புறமான இடத்தில் இருந்தது. அங்கே போக பஸ் வசதி கிடையாது. ஜட்கா அல்லது ரிக்ஷாவுக்கு இரண்டு ரூபாய் சத்தம் கேட்பான். எனவே, நடந்தே சென்றாள்.

ஆதவன் அவள் தலையில் நெருப்பை வாரிக் கொட்டினான், சற்றும் இரக்கமில்லாமல். பூமியின் சூடோ கொதி நிலையையும் கடந்து விட்டிருந்தது. குடை, செருப்பின்றி, மண்டை பற்றி எரிய உள்ளங்கால் கொப்புளிக்க, தத்தளித்தவாறு கணவனின் காரியாலயத்தை நோக்கி நடந்தாள் பூமா.

மேஜையடியில் வேலை செய்து கொண்டிருந்த செல்லப்பா புழுக்கமும், அனல் காற்றும், வயிற்றுப் பசியும் தாள முடியாமல் திணறினான். எப்போது இடைவேளை வரும் என்று காத்திருந்த செல்லப்பா பகலுணவு மணி அடித்ததும் ஆபீசுக்கு வெளியேயிருந்த தண்ணீர்க் குழாயை நோக்கி நடந்தான். குழாய் நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு இரண்டு கை குடித்து, சற்றே ஆசுவாஸம் பெறலாம் என்பது அவன் எண்ணம்.

வெளியே வந்த அவன் கண்ணில் எதிரே சற்றுத் தூரத்தில் வந்துகொண்டிருந்த பெண்ணுருவம் பட்டது. டிபன் காரியரும் கூஜாவுமாக வருவது யார் ? பூமாவா? ஆம், அவள் தான்! சாப்பாடல்லவா கொணர்கிறாள்!

அவனைக் கண்ட அவள் ஐம்பது கஜ தூரத்துக்கு அந்தண்டை இருந்த வேப்ப மரத்தடியில் நின்றவாறு, ''கொஞ்சம் வருகிறீர்களா?'' என்று தயக்கத்துடன் கூறினாள்.

திகைப்பும் பிரமிப்புமாக அங்கே விரைந்த செல்லப்பா வியர்த்துக் கொட்டியிருந்த அவள் உடலையும், வெய்யிலின் வேதனை தாங்காமல் கன்றி வாடிப் போயிருந்த அவள் முகத்தையும், தள்ளாடிக் கொண்டிருந்த தோற்றத்தையும் கண்டு துடிதுடித்தான்.

கண்கள் கலங்க, உதடுகள் துடிக்க வாயில் பேச்சு வராமல் நின்றான் செல்லப்பா.

''நீங்கள் சீட்டாடப் போங்கள், அதை இனி நான் தடுக்க மாட்டேன். என்னை அடித்துக் கொலை செய்யுங்கள், பொருட்படுத்தமாட்டேன். இப்படிச் சாப்பிடாமல் பட்டினி மாத்திரம் கிடக்காதீர்கள். அதை என்னால் துளிக்கூடப் பொறுக்க முடியாது!'' என்று விம்மினாள் அந்தப் பேதை.

செல்லப்பாவின் கண்கள் அருவியாயின.

''பூமா! நான் உனக்குக் கட்டிய மாங்கல்யத்தின் மேல் ஆணை! பாழும் சீட்டை இனிக் கையினால் தொட மாட்டேன், தொடவே மாட்டேன்!'' என்று அலறினான் செல்லப்பா.







நான் ஒரு காலண்டர்; சாதாரணத் தினசரி காலண்டர்.

கடைகள், காரியாலயங்கள், மாட மாளிகைகள், கூரைக் குடிசைகள் — எங்கேயோ ஓரிடத்தில்தானே காலண்டர்கள் இருக்க வேண்டும்? நான் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

'ஓசி'யாகக் கிடைத்தேனோ அல்லது விலை பெற்று வந்தேனோ — எனக்குத் தெரியாது. எப்படியோ வந்து சேர்ந்து விட்டேன். பொதுவாக, எனக்கு இந்த வீட்டில் நல்ல வரவேற்புத்தான் கிடைத்தது.

அட்டை முகப்பில் வீணை மீது தவழும் விரல்களுடன் கலைமகள் — இதனால் வீட்டுக்கார அம்மாளுக்கு ரொம்பத் திருப்தி!

அமாவாசை, ஏகாதசி, எல்லா விவரங்களும் கொடுக்கிறேன் — பாட்டிக்கு நிம்மதி!

விடுமுறை நாட்கள், சிவப்பு மையில் அடையாளமிட்டுக் காட்டப் பட்டிருப்பதில் குழந்தைகளுக்கு அளவிலாச் சந்தோஷம்.

எனக்கு?

அப்பாடா... நல்லபடியாக என் வாழ்வு அமைந்துவிட்டது. நிம்மதியாக என் வாழ்க்கையை இங்கேயே கழித்துக்கொள்ள வசதி கிடைத்து விட்டது. வேறென்ன வேண்டும் எனக்கு?

ஆனாலும் இடையிடையே ஒரு பயம். யாராவது மிகவும் வேண்டியவர் வந்து என்னைக் கேட்டு இந்த வீட்டினர் தூக்கிக் கொடுத்து விட்டால்...!

நல்ல வேளை, இரண்டு மாதங்கள் ஓடி விட்டன, நான் இங்கு வந்து. யாரும் கேட்கவுமில்லை; என்னைக் கொடுக்கவுமில்லை.

அதுமட்டுமில்லை. செவ்வாய், வெள்ளி, மற்றும் பண்டிகை தினங்களில் நான் தாங்கும் சரஸ்வதி தேவியை முன்னிட்டு எனக்கும் குங்குமப் பொட்டு வைத்து, ஒரு கிள்ளுப் பூ போடுகிறார்கள்.

நானும் என் கடமையைச் செவ்வனே செய்கிறேன். இதோ, நான் மார்ச்சு மாதத்தில் நிற்கிறேன். கேட்க வேண்டுமா, இரவு ஒன்பது மணியானால் மோனத்தில் ஆழ்ந்து விடும் வீடு, பத்துப் பன்னிரண்டு மணி வரையில் களை கட்டுகிறது. தேநீர் போட்டுக் குடித்துவிட்டு விடிய விடியப் படிக்கிறார்கள்.

அடடா, உங்களுக்கு இந்த வீட்டில் உள்ளவர்களை அறிமுகம் செய்து வைக்க மறந்து விட்டேனே!

வீட்டு எஜமானர் நாதன் ஒரு வக்கீல். அவர், அவர் மனைவி, எஜமானரின் தாயார், எஜமானரின் மூத்த பெண் பிரேமா, அடுத்து கிட்டு, கடைக்குட்டி சியாமளா.

என் எஜமானர் இருக்கிறாரே, ஞாபக மறதியில் புலி! அவர் மனைவிக்கோ அவர் காரியத்தையும் சேர்த்துக் கவனிக்கப் பொறுமையும் கிடையாது; நேரமும் கிடையாது! பாட்டி வயதானவள். பிரேமாவைத் தவிர மற்றவர்கள் சிறிசுகள். ஆக பிரேமாதான் எஜமானருக்கு அந்தரங்கக் காரியதரிசி. அவளும் இந்த வருஷம் பி. எஸ்ஸி. எழுத வேண்டும்.

பிரேமாவின் சுறுசுறுப்பே அலாதி. அதிகாலையில் எழுந்து விடுவாள். தந்தைக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் அவள், அம்மாவுக்கு ஒத்தாசையாகச் சமையற்கட்டிலும் புகுந்து விடுவாள். கிட்டு—சியாமளாவைத் தயார் பண்ணிப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதும் சரி, பத்திரிகையில் தொடராக வரும் பகவத் கீதையைப் பாட்டிக்குப் படித்துக் காட்டுவதிலும் சரி — அவளிடம் ஓர் ஒழுங்கு இருக்கும். இதற்கிடையில் கட்டுக் கட்டாகப் பாடப் புத்தகங்கள்!

பிரேமா இல்லாவிட்டால் ஒரு நாள் கூடத் தாளாது. ஸ்தூல சரீரியான எஜமானியம்மாள், சமையற்கட்டில் ஒரு காலும், கூடாயடியில் ஒரு காலுமாகத் திண்டாடுவாள். எஜமானரோ கேட்க வேண்டாம். டர்பனைக் கழுத்தில் கட்டிக் கொண்டு பறப்பார். குழந்தைகள் பள்ளிக்கூடம் என்ற ஒன்றையே மறந்து விடுவார்கள்.

இந்தக் காலத்தில் இருபது வயதுப் பெண்கள் எப்படி இருக்கிறார்கள், ஒவ்வோரிடத்தில்? பிரேமாவின் பொறுமையும், சுறுசுறுப்பும் யாருக்கு வரும்?

எனக்கு என்னவோ, பிரேமாவைத் தவிர வேறு யாரும் என் இதழ்களைப் பிரிப்பது பிடிக்காது. 'பரட் பரட்'டென்று தங்கள் அவசரத்துக்காக அரையும் குறையுமாகப் பிய்த்து விடுவார்கள். கடைக்குட்டி கையில் கிடைத்தால் கேட்க வேண்டாம்! ஒரு சமயம் ஒரு வாரத்தைத் தாண்ட வைத்து விட்டாள். பிரேமா பார்ப்பாளோ, பிழைப்பேனோ!

பிரேமா... அடடா, அவளிடம்தான் என்ன நளினம்! அநேகமாக அவள்தான் என் இதழ்களைப் பிரிப்பாள். கலைமகளைக் கை கூப்பிவிட்டு என்னை அவள் ஸ்பரிசிக்கும் சுகம் இருக்கிறதே.... அப்பப்பா.... அதை உணர்ந்தால்தான் புரியும்!

ஓகோ, பிரேமாவுக்கு இருபதாந் தேதி இறுதிப் பரீட்சையா? அதுதான் இப்படி உடம்பு ஓடாகப் படிக்கிறாளா? நான் இறைவனை மானசீகமாக வேண்டுகிறேன், அவள் வெற்றியடைய.

பரீட்சை நாள் நெருங்க, நெருங்க, அவளுடைய அதிகப்படியான ஸ்பரிச சுகத்தைப் பெறுகிறேன். தன் ரோஜா இதழ்களால் அவள் நாட்களைக் கணக்குப் போட்டுப் பார்க்கும் அழகே அழகு!



பரீட்சை முடிந்து சில நாட்களாகின்றன. பிரேமா திருப்தியாக உலாவுகிறாள். முடிவு தெரிய வேண்டும்.

திடீரென்று ஒரு நாள் பாட்டிக்கு மயக்கம் போட்டு விடுகிறது. வெகு நேரம் நினைவில்லே. எஜமானியம்மாள் என்னை உற்றுப் பார்க்கிறாள். 'ஐயே, இன்று நான்கூட நன்றாக இல்லேயே' என்கிறாள்.

பாட்டியா இலேசுப்பட்டவள்! சாயந்திரமே எழுந்து உட்கார்ந்து விடுகிறாள். ஆனால் ஒன்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள், பிள்ளையிடம். ''இதோ பார், சீனு, எனக்கு எப்ப என்ன வரும்னு சொல்ல முடியாது. எப்படியாவது அவளுக்குச் சீக்கிரத்தில் ஒரு கல்யாணம் பண்ணிப் பார்த்துட்டா நான் போனாலும் ஒன்றுமில்லே'' என்கிறாள் தீர்மானமாக.

எஜமானர், ''பரீட்சை ரிசல்ட் வரட்டுமம்மா. உன் இஷ்டப்படியே வரன் பார்க்கலாம்'' என்கிறார், உருக்கமாக. அவருக்கு அம்மாவிடம் உள்ளூற வாஞ்சை!

எனக்கு ரொம்ப சந்தோஷம் – அடடா, என் பிரேமாவுக்குக் கல்யாணம். ஒரு பக்கம் வருத்தமாகவும் இருக்கிறது – அவளைப் பிரிய வேண்டுமே என்றுதான்!

பிரேமா பாஸ் செய்து விட்டாள். அதுவும் முதல் வகுப்பில். கல்யாணமும் நிச்சயமாகப் போகிறது. எஜமானர்கூட இப்பொழுது 'பிஸி'யாக இருக்கிறார். எனக்குப் பரம திருப்தி. பிரேமாவைப் பார்க்கிறேன்.



''இந்தச் சிலைமீது ஏன் சார் எந்தக் காக்காயும் உட்காருவதில்லை !''

''அவர் காக்காய்ப் பிடிப்பதில் பெரிய ஆசாமின்னு பெயர் வாங்கியவராச்சே, அதனால் தான்.''

அவள் முகம் சந்தோஷத்தில் மலர்ந்திருக்கிறது. கொள்ளை சந்தோஷம். அவளே அழகி. அவள் சிரிக்கும்போதுதான் எவ்வளவு அழகு! என் கண்ணே பட்டுவிடப் போகிறது!

பிரேமா என் அருகே வருகிறாள். மெதுவாக இதழ்களைப் பிரிக்கிறாள்... ஏதோ எழுதுகிறாள்.... எனக்கு எங்கே புரியப் போகிறது? நானென்ன படித்திருக்கிறேனா?

அதை எழுதும்போதே அவள் மார்பு விம்மிப் பூரிக்கிறது. என் உள்ளம் பரபரக்கிறது, விஷயத்தை அறிந்துகொள்ள. ஏதோ ஒரு விசேஷம் அன்று இருக்கத்தான் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

அந்தக் குறிப்பிட்ட நாளில் வீட்டில் ஒருவருமில்லை—பிரேமாவைத் தவிர. எல்லோரும் எங்கே?

பிரேமா என்னையே மலர்ச்சியுடன் நோக்குகிறாள். வாசற் கதவு தட்டப்படுகிறது.

சில நிமிடங்களில் பிரேமா அவள் தோழியுடன் உள்ளே வருகிறாள்.

''என்னம்மா, நிச்சயதார்த்தப் பெண்ணே என்ன கனவு காண்கிறாயாம்?'' என்று செல்லமாக அவள் கன்னத்தில் கிள்ளுகிறாள் தோழி. பின், என்னைப் பார்க்கிறாள்.

''அப்படியா சேதி? 'நிச்சயதார்த்தம்' என்று எழுதி வைத்து அதைப் பார்த்துப் பார்த்தே பரவசம் அடைகிறாயாக்கும்? அவர்களெல்லாம் மாப்பிள்ளை வீட்டில் நிச்சயம் பண்ணப் போயிருக்கிறார்களாக்கும்!'' என்றாள் தோழி.

அடுத்தபடியாக எனக்கு, பிரேமாவுக்கு வரப்போகும் கணவனைப் பார்க்க வேண்டுமென்று ஒரே ஆவல். என் ஆசை நிறைவேறுமா, உடனேயே...?

கல்யாண நாள் குறித்து விட்டார்கள். உள்ளூரில் கல்யாண மகாலில் வைத்துக் கல்யாணம். முதல் நாளே, காலையிலேயே பெண் வீட்டார்கள் போய்விட்டார்கள். நான் அதற்கு முந்தின தேதியிலேயே நிற்கிறேன்! கல்யாண அவசரம். என்னை யார் கவனிக்கப் போகிறார்கள்?

எனக்கு ஒரே ஏக்கம் — பிரேமாகூட என்னை அலட்சியம் செய்து விட்டாளே என்று. ஆனால் அவள் மனக இப்போது எப்படி உணர்ச்சி வசப்பட்டுக் கிடக்கும்?

வீடு நாழிடப்பாகிறது. வெளி உலக நடப்பு எனக்கு இனித் தெரியப் போவதில்லை!

மூன்று நாட்களில் உறக்கம் கலைந்து விழிக்கிறேன். வீடு பெருக்கி மெழுகப்பட்டு விட்டது. பிரேமாவும் அவள் கணவரும் வரப் போகிறார்களாம். நான் பரபரப்புடன் இருக்கிறேன். கிட்டு வழக்கமான அலட்சியத்துடன் பரட் பரட்டென்று என் இதழ்களைப் பிய்த்து இழுக்கிறான். பிரேமா வரும் நேரம். நான் ஆர்வத்துடன் அவளை — அவள் மணாளனை — எதிர்பார்க்கிறேன்.

வாசலில் கார் ஓசை. ஆரத்தியுடன் எஜமானியம்மாள் தேகம் குலுங்க ஓடுகிறாள்.

பிரேமாவும் அவள் கணவரும் வலது பாதம் முன்வைத்து உள்ளே நுழைகிறார்கள். இதோ, என் பிரேமா... ஆஹா, என்னைத்தான் நோக்குகிறாள்.... கடவுளே... நான் பாக்கியசாலி.

பிரேமாவையே பார்த்துக் கொண்டிருந்த நான் மெதுவாக என் பார்வையை அவன் பக்கம் திருப்புகிறேன்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டு நிற்கிறான்....

ம்... அப்படி யொன்றும் எங்கள் பிரேமாவை விட அழகில்லை! நிறம் கூட ஒரு சொல் மட்டம்தான்!

எல்லோரும் உள்ளே போகிறார்கள். பிரேமாவும் அவனும் மட்டும்தான் நிற்கிறார்கள்—அதுவும் என் அருகில்.

பிரேமா உள்ளே போகத் திரும்புகிறாள். அவன் மெதுவாக அவள் கையைப் பிடித்து அழுத்துகிறான்.

''விடுங்களேன், யாராவது பார்க்கப் போகிறார்கள்'' என்கிறாள் அவள், வெட்கத்துடன். அவனோ அவளை நெருங்குகிறான்.

நான் இதழ்களைப் படபடவென்று அடித்து முகத்தை மூடிக் கொள்கிறேன்.

பிரேமா புறப்பட்டு விட்டாள்.

எல்லோர் கண்களிலும் கலக்கம். எனக்கோ வெளியிடத் தெரியாத ஓர் ஊமைத் துக்கம். பிரேமாவை நோக்குகிறேன், கலங்குகிறேன்.

ம்... என் ஆயுள் குறைந்தது! அதற்குள் ஓர் ஆறுதல் செய்தியைக் கிட்டுப் பயல் சொன்னான். ''அட, சியாமளி, நம்ம அக்காவுக்குத் தலை தீபாவளி வர இன்னும் ஐந்து மாதங்கள் இருபத்தி மூன்று நாட்கள் இருக்கு'' என்று என்னைப் புரட்டிப் பார்த்து விட்டுத்தான் அப்படிச் சொன்னான்.

என் இதழ்கள் காற்றில் பரபரக்கின்றன; எல்லோர் இதயங்களும்தான்!

முன்போல் வீடு இல்லை. யந்திர கதியில் செல்லுகிறது. பழைய துள்ளலும், ஒளி

உமிழும் சூழ்நிலையும் இல்லை. மூக்கால் முனகிக் கொண்டே வேலை செய்யும் எஜமானியம்மாள்— மறந்ததை நினைவுபடுத்திக் கொள்ள முயலும் எஜமானர் — பொழுது போகாமல் முணு முணுக்கும் கிழவி — அக்கா இல்லாமல் இணையும் குழந்தைகள்... எல்லோரிடமும் ஒரு வெறுமை!

பிரேமா என்ன இந்த வீட்டின் லக்ஷ்மியா?

வீடு திரும்பவும் பழைய உற்சாகத்தைப் பெற்று விடுகிறது. ஏன்?

ஓஹோ, பிரேமா வருகிறாளாம்....அடே, அவளுக்குச் சீமந்தமாமே...!

எனக்கு ஒரே கொண்டாட்டம். பிரேமா போன கடந்த எட்டு மாதங்களில் நான் பட்ட பாடு! வாரத்துக்கு ஒரு முறைதான் என் இதழ்களை எடுப்பார்கள். என் மீனுல் பூச்சியும் பொட்டும் சேர்ந்து விட்டன.

இப்போது பிரேமா வருகிறாள்...?

பூசினாற்போன்ற வயிறு; அதற்கேற்ற சதைப் பற்று. தாய்மையின் நிழல் அவள் முகத்தில் தவழ்கிறது.... நான் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறேன்.

கல்யாணத்துக்குப் பின் இப்போதுதான் பார்க்கிறேன். தலை தீபாவளிக்குக் கூட அவள் இங்கு வரவில்லை. மாப்பிள்ளைக்கு லீவு கிடைக்காதபடியால்.

பிரேமா... அவள் பரிதாபத்துடன் என்னை நோக்குகிறாள். இதழ்கள் உதிர்ந்து நோஞ்சலாய்ப் போன என்மீது அவளுக்கு மட்டும் தான் அனுதாபம் இருக்க முடியும். எங்கள் உறவு உங்களுக்குப் புரியாது.

வீடு பரபரக்கிறது. என்ன அது...பிரேமாவின் அப்பா டாக்ஸிக்காக ஓடுகிறார்.

டாக்ஸி வருகிறது. அட, பிரேமா துவண்டு கிடக்கிறாளே, அல்லித் தண்டாய்...நான் ஒன்றும் புரியாமல் விழிக்கிறேன். வீடு நிசப்தத்தில் ஆழ்கிறது.

நாலைந்து நாட்களாகின்றன. என் இதழ்கள் வேகமாக உதிர்ந்து கொண்டே வருகின்றன.

இதென்ன, பிரேமா எங்கே.... காணோம்.. அவள் எங்கே போனாள்...?

இரண்டு நாட்களாக வீட்டின் பரபரப்பு அதிகரித்து வருகிறது. நான் பலவீனத்தில் அயர்ந்து போய்விட்டேன்.. கடைசி உயிரைப் பிடித்துக் கொண்டு இருக்கிறேன்...

திடீரென்று ஏதோ கூக்குரல் வீட்டில் எழுகிறது. ஒன்றும் விளங்கவில்லை! என் உடல் நடுங்குகிறது! என் கடைசி இதழும் பிரிந்து, நான் கிடக்கிறேன்!

கிட்டு ஒரு பெரிய போட்டோவுடன் வருகிறான்; சுற்று முற்றும் பார்க்கிறான்; என்னை நோக்கி வருகிறான். என்னைக் கழற்றி ரோட்டில் தூக்கி எறிகிறான். நான் அசைவற்று நடு ரோட்டில் கிடக்கிறேன்—குற்றுயிரான நிலை!

நான் இருந்த இடத்தில் பிரேமாவின் படம் தொங்குகிறது. படத்தைச் சுற்றி மலர் மாலை.

ஐயோ பிரேமா... என் கண்ணே...என்னை வி......ட்.....டா....

சர்ரென்று லாரி ஒன்று என் மீது ஏறி, அசுர வேகமாகச் செல்கிறது.

பதின்மூன்றாண்டுப் பயணம்!

சென்ற 7-11-67 அன்று எங்கள் கடைக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தைப் பார்த்து வியப்புற்றோம். காரணம் அது காலஞ்சென்ற இசை மேதை அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் அவர்களால் 4—6—54 அன்று தம் சகோதரர் (காலஞ்சென்ற) திரு அரியக்குடி டி. ஆர். ராகவையங்கார் அவர்களுக்குக் கும்பகோணத்திலிருந்து எழுதப் பெற்றது. பதின்மூன்று வருடங்கள் கழித்து அது எங்கள் கடைக்கு விலாசதாரின் பெயர் ஒற்றுமை காரணமாக வந்திருக்கிறது. (எங்கள் கடையின்பெயரும் டி. ஆர். ராகவையங்கார் பத்திரிகைக்கடை என்பதாகும்.) மேற்படி கடிதத்தை எழுதியவரும் இன்று உலகில் இல்லை! யாருக்குக் கடிதம் அனுப்பப் பெற்றதோ, அவரும் இன்று இல்லை! இதனிலும் விசித்திரம் என்னவெனில் அதில் முகவரி தெளிவாக இருந்ததுதான்! பெருமையுடன் தபால் தந்தி வாரம் கொண்டாடும் போது இந்தக் கடிதம் கிடைத்திருப்பது என்னே, என்னே!

காரைக்குடி — வை. பார்த்தசாரதி



[மகா வித்வான் அரியக்குடி அவர்கள் 1954ல் கடிதம் எழுதுகையில், தெளிவாகக் குறிப்பிட்டுள்ள தேதியையும், விலாசத்தையும் அது காரைக்குடியில் பதின்மூன்றாண்டுக்குப் பின் தபால் முத்திரை பெற்றதையும் மேலே காண்கிறீர்கள். நம் வீடுகளில் சில நாட்களிலேயே மடிந்து தூளாகிவிடும் தபால் கார்டைப் பதின்மூன்றாண்டுகள் பத்திரமாகக் காப்பாற்றிய தபால் துறை ஏன் தபால் வாரம் கொண்டாடக் கூடாது?

—ஆசிரியர்]



மார்க்கோ போலோவால் முடியாதது உங்களால் முடியும் !

எடுத்துச் செல்வீர் ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளை

பாவம் மார்க்கோ போலோ! ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளை எடுத்துச் செல்லக் கொடுத்து வைக்காதவன். ஆனால் உங்களால் முடியுமே. இந்தியாவிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி, எங்குமே. இக்காலப் பிரயாணிகளுக்கென்றே ஏற்படுத்தப்பட்டவை ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகள். மார்க்கோ போன்றவர்களுக்குக் கிட்டியிராத பிரயாணப் பாதுகாப்பு பேறு.

கமிஷன் கிடையாது

அதோடன்றி, கமிஷன் கழிவு இல்லாமலே வெளியிடப் படுபவை ஸ்டேட் பாங்கு பிரயாணிச் செக்குகள். ரூ. 50 மற்றும் ரூ. 100 ஆகிய இனங்களிலே கிடைப்பவை. இங்கும் சரி, வெளிநாடுகளிலும் சரி, பாங்குகள், விமான நிலையங்கள், ஓட்டல்கள், கடைகள் எவ்விடத்தும் அவற்றை ரொக்கமாக்கிக் கொள்ளலாம் நீங்கள். பத்திரமானவை. பாதுகாப்பும் வசதியும் தருபவை. தொலைந்து போனாலோ, எளிதில் ஈடு மீட்க முடியும்.

கர்ட்டஸி கார்டுகளும் உண்டு

மேலுமொரு நல்வசதி, அங்கீகரிக்கப் பட்ட வாடிக்கையாளர்களுக்கென வெளியிடப்படும் கர்ட்டஸி (கௌரவக்) கார்டுகள். இந்தியா வெங்கும் ஸ்டேட் பாங்குக்கு உள்ள 2100 கிளைகள், நிலையங்கள் இவற்றிலே எதனிலும் இந்தக் கார்டை சமர்ப்பித்து அதன் மூலம் எந்த ஒரு நாளிலும் ஒரு குறிப்பிட்ட தொகை வரை உங்கள் செக்குகளை நீங்கள் ரொக்க மாக்கிக் கொள்ள முடியும்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

S. 175 TAM

பாசி



வ.சா.நாகராஜன்

குட்டைப்படக் கதை

ராகவன் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்து விட்டான். தினப்படி வழக்கமாக உமா தான் ஐந்தேகாலுக்கு முதலில் வருவாள். அவளுக்கு அரசாங்க அலுவலகத்தில் வேலை. ராகவன் ஆபீஸ் ஐந்தரை வரை உண்டு. அதன்பின் அவன் பஸ் பிடித்து வீடு வந்து சேர ஆறு மணியும் சில நாட்கள் அதற்கு மேலும் ஆகிவிடும். உமா முதலில் வந்து காப்பி போட்டுச் சாப்பிட்டுவிட்டு அவனுக்கும் பிளாஸ்கில் எடுத்து வைத்து விட்டு இரவுச் சாப்பாட்டுக்கான வேலைகளைக் கவனிப்பாள்.

இன்று ராகவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது மணி நாலரை. உடைகளைக் கழற்றி எறிந்து விட்டுக் காப்பி தயாரிக்க ஆரம்பித்தான். கணவன் மனைவி இருவருமே வேலை பார்க்கும் அந்தக் குடும்பத்தில் அந்தப் பழக்கங்கள் எதுவும் அவனுக்குப் புதிதல்ல. அதையே முழுப் பழக்கமாக வைத்துக் கொள்ளாமல் எப்போதாவது ஒரு முறை வைத்துக் கொள்வதால் அந்தச் சில வறை வேலைகள் அவனுக்கு உற்சாகமாகக்கூட இருப்பதுண்டு. இன்றும் அப்படித்தான். 'திக்'காக டிகாக்ஷன் போட்டு 'ஸ்பெஷல்' காப்பியாகத் தயாரித்துத் தானும் குடித்துவிட்டுப் பிளாஸ்கில் உமாவுக்காக எடுத்து வைக்கப் போகும் சமயம் அவளே வந்து விட்டாள்.

தனக்கு முன்பே வந்து காப்பியுடன் நிற்கும் கணவனைப் பார்த்து, "இன்றைக்கு என்ன விசேஷம், இவ்வளவு சீக்கிரம்?" என்று கேட்டாள் உமா.

"என்னவோ போர்ட் மீட்டிங். வீட்டுக்குப் போகிறவர்கள் போங்கடா என்றான். வந்து விட்டேன்!" என்று உற்சாகமாகச் சொல்லியபடியே மின்விசிறியைத் திருகிவிட்டு அதன் அடியில் உட்கார்ந்து கொண்டான் அவன்.

மோடாவை எடுத்து அருகில் போட்டுக்கொண்டு காப்பியை அருபவித்துக் குடித்து விட்டுத் தம்மைள உள்ளே கொண்டு வைத்து

புல்லுக்குத் துணிகளை வெண்மை யாக்கும் இயல்பு உண்டு. ஆகையால் துவைத்த துணிகளைப் புல் தரையின் மீது வெய்யிலில் காய வைத்தால் அது அதிக வெண்மையடைகின்றது.

தகவல்: ''ரமன்''

ஆதாரம்: ''ஸையன்ஸ் டைஜஸ்ட்''

விட்டு வந்தாள் உமா. அலுவலகத்து உடைகளைக் களைந்துவிட்டுச் சமையலறைக்கான புடவையுடன் எதிரில் வந்து உட்கார்ந்தாள். வழக்கம்போல் அன்றைக்கு அவரவர்களுக்கு நேர்ந்த அனுபவங்கள், சில்லறை விசேஷங்கள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொண்டனர். ராகவன் ரேடியோவைத் திருகிவிட்டு அவனுக்குப் பிடிக்காத இசைத் தட்டுகள் வைக்கப் படுவதைக் கண்டு எரிச்சலுடன் அதை மூடினான்.

''ராத்திரிக்கு என்ன வைத்திருக்கிறாய்?''

''காலையில் வைத்த குழம்பு இருக்கிறது. சாதம் வடித்து அப்பளம் சுட்டால் போதும் என்று பார்த்தேன். கறி வேண்டுமானால் செய்யட்டுமா?'' என்று தன் வேலையைக் கவனிக்க எழுந்தாள் உமா.

சிறிது நேரம் யோசித்த ராகவன், ''வேண்டாம்.... குழம்பை மூடி வைத்து விட்டு வந்து விடு..... காலையில் வேலைக்காரியிடம் கொடுத்துக் கொள்ளலாம். எனக்கு ஒரே பசி. உன் கறியும் குழம்பும் போதாது. ஹோட்டலுக்குப் போய்விடலாம்'' என்று எழுந்தான்.

இரண்டு பேர்கள் மாத்திரம் உடைய அவர்கள் வாழ்க்கையில் இது ஒன்றும் புதுமையல்ல. இரண்டு பேர்களும் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உடைய அந்த வீட்டில் பல நாட்கள் ஹோட்டலில்தான் சாப்பிட்டாக வேண்டும் என்ற கட்டாயம் உண்டு. கட்டாயத்தை விட இந்த மாதிரி ராகவனுக்கு உற்சாகம் மேலிட்டு ஹோட்டலுக்குப் போகும் நாட்களும் அவ்வப்போது உண்டு. இது அவன் சுபாவம். எதிலும் ஓர் அலாதியான அவசரம். எதையும் அனுபவித்து ரசிக்கும் ரசனை உணர்ச்சி. சாப்பாட்டில் என்று மாத்திரம் இல்லை. கல்யாணம் ஆகி மூன்று வருஷங்கள் முடிந்த பிறகு இன்னமும் அவன் மாலை வேளைகளில், முதல் வாரம்தான் கல்யாணம் ஆன ஜோடி போல் உமாவுடன் பேசிக் கொண்டே உலாவப் போவான். கடற்கரையிலும் வெங்கடநாராயண ரோடு பார்க்கிலும் உட்கார்ந்து மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பான். பாட்டில் அவனுக்கு உயிர். நாடகத்திலும் ஆர்வம் உடையவன். சினிமாக்களில்கூடத் தனியாகப் பார்க்க வேண்டிய படம் என்று தரம் பிரித்துப் பார்ப்பவன்.

முகம் கழுவி வேறு உடை அணிந்து உமா தயாராவதற்குள் ராகவன் குளித்து விட்டு மாற்று உடை அணிந்து கொண்டு கிளம்பி விட்டான்.

கோபதி நாராயணசாமி செட்டித் தெருவின் கோடிவரையில் நடந்துவிட்டு மீண்டும் திரும்பிப் பாண்டிபஜார் வந்து ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வீட்டை நோக்கி நடந்தார்கள். பனகல் பார்க்கைத் தாண்டி உஸ்மான் ரோடு முனை திரும்பியதும் எதிர்க் கோடியில் பத்துப் பதினைந்து கால் விளக்குகளும் கூட்டமும் தெரிந்தன. நாதஸ்வர சத்தமும் காற்றில் மிதந்துவந்தது. முன்னிரவு நேரத்தில் நாதஸ்வரத்திலிருந்து எழும் சங்கராபரணம் ராகவன் மனத்தைத் தொட்டது. பேசிக் கொண்டே வந்தவன் சட்டென்று பேச்சை அப்படியே நிறுத்தி விட்டு அந்த இசையில் ஈடுபட்டான். ஊர்வலம் மெல்ல மெல்ல நகர்ந்து வந்தது. அவனும் மெதுவாகவே வந்தவன், ''உமா! நீ வேண்டுமானால் முதலில் வீட்டுக்குப் போ. நான் இன்னும் சிறிது நேரம் கேட்டு விட்டு வருகிறேன். என்னமாய்ப் பொழிகிறான்!'' என்று அந்த ரசனையில் மூழ்கிப் போனான்.

''ஏன், நான் மாத்திரம் கேட்கக் கூடாதா? நானும் கேட்டால் அந்த நாதஸ்வரக்காரர் கோபித்துக் கொள்வாரோ?'' என்று உமா வெட்டவே இருவரும் கடை வாசலில் நின்ற வாறே 'ஸ்வர ராககதா'வை அனுபவித்தார்கள். நாதஸ்வரத்தில் மூழ்கியவன் முதலில் காரில் வந்த மாப்பிள்ளையைக் கவனிக்கவே இல்லை. எதேச்சையாக அந்தப் பக்கம் பார்த்த போது தன்னுடன் சேர்ந்து கல்லூரியில் படித்த ரமணனை மாப்பிள்ளையாகக் கண்டு ஆச்சரியப்பட்டான். மாப்பிள்ளைக் கோலத்தில் காரில் அமர்ந்திருந்த அவன் ராகவனைக் கவனிக்கவில்லை. ''உமா, அது யார் தெரியுமா? கல்லூரியில் என்னுடன் படித்தவன், பி. எஸ்ஸி.யில் இரண்டாவது வருஷம் கொஞ்ச நாட்கள் ஹாஸ்டலில் ஒரே அறையில்கூடச் சேர்ந்து இருந்திருக்கிறோம்... ரமணன்...'' என்றான் ராகவன்.

ராகவனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. காரின் அருகில் போய் ரமணனை வாழ்த்துவதா, வேண்டாமா என்று யோசித்தான். பின்னர், பத்திரிகை இல்லாவிட்டாலும் கல்யாணம் என்றால் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் வாழ்த்துவதுதான் முறை என்ற நினைவு வந்ததும் காரின் அருகில் போனான். எதிர்பாராத விதமாகக் கல்லூரி நண்பனைக் கண்டவுடன் திகைத்துப் போன ரமணன், ''அடேடே! ராகவன்! வா, வா, வா....!'' என்று கையை நீட்டினான்.


காருடனேயே நடந்து குசலப் பிரச்னம் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு மனைவியையும் அறிமுகப்படுத்தினான் ராகவன். அவனை ரமணன் பிடித்துக் கொண்டான். ''வீட்டைப் பார்க்க நழுவாதே! சேர்ந்தாற் போல் வா...உம்...'' என்று வற்புறுத்தியதுடன் சற்றுத் தள்ளி நின்ற தம்பியையும் அழைத்து இவர்களைக் கவனித்துக் கொள்ளச் சொன்னான். ராகவன் ஊர்வலத்தோடு சேர்ந்து நடந்தான். நடக்கும்போதே ராகவன் நினைத்துக் கொண்டு வந்தான். 'ஹாஸ்டல் வாழ்க்கையில் ஏழைப் பையனாக, ஒரு

சினிமா நாடகத்துக்குப் போக முடியாமல், மற்ற மாணவர்களைப் போல் பகட்டான உடை அணிய முடியாமல் எப்படியோ தட்டுத் தடுமாறிப் படித்த ரமணனுக்குத் தான் வாழ்க்கையில் எத்தனை பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது! அன்று பாதி நாள் வேஷ்டியையே கட்டிக்கொண்டு கல்லூரிக்கு வரும் ரமணனுக்கு இவ்வளவு பெரிய இடத்தில் ஆடம்பரமாகக் கல்யாணம் ஆகும், அன்னம் போல் சிங்காரித்த பிளிமத் காரில் மாப்பிள்ளை ஊர்வலம் வருவான் என்று யார் நினைத்துப் பார்த்திருப்பார்கள்? ஐந்து ரூபாய்க்கு மேல் புத்தகம் விலை என்றும், கடன் வாங்கி அந்தப் புத்தகத்தைப் படித்தே காலம் தள்ளியவன். அப்படியொன்றும் புத்திசாலியும் அல்ல. மூன்றும் வகுப்பில்தான் பாஸ் செய்தான். அவனுக்கு எப்படி எடுத்தவுடன் அவ்வளவு பெரிய வேலை கிடைத்தது? இதை அதிர்ஷ்டம் என்று சொல்வதா, அல்லது பூர்வ புண்ணியம் என்று சொல்வதா...?'

தான் சாப்பிட்டு விட்டதாகச் சொல்லி ரமணனை நம்ப வைத்து ஒரு வழியாக அவனிடமிருந்து விடுபட்டுத் திரும்புவதற்குள் ராகவனுக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. மறு நாள் காலையில் கல்யாணத்துக்கு வரும்படி ரமணன் ராகவனையும் உமாவையும் வற்புறுத்தி அழைத்தான்.

ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு எத்தனைக் கெத்தனை உற்சாகமாக வீடு நோக்கிக் கிளம்பினானோ அத்தனைக்கத்தனை இப்போது ராகவன் உற்சாகமிழந்து நடந்தான். ரமணன் எப்படி வாழ்க்கையில் இப்படி வெற்றிபெற முடிந்தது என்பது அவனுக்குப் புரியவே இல்லை. ரமணன் நன்றாக இருக்கட்டும். அதைப் பற்றி ராகவனுக்குப் பொறாமை இல்லை. ஆனால் அதே நேரம் அவன் நிலையும் மனத்தில் ஓடியது. பி. எஸ்ஸி.யில் முதல் வகுப்பில் பாஸ் செய்தும் கம்பெனி ஒன்றில் சாதாரணக் குமாஸ்தாவாகத்தான் அவன் வாழ்க்கை அமைந்தது. அத்துடன் இல்லை. அவன் வாழ்க்கைப் பிரச்னைகளைச் சரிவரச் சமாளித்துக் காலம் ஓட்ட வேண்டும் என்றால் அவன் மனைவி சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுக்கும் அந்த இருநூறு ரூபாயும் இருந்தால்தான் முடியும் என்று ஆகிவிட்டது. இந்த வாழ்க்கையில் எப்படி உற்சாகம் இருக்க முடியும்? இன்னும் நாலைந்து வருஷங்களில் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்து உமாவும் காரியாலயத்துக்குப் போக முடியாத நிலை வந்து விட்டால் தன் பொருளாதார நிலை என்ன?

வழியில் ராகவன் பேசவேயில்லை. உமாவுக்கு அவன் மனப் போக்கில் ஒரு சிறு அசைவும் தெளிவாகத் தெரியும். ஒரு நிமிஷம் ஒரே உற்சாகமாகக் குதிப்பான். மறு நிமிஷம் தெருவில் ஒரு பிரேத ஊர்வலத்தைக் கண்டுவிட்டு, 'ஐயோ, நம்மையும் இப்படி நாலு பேர்கள் ஒரு நாள் தூக்கிக் கொண்டு போவார்களே!' என்ற நினைவு வந்துவிட்டால் அவன் உற்சாகம் அத்தனையும் ஒரு கணத்தில் சுருங்கி என்னவோ போல் ஆகி விடுவான்.



"டேய் சேகர்! திரவங்களில் மிகக் கொடூர மானது எது? சொல்லு!"

சேகர் (தன் தோழனிடம்): என்னடாது உபத்திரவம், என்னைப் பிடித்துக்கொண்டு விட்டாரே!

— தஞ்சை ரமணி

ராகவன் நினைத்துக் கொண்டே போனான். 'வாழ்க்கை என்பதுதான் என்ன? இந்த மாதிரித் தோல்விதானா....? இல்லை..... தோல்விகளே சூழ்ந்திருக்கும் வாழ்க்கையில் கல்யாணத்தைப் போன்ற சில மறக்க முடியாத — வாழ்நாளின் பிற்பகுதி முழுவதும் நினைத்து மகிழ்ச்சி அடையக்கூடிய — சில இன்ப நிகழ்ச்சிகள் இருக்கத்தான் இருக்கின்றன. மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம்தான் எத்தகைய உற்சாகம் அளிக்கிறது! அந்த நாதஸ்வர இசை.... பட்டுப் புடவைகள்.... மல்லிகைப்பூ மணம்.... சந்தனம்...சென்ட்!

தன் வாழ்க்கைத் தோல்வியுடன் திருமணத் தோல்வியையும் இணைத்துப் பார்த்தான் அவன். அவன் திருமணம்.... அது தான் எப்படி நடந்தது....?

'வேலை பார்க்கிறாள், அழகாக இருக்கிறாள்' என்ற இரண்டே காரணங்களுக்காக மற்ற சகல விதமான அம்சங்களையும் புறக்கணித்து நடக்க இருந்த அந்தக் கல்யாணத்தை அவன் அப்பா ஆதரிக்கவில்லை, அம்மாவும் விரும்பவில்லை. தகப்பனார் இல்லாத உமாவின் குடும்பத்தை அவளது கல்யாணம் என்ற பாரத்தினால் துன்பப்படுத்த விரும்பாத ராகவன் எளிமையாகவே நடத்தச் சொன்னான். அவர்கள் திருமணம் வடபழனி ஆண்டவன் சந்நிதியில் மிக எளிமையாக நடந்தது. காலையில் நடந்த கல்யாணத்துக்கு எல்லோரையும் போல் வந்த அவன் பெற்றோரும் மாலையே ஊருக்குத் திரும்பி விட்டார்கள். முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் கிடையாது. கல்யாணம் முடிந்த அன்று சாயங்காலமே வரவேற்பும் சாப்பாடும் முடிந்து அவரவர்கள் கிளம்பியான பிறகு முன்பே ஏற்பாடு செய்து வைத்திருந்த இந்த வீட்டுக்கு டாக்ஸி ஒன்றில் உமாவுடன் வந்து குடும்ப வாழ்க்கையை அமைதியாகத் தொடங்கினான்.

அப்போது அதெல்லாம் புதுமையாகவும் புரட்சிகரமாகவும் தோன்றியது. இப்போது ரமணனையும், அந்த ஊர்வலத்தையும், மனத்தை இன்னமும் மயக்கும் அந்த நாதஸ்வர இசையையும், கல்யாண வீட்டுக்

'ஓகே' என்ற ஆங்கில வார்த்தை சர்வ சாதாரணமாக நம் பேச்சில் அடிபடுகிறது. இதன் விரிவு 'ஓல்ட் கின்டர்ஹுக்' (Old Kinderhook) என்பதாகும். இந்த வார்த்தை எப்படிப் பிறந்தது?

1840ல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதுவரை ஜனாதிபதியாக இருந்த 'மார்டின் வான் புரென்' என்பவரே மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். அவருடைய ஊர் நியூயார்க்குக்குப் பக்கத்திலுள்ள ஓல்ட் கின்டர்ஹுக் என்ற நகரம். அதனால் அவ



ருடைய ஆதரவாளர்கள் தேர்தல் பிரசார ஊர்வலங்களின் போது ஊர் பெயரைச் சுருக்கி 'ஓ. கே.' என்று கோஷமிட்டார்கள். அவ்விரு எழுத்துக்கள் "நல்லவர், பதவிக்குச் சரியானவர்" என்பதற்குப் பிரசாரம் செய்யப்பட்டது. நாளாவட்டத்தில் 'நல்லது அல்லது சரியானது' என்பதைக் குறிக்க அதுவே வார்த்தையாக உபயோகிக்கப்படலாயிற்று.

ஆதாரம்: "காரவான்"

தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

கூட்டத்தையும், மாப்பிள்ளை விசாரிப்புகளையும் கண்ட ராகவன் தன் வாழ்க்கையில் எதையோ இழந்து விட்டதாக உணர்ந்தான்.

வீடு வந்து கதவைத் திறந்து விளக்கைப் போட்டுப் படுக்கையை விரித்து அவனுக்குப் பிடித்த புத்தகத்தைப் பிரிக்கும் வரையில் அவன் அதிகமாகப் பேசவில்லை. உமாவும் அவன் மனமறிந்து படுக்கையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துத் தூங்க முயற்சி செய்தாள்.

மறு நாள்.

கல்யாணத்துக்கு எப்படியும் வந்தாக வேண்டும் என்று ரமணன் பிடிவாதமாகக் கூப்பிட்டிருந்தான். முதல் நாளே அவர்கள் அங்கு சாப்பிடாததால் இன்று முழுதும் அங்கே தங்கி இரவுச் சாப்பாட்டுக்குப் பின்னர் தான் கிளம்ப வேண்டும் என்று உமாவையும் சாட்சி வைத்துக் கொண்டு ரமணன் ரொம்பவும் கேட்டுக் கொண்டிருந்தான்.

காலையில் எழுந்த ராகவனின் முகத்தைப் பார்த்த உமா அவன் கல்யாணத்துக்குப் போகப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்டு சமையலுக்கு ஏற்பாடுகளைக் கவனித்தாள். ராகவனும் குளித்து உடை உடுத்திக் கொண்டு சாப்பிட அமர்ந்த போது,

"எப்போதோ கல்லூரியில் ஒன்றாகப் படித்தால் அதற்காக மூன்று வேளையும் கல்யாணச் சாப்பாடு சாப்பிட வேண்டுமா என்ன? சாயங்காலம் வா.... முடிந்தால் வரவேற்புக்குப் போகலாம்" என்றான். உமா வேலைகளைக் கவனிக்கலானாள்.

மாலை.

உமா வழக்கம்போல் வந்து காப்பி தயாரித்து அருந்திவிட்டு ராகவனுக்கு எடுத்து வைத்தாள். சமைக்க வேண்டுமா, அவன் ஒருவேளை கல்யாணத்துக்குப் போக வேண்டும் என்று சொல்வானோ என்று புரியாமல் அவன் வரவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

ராகவன் வீட்டுக்கு வரும் போது நன்றாக இருட்டிவிட்டது. காப்பி அருந்தி உடை மாற்றிய போது, "வரவேற்புக்குப் போவோமா?" என்று கேட்டான்.

"உங்கள் இஷ்டம். போகலாம் என்றால் போவோம்..." என்று பட்டுக் கொள்ளாமல் பதில் அளித்தாள் உமா.

"போய் விட்டுத்தான் வருவோமே..... கல்யாணச் சாப்பாட்டை விடுவானேன்?" என்று கிளம்ப ஆயத்தமானான் அவன்.


ஒரு வழியாக அவன் வழக்கம்போல் குளித்து உடை மாற்றிக் கொண்டு கிளம்பும் போது மணி ஏழரை ஆகிவிட்டது. தெருவில் இறங்கியதும், "இரவு எட்டு மணிக்கு வரவேற்பா?" என்று சிரிக்க முயற்சி செய்தாள் உமா.

"சாப்பிடத்தானே கூப்பிட்டான்?.... வா...." என்று நடந்தான் ராகவன்.

அவர்கள் கல்யாண வீட்டை அடைந்த போது வரவேற்பு முடிந்து மணமக்கள் எழுந்து உள்ளே போய் சோபா செட்டைக்கூட அகற்ற ஆரம்பித்தாகி விட்டது. ஆயினும் பந்தலிலேயே யாரிடமோ பேசிக் கொண்டிருந்த ரமணன் ராகவனைக் கண்டதும் ஆரவாரத்துடன் வரவேற்று, "வா, வா! எங்கே யாவது வராமல் இருந்து விடுவாயோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

விருந்துச் சாப்பாட்டை மூக்குமுட்ட உண்டு திக்குமுக்காடிப் போன ராகவன் ஒரு வழியாக எழுந்திருந்தான். அவனைத் தவிர இன்னும் கல்லூரி நண்பர்கள் இரண்டொருவர் வந்திருந்தனர். எல்லோரிடமும் பேசி முடித்து விட்டு வீட்டுக்குக் கிளம்பியவன் ரமணனிடம் சொல்லிக் கொள்வதற்காக அவனைத் தேடினான். மாப்பிள்ளை கண்ணில் படவேயில்லை. மேலே இருப்பதாக யாரோ சொல்லவே ராகவனும் உமாவும் மாடியில் மாப்பிள்ளை வீட்டினர் தங்கியிருந்த அறைகள் ஒவ்வொன்றாகத் தேடிக் கொண்டு போனார்கள்.

மாடியில் சற்றுப் பின்புறமாகத் தனியாக அமைந்திருந்த அறையினுள் நாலைந்து பேர்கள் இருந்தார்கள். ரமணன் இருக்கிறானா என்று அறையினுள் எட்டிப் பார்த்த ராகவன் அந்த ஒரு கணத்தில் அசந்துபோனான். அந்த மாதிரிக் காட்சிகளை அவன் பார்த்ததே இல்லை. கட்டில் என்றால் தந்தக் கட்டில்! மெத்தை என்றால் பளபளவென்று தங்க நிறத்தில் மெத்தை....! கட்டிலே அந்த அறையில்



உங்களைப் போன்ற உற்சாகம் மிக்கவர்களின்
முதல் தேர்வாக பிஎஸ்ஏ இருப்பது இயல்புதான்.

பிஎஸ்ஏ எழில் மிக்க சைக்கிள். இலேசானது
ஆயினும் வலுவுள்ளது எளிதாக
ஓட்டுவதற்கேற்ற வாகவும்
அமைப்பும் கொண்டது.

பிஎஸ்ஏயில் பல இடங்களுக்கும்
குஷியாகச் செல்லுங்கள்.

உலகில் இப் பகுதியில் சிறந்த சைக்கிள்
தயாரிப்பாளர்களால் பிஎஸ்ஏ அதன்
புகழ் பெற்ற உயர் தரத்திற்கேற்ப
தயாரிக்கப்படுகிறது.

BSA®

பிஎஸ்ஏ மிகச் சிறந்த சைக்கிள்

® பிஎஸ்ஏ சைக்கிள்ஸ் லிமிடெட் யு.கே. அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்
இந்தியாவில் தயாரிப்போர் : டீஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ்-53
உரிமையாளர்கள் : டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்-1
பதிவு பெற்ற உபயோகிப்போர்

பாதிப் பகுதியை அடைத்துக் கொண்டிருந்தது. கட்டிலின் எதிரில் மேஜை. அதில் பெரிய வெள்ளிக் கூஜா, பழத் தட்டுகள், பட்சணத் தட்டுகள், கட்டிலைச் சுற்றி மேலே யெல்லாம் மல்லிகை மாலைகள்.... ஊதுவத்தி வாசனையும், சென்ட் வாசனையும் மல்லிகைப் பூ வாசனையும்.....

சினிமாக்களில் வரும் முதல் இரவுக் காட்சிகளில் எத்தனையோ முறை இந்த மாதிரிக் காட்சி அமைப்புக்களை அவன் பார்த்ததுண்டு. ஆனால் செயற்கைப் பூக்களும், நடிகர்களும் சூழ்ந்து, வெள்ளித் திரையில் தெரியும் அந்தக் கறுப்புக் கோலங்கள் அவன் மனத்தில் எவ்விதச் சலனத்தையும் எழுப்பியதில்லை. ஆனால் இப்போது இங்கே அவன் கண்ட காட்சி.....

அவன் பின்னே வந்த உமாவும் அதைப் பார்த்தாள். ஒரு பெண்ணுன அவளுக்கு ராகவனைவிட எண்ண ஓட்டங்கள் பறந்தன. ராகவன் உமாவைப் பார்த்துச் சிரிக்க முயற்சி செய்தான். ஆனால் இதயத்தின் அடியில் ஏதோ 'சுரீர்' என்ற உணர்வு ஏற்பட அவன் சிரிப்பு மேலே சரியாக எழும்பவில்லை. ஓரளவு ஏமாற்றமும் வெறுப்பும் சேர்ந்ததாக அவன் முகம் மாறியது.

ரமணனை அங்கு காணமற் போகவே, அந்த இடத்தைத் தாண்டிப் பின்கட்டு வழியாகக் கீழே இறங்கினான். மாடிப் படியில் உமாவையும் அவனையும் தவிர வேறு யாரும் இல்லை.

''அப்பா....! என்ன ஏற்பாடு... என்ன ஏற்பாடு!'' என்று தன்னை மறந்து சொன்னுள் உமா.

''ஆமாம், உன் வீட்டைப் போல் எல்லாரும் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டாயோ....?'' என்று உமாவின் இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சினான் அவன். உமா தலை குனிந்தாள். இருவருக்கும் அவர்கள் முதல் இரவு நினைவுக்கு வந்தது. வடபழனியில் கல்யாணத்துக்கு வந்த எல்லோரையும் அனுப்பிவிட்டு உமாவின் அண்ணு அவர்களை வழியனுப்ப டாக்ஸியில் ஏறி இருவரும் அவர்களுக்காகப் பார்த்திருந்த அந்த வீட்டுக்கு வந்து இறங்கினார்கள். அன்று ஆரம்பித்த இல்லற அனுபவம் அப்போது ஒரு புதுமையாகவும் இன்பமாகவும் தோன்றினாலும், அவை அனைத்தும் இப்போது மறைந்து போய், அவர்களுடைய அந்த அநுபவம் ஏதோ லாட்ஜ் ஒன்றில் அறை எடுத்துக் கொண்டு தகாத உறவை நோக்கி விழையும் இருவருடையதாகவே இன்று அவனுக்குத் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் ராகவன் படி இறங்கினான்.

மாடிப்படி முடிந்த இடத்தில் பெண் வீட்டாரின் இடம் இருந்தது. அங்கே தெரிந்த ஓர் அறையில் கூட்டம் இருந்தது. பெண்கள் கூட்டம். அங்கும் விடாமல் ராகவன் எட்டிப் பார்த்தான். பார்த்த மறு கணம் அவன் தலையைத் திருப்பிக் கொண்டான். பெண்கள் நிறைந்த பகுதியில் ஏதோ பார்க்கக் கூடாததைப் பார்த்து விட்டதைப் போல் சட்டென்று அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டதைக் கவனித்த உமாவும் எட்டிப் பார்த்தாள். மறுகணம் அவள் பார்வையும் அந்த இடத்தை விட்டு அகன்றது. உள்ளே இருந்தது கல்யாணப் பெண். கல்யாண வீட்டுக்கு வந்தும் இப்போது தான் அவர்கள் இருவரும் முதல் தடவையாகக் கல்யாணப் பெண்ணைப் பார்த்தார்கள். ஒரு பெண் கறுப்பாக இருக்கலாம். அதில் அழகின்மை இல்லை. பற்களுமா அப்படி இருக்க வேண்டும்? பற்கள் என்று மாத்திரம் இல்லை!... அது என்ன குறை? அந்த முகம்.... கட்டை குட்டையான அந்த உருவம்.... போட்டுக் கொண்டிருந்த நகைகளுக்கும் மாலைக்கும் சம்பந்தமே இல்லாத அந்த உருவம்....

ரமணன் கண்ணில் பட்டதும் ராகவன் அவனிடம் சொல்லிக் கொண்டு பந்தலைவிட்டு வெளியேறினான்.

அந்த ஐந்து நிமிஷ நேரத்தில் கடந்த இருபத்து நாலு மணி நேரமாக அவன் அநுபவித்த அத்தனை துன்பங்களும் மறைவாக அடித்துக் கொண்டு போக, அருவியில் குளித்து எழுந்த தன்னிறைவுடன், என்றுமில்லாத அன்புடன் அப்போதுதான் அவளை முதன் முதலாகப் பார்ப்பவன் போல் உமாவை விழிகொண்டு மட்டும் பார்த்தான் அவன். உமாவுக்கா ராகவனின் மனம் தெரியாது? அவர்கள் மௌனமாகவே நடந்தனர். அந்தத் தெரு முனை தாண்டியதும் அடுத்த தெருவில் மர நிழலில் இருட்டாக இருந்தது. இரவு ஒன்பதரை மணிக்கு மேல் ஆகிவிட்டதால் தெருவில் நடமாட்டமே இல்லை. அந்த மரங்களின் இருட்டில் ராகவன் உமாவை நெருங்கி அணைத்தான். உலகின் இன்பம் அவ்வளவும் தனது உடைமையாக அவனுக்குத் தோன்றியது. அந்த ஆனந்தத்தை அவ்வளவு பளிச்சென்று எடுத்துக் காட்டவே, அந்நேரம் வரை அவன் உள்ளத்தை உழப்பிக் கொண்டிருந்தாளோ, என்னவோ ?

பேரீச்சம்பழமும் - புளியம்பழமும்



இந்திய நாட்டில் உள்ள புளியம் பழத்தைக் கண்டதும் அராபியர்களுக்கு வியப்பு ஏற்பட்டது. அவர்கள் நாட்டுப் பேரீச்சம் பழம் போல் அது காட்சி அளித்ததால் அதை 'தம்ருல் ஹிந்த்' (இந்திய நாட்டுப் பேரீச்சம் பழம்) என வழங்கினர். அதுவே பின்னர் ஆங்கிலத்தில் 'டாமரிண்ட்'- எனத் திரிந்தது.

ஆதாரம் : இலக்கியம் சுந்த தமிழ்
தகவல் : கலைவை ஜகந்நீசன்



நாஸிருதீன் குட்டிக் கதைகள்

தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

[நாஸிருதீன் என்ற கோமாளியைப் பற்றிய இந்தக் குட்டிக் கதைகள், பழங்காலத்துச் சீன நாடோடிக் கதைகளாகும்.]

எது நல்லது?

"சந்திரன் நல்லதா? சூரியன் நல்லதா?" என்று நாஸிருதீனிடம் ஒரு நண்பன் கேட்டான்.

"சந்திரன்தான்" என்று கூறினான் நாஸிருதீன்.


"ஏன்?"



"சூரியன் பகல் நேரத்திலல்லவா வருகிறது? பகலில் அது வந்தால் என்ன? வராவிட்டால் என்ன? ராத்திரியில் எங்கு பார்த்தாலும் ஒரே இருளாக இருக்கும். ஆகவே தான் ராத்திரியில் வரும் சந்திரனே நல்லது."

அவனிடம் பலிக்குமா?

சில குடிகாரப் பையன்கள் நாஸிருதீனைப் பைத்தியக்காரனாக்கி வேடிக்கை பார்க்க வேண்டும் என்று நினைத்து அவனிடம் "அதோ மரத்தின் மேல் பறவைகள் முட்டையிட்டிருக்கின்றன. தயவுசெய்து



அவற்றை எடுத்துத் தரமாட்டாயா? எங்களால் மரத்தில் ஏறமுடியவில்லை" என்றார்கள்.

நாஸிருதீனும் மரத்தில் ஏறத் தயாரானான். ஆனால் கீழே செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு மரத்தில் ஏறினால், அந்தப் பையன்கள் செருப்பை அடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்பதை அவன் நன்கு அறிவான். அதனால், இரண்டு செருப்புக்களையும் தன் அரைஞாண் கயிற்றில் கட்டிக் கொண்டு மரத்தில் ஏறப் போனான்.


"செருப்பைச் சும்மா கீழே வைத்துவிட்டுப் போ. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றார்கள் பையன்கள்.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு வீட்டில் கொஞ்சம் அவசர வேலை இருக்கிறது. உங்களுக்கு முட்டைகளை எடுத்துக் கொடுத்து விட்டு, மரத்துக்கு மரம் தாவி அப்படியே வீட்டுக்குப் போய்விடலாம் என்று நினைக்கிறேன்" என்றான் நாஸிருதீன்.

ஆட்டுப் பிரச்னை

ஒரு சமயம் நாஸிருதீன் ஓர் ஆட்டைத் திருடிக் கொண்டு போய் வெட்டிச் சாப்பிட்டு விட்டான்.

இதைக் கேள்விப்பட்ட ஒரு நண்பன் அவனிடம் போய், "இந்தப் பாவ காரியத்தைச் செய்யலாமா? நியாயத் தீர்ப்பு நாளில்



கடவுளுக்கு நீ என்ன பதில் கூறுவாய்?" என்று கேட்டான்.


"நான் ஆட்டைத் திருடிச் சாப்பிடவில்லை என்று சொல்லுவேன்" என்றான் நாஸிருதீன்.

"இதெல்லாம் [illegible] ஆண்டவனிடம் போய் சொல்லித் தப்பிக்க முடியுமா? ஆடே வெளியே வந்து சாட்சி சொன்னால் நீ என்ன செய்வாய்?"

"வயிற்றுக்குள்ளே போய் ஜீரணமான ஆடு வெளியே வருமா? வெளியே வந்தால் ரொம்ப நல்லதாகப் போயிற்று. உடனே அதைப் பிடித்துக் கொண்டு போய் ஆட்டுக்காரனிடம் ஒப்படைத்து விடுவேன். பிரச்னையும் அதோடு தீர்ந்து விடும்" என்றான் நாஸிருதீன்!

அன்பின் நினைவு

நாஸிருதீனிடத்தில் அழகான ஒரு தங்க மோதிரம் இருந்தது. அதை ஏமாற்றிப் பறித்துக் கொள்ள நினைத்த ஒரு வியாபாரி, ஒரு நாள் அவனிடம் வந்து, ''நான் அந்நிய நாட்டுக்குப் போகிறேன். திரும்பி வர அதிக காலமாகும். அவ்வளவு காலமும் உன்னைப் பார்க்காமல் இருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் உன் தங்க மோதிரத்தை எனக்குக் கொடு. அதைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு உன் ஞாபகம் வரும். உன்னை நேரில் பார்ப்பதுபோல் இருக்கும்'' என்று தந்திரமாகச் சொன்னான்.



நாஸிருதீன் அவ்வளவு சுலபத்தில் ஏமாந்து விடுவானா? தன் மோதிரத்தை இழப்பானா ?

வியாபாரியைப் பார்த்து அவன் பின்வருமாறு சொன்னான்: ''உன்னுடைய அன்பு என்னைப் பரவசப்படுத்துகிறது. அதிக காலம் உன்னைப் பார்க்காமல் இருப்பது எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். அதனால் இந்த மோதிரம் என்னிடமே இருக்கட்டும். இதைப் பார்க்கும் போதெல்லாம், நீ இதைக் கேட்டதும் நான் கொடுக்காமல் இருந்ததும் எனக்கு ஞாபகம் வரும். அப்போது எனக்கு உன்னை நேரில் பார்ப்பதுபோல் இருக்கும். என் மனக்கும் அது ஆறுதலாக இருக்கும்.''

பசு விற்ற கதை

நாஸிருதீன் வீட்டில் ஒரு பசு இருந்தது. அது மிகவும் முரட்டு சுபாவம் உடையது. அத்துடன் அது பலமாகவும் இருந்தது. ஆகவே, அதை விற்றுவிடுவதற்காகச் சந்தைக்கு ஓட்டிச் சென்றான் நாஸிருதீன்.

சந்தையில் நின்று கொண்டு, ''இந்தப் பசுவைப் பாருங்கள்; கிட்ட வந்தால் இது நிச்சயமாக முட்டும். ஒரு சொட்டுப் பால் கூட இதிலிருந்து கறக்க முடியாது'' என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தான். இந்த மாதிரி சொன்னால் பசுவை யார் விலைக்கு வாங்குவார்கள்?

நாஸிருதீனின் பைத்தியக்காரத்தனத்தைப் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாட்டு வியாபாரி, ''இந்தப் பசுவை நான் விற்று உனக்குப் பணத்தைத் தருகிறேன்'' என்றான்.

''ரொம்ப நல்ல காரியம்! அரிய உதவி ! உங்கள் பிள்ளை குட்டிகள் நன்றாக இருப்பார்கள்! பசுவை விற்றுக் கொடுங்கள் '' என்று சொல்லிவிட்டு, மாட்டு வியாபாரியிடம் பசுவை ஒப்படைத்தான் நாஸிருதீன்.

மாட்டு வியாபாரி பின்வருமாறு சத்தம் போட்டுச் சொன்னான்:

''இந்தப் பசுவைப் பாருங்கள். இது பரம சாது. அது மட்டுமல்ல, தினமும் நாலு படி கறக்கும்.''

இதைக் கேட்ட நாஸிருதீன், மாட்டு வியாபாரியிடம் வந்து, பசுவின் கழுத்துக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, ''பசுவை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள். நீங்கள் சொல்வதுபோல் இது பரம சாதுவாகவும், தினமும் நாலுபடி கறக்கக்கூடியதாகவும் இருந்தால் இதை நான் எதற்காக விற்க வேண்டும் ?'' என்று கேட்டான்.



இயந்திர காஷியர்

ஆதாரம்: ''பாட்ரியட்''

தகவல்: வி. சம்பத்குமார்

ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த ஒரு 'பாங்கு' இயந்திர 'காஷியர்'களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

இந்த 'பாங்கி'ல் கணக்கு உள்ளவர்கள், தங்களது பாஸ் புத்தகம் போன்ற அட்டையை இந்த இயந்திரத்துக்குள் செலுத்தி விட்டால் போதும். அவருக்குக் கணக்கில் பணமிருக்கிறதா இல்லையா என்பதை இவ்வியந்திரமே சோதித்து அவர் கோரிய தொகையைக் கொடுத்து விடுகிறது ! வாடிக்கைக்காரர்கள் காலை முதல் இரவு வரை எப்போது வேண்டுமானாலும், இவ்வியந்திரத்திடமிருந்து பணம் பெறலாம்.

வட்ட மேஜை

- தமிழ்க் கலைக் காட்சி
- மொழிக் கொள்கை என்ன?
- விமர்சனம் வீழ்க
- விமர்சனம் வாழ்க
- நீரின் கீழ்க் கோலம்

இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு ஜனவரியில் நடைபெறுவதையொட்டிக் கலைக் காட்சியொன்றும் மாநாட்டின் சார்பில் அமைக்கப் பெறும். அக்காட்சியில் தமிழர் மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு போன்றவற்றை விளக்கும் அரிய நூல்களும் இடம் பெறும்.

அக்காட்சியில் தங்கள் தங்கள் நூல்களும் இடம்பெற வேண்டும் என்று விரும்பும் பதிப்பகத்தார்களும், எழுத்தாளர்களும் கீழேயுள்ள முகவரிக்கு எழுத வேண்டுகிறோம். மேலும் தமிழில் வெளிவந்து நின்றுபோன பத்திரிகைகளும் இக்காட்சியில் வைக்கப் பெறும். கிடைத்தற்கரிய பழந் தமிழ் நூல்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவையும் காட்சியில் இடம் பெறும். அவற்றை வைத்திருக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தகவல் தரவும்.

செயலாளர், கலைக்காட்சிக் குழு, 60–10, எட்வர்ட் எலியட்ஸ் ரோட், சென்னை–4.

சா. கணேசன் (தலைவர்)

'நமது கல்வி முறையில் ஆங்கிலத்தின் இடம்'' என்ற பொருள் பற்றிச் சென்ற 4, 5 தேதிகளில் நடைபெற்ற மாநாட்டினைப் பற்றித் தங்களது 19–11–67 இதழில் வெளியான 'ஆங்கிலமே அறிவுப் பாதை' என்ற கட்டுரையில் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களது தமிழக அரசுச் சார்பான அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

''....நவீன கால அறிவை வளர்ப்பதற்கு உகந்த முறையில் பிராந்திய மொழிகளை வளப்படுத்தி, ஆங்கில மொழியில் நடைபெறும் போதனைக்கு உதவக்கூடிய வகையில் வளர்க்க வேண்டும் என்று மகாநாடு கோருகிறது'' என்கிற மகாநாட்டுத் தீர்மானத்துக்கும், ''போதனை மொழித் தகுதியை ஆங்கிலத்துக்குப் பதிலாகப் பெறக்கூடியவிதத்தில், விரைவில் பிராந்திய மொழியை வளர்க்க வேண்டும்'' என்ற திரு நெடுஞ்செழியனது கூற்றுக்கும் ஆழ்ந்த கருத்து வேற்றுமை இருப்பதாகத் தோன்றுகிறதே !

தமிழக அரசின், ''போதனை மொழிக் கொள்கை''க்கான விளக்கத்தினைக் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியனிடமிருந்து தமிழ்கூறும் நல்லுலகம் திட்டவட்டமாகப் பெற வேண்டியது அவசியம்.

சென்னை–17 தி. சௌ. சந்தானம்

கல்கி 5–11–67 இதழ் வட்டமேஜையில் 'உதய சூரியன்' என்ற வடமொழிச் சொற்களைத் தி. மு. க. ஏற்றிருப்பதிலிருந்தே இக் கட்சியினருக்கு அம்மொழியில் வெறுப்புக் கிடையாது என்று ஸ்ரீஹரி கூறியுள்ளார். அப்படியாயின் இக் கட்சியினர் ''ஆகாசவாணி'' என்றதை வானொலி என மாற்றியது ஏன்?

ராணிப்பேட்டை கே. நீ. கிருஷ்ணமூர்த்தி

எப்பொழுதும் நடுநிலைமையில் இருந்து விமரிசிக்கும் கல்கி 'விவசாயி' படத்தில் வரும் ஒரே ஒரு விரசமான காட்சியைப் பெரிதுபடுத்தி எழுதியிருக்கிறது. இந்தப் படத்துக்கு முந்தி வெளிவந்த பல விரசமான படங்களைப் பாராட்டி இதே கல்கி விமர்சனம் எழுதியது. ''விவசாயி'' படத்தில் காதுக்கினிய, கருத்துள்ள பாடல்களும், கைபொளி பெறும் காட்சி அமைப்புக்களும், பண்பட்ட நடிப்பும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தாங்கள் குறிப்பிடாததற்கு மிகவும் வருந்துகிறேன்.

சென்னை–5 பி. ஆர். ராஜசேகரன்

கல்கி 19–11–67 இதழில் 'விவசாயி' படத்தின் விமரிசனம் கண்டேன். கதையைப் பற்றிக் கவலைப்படாத தயாரிப்பாளர்களுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும். மானமுள்ள தமிழ்ப் பெண் நிச்சயமாக இந்தப் படத்தைப் பார்க்க மாட்டாள்.

சென்னை–7 கே. பி. மணி

திரு சோ அவர்களின் நகைச்சுவை நிறைந்த ''யாரோ இவர் யாரோ?'' என்ற தொடர்கதையைத் தொடர்ந்து படித்து மகிழ்ச்சியுறும் வாசகர்களில் நானும் ஒருவன். வாழ்க்கைத் தத்துவங்களை நகைச்சுவையோடு மிக அழகாகத் தம் கதையில் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். மனிதன் ஏன் வெட்கப்பட வேண்டும் என்பதற்கு அவர் கொடுத்துள்ள விளக்கம் அனைவராலும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

இராமநாதபுரம் ஜனார்த்தனன்

நவம்பர் 26ந் தேதி கல்கியில் ''நீர்க் கோலம்'' என்ற கட்டுரையைப் படித்தேன். தண்ணீரின் மீது கோலம் போடுவதை அது குறிக்கிறது. கோலத்தின் மீது தண்ணீர் ஊற்றியும் அக்கோலம் அழியாவண்ணம் வரையும் வகை ஒன்றுண்டு. ஒரு தாம்பாளத்தைத் துடைத்து, அதன்மீது ''மிர்ஸ்'' தடவி, அதன்மீது வர்ணப் பொடிகளால் கோலமிட்டுச் சிறிது நேரம் வைத்து விட்டு அதன்மீது மெதுவாக நீரைவிட்டால் கோலம் அழியாமல் அழகாகத் திகழும். முதலில் கொஞ்சம் வர்ணம் நீரில் மிதக்கும். ஆனால் அதைத் துணியால் ஒற்றி எடுத்து விடலாம். இது பல நாட்கள் இருக்கும். வர்ணம் சிறிது மங்கலாயினும் அழகாகத் திகழும்.

சென்னை – 45 ரேவதி ஸ்ரீநிவாஸன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


பின்லே
பெண்மையின் உருவம். பின்லே
யின் லான். நலுங்கவே நலுங்
காது. கேம்ப்ரிக். சாய்ந்து
இளைப்பாறுவோருக்கு. நேய
மான மென்னயம். ஃபுல்
வாயில்கள். மற்றும் இதர
வாயில்கள். எல்லாமே
பிரமிப்பூட்டும் பிரின்
டுகள். அழகான
ஆடைகளுக்கு
பின்லே.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி